38

குமரிமலர்

பதிப்பாசிரியர்

ஏ. கே. செட்டியார்

பிருதிவி இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி லிமிடெட்

120, அரமனைக்காரத் தெரு :: மதராஸ்

தபால் பெட்டி : 76 டெலிபோன் : 3250

டைரக்டர்கள் :

ஸர் N. கோபாலசாமி அய்யங்கார், C.S.I., C.I.E. (சேர்மன்)

ஸர் R. K. ஷண்முகம் செட்டி, K. C. I. E.

Mr. A. V. தாமஸ்

,, V. சேஷசாயி

,, மொஹமத்ஆலி அப்துல்ஆலி டேகம் வாலா

,, முல்ராஜ் கர்ஸன்தாஸ்

,, மஹாவிர்பிரஸாத் R. மொரர்கா

,, S. பார்த்தசாரதி, (மானேஜிங் டைரக்டர்)

●

ஆயுள் நெருப்பு இன்ஷ்யூரன்ஸ் திட்டங்கள் ஏற்றுக் கொள்ளப்படுகின்றன.

●

நல்ல அனுபவமுள்ளவர்களிடமிருந்து ஏஜன்ஸிகள் விஷயமாக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

COVER DESIGNED & PRINTED BY P. A. S. PRESS, POST BOX 349, MOUNT ROAD, MADRAS

குமரி மலர்

மாதம் ஒரு புத்தகம்

பதிப்பாசிரியர் :

ஏ. கே. செட்டியார்

கதீட்ரல் ரோடு போஸ்ட்

சென்னை

1943

உள்ளுறை

பக்கம்

1.	வ. வே. சு. ஐயர் - ராய. சொ. ...	3
2.	கட்டுக்கடங்காத காளை - 'சுரபி' ...	11
3.	சடைக்கத் தேவன் - மு. அருணசலம் ...	14
4.	நாட்டுக் கதைகள் - எஸ். வி. வி. ...	31
5.	பணவீக்கமும் பட்டினிப் பெருக்கும் - ஏ. என். சிவராமன் ...	41
6.	சீனத்துக் கவிதை - ம. பெரியசாமி ...	48
7.	வறுமைக்கு ஒரு பெருமையா ? - தியாகராஜன் ...	54
8.	நிருபர்கள் - ரா. நாராயண ஐயங்கார் ...	65
9.	சத்திய சோதனை - 'காவி' ...	73
10.	பசி - தி. ஐ. ர. ...	84
11.	கப்பல் பிரயாணம் - ஏ. கே. செட்டியார் ...	90

எல்லா உரிமைகளும்
பதிப்பாசிரியருக்கே

சாது அச்சுக்கூடம்,
இராயப்பேட்டை, சென்னை

வ. வே. சு. ஐயர்

ராய. சொ.

வ. வே. சு. ஐயர் யார் என்பதைத் தமிழ்நாட்டார் அதற்குள்ளாகவா மறந்திருப்பர்? இல்லை. மறந்திருக்கமாட்டார். "நன்றி மறப்பது நன்றன்று" என்பது புலவர் தமிழ் மறையல்லவா? வ. வே. சு. ஐயர் தமிழ் நாட்டிற்குச் செய்த நன்றி பெரிது. அது என்றும் மறக்கத்தக்கதன்று. அவர் நன்று அல்லது ஏதும் செய்திருந்தாரானல் அதை அன்றே மறந்திருத்தல்வேண்டும். "நன்று அல்லது அன்றே மறப்பது நன்று" என்று தமிழர் சட்டம் சாற்றுகின்றது.

முற்றும் குறைவிலா நிறைவாக இருத்தல்வேண்டும் என எவரையும் எதிர்பார்த்தல் ஆகாது. அது நடவாத ஒன்று. குறைவிலா நிறைவும் கோதிலா அமுதும் கடவுள் ஒன்று தான். அதுவும் உருப்பெருமையாலேயே அப்பெருமையை இன்னும் இழவாமல் இருக்கிறது. மனிதர்களுள் குணத்தையும் குற்றத்தையும் சரியான தராசில் வைத்துச் சரியாக நிறுத்துச் சரியான கண்கொண்டு பார்த்துச் சரியாக முடிவு கட்டிக் குணத்தால் மிக்காரை மேலோர் எனக் கொள்ளல் வேண்டும்.

> "குணம்நாடிக் குற்றமும் நாடி அவற்றுள்
> மிகைநாடி மிக்க கொளல்"

முறை. அம்முறையில் தமிழ்நாட்டில் நாம் அறிய வாழ்ந்த பெரியார்களுள்ளே, ஒரு கை விரல்களுள் அடங்கக்கூடியவ

ருள் ஒருவர் வ. வே. சு. ஐயர். பெரியார் என்ற உயர்ந்த சொல்லை உச்சரிக்கும்போது ஒரு நடுக்கம் ஏற்படுகிறது. அச்சொல் இன்றையத் தமிழ்நாட்டில் பெருமை இழந்து நிற்கிறது. இன்று, உரிய பொருள்களின்மேல் அச்சொல் நிற்கவில்லை. குற்றமே குணமாகக்கொண்டவர்கூடச் சில பல காரணங்களால் அச்சொல்லால் அலங்கரிக்கப்பெறுவதைக் காணும்போது, உண்மைப் பெரியாரைப் பெரியார் என்று கூற அச்சமாகத்தான் இருக்கிறது. ஆயினும், என் செய்வது! ஒவ்வொருவரும் அறிவுகொண்டு பகுத்தறிவதைத் தவிர வேறு வழியில்லை.

> " எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
> மெய்ப்பொருள் காண்பது அறிவு."

பெரியார் யார்? என்ற கேள்விக்குத் தமிழ்நாட்டார் தவப்பேருக வந்த வள்ளுவர், "செயற்கரிய செய்வர் பெரியார்" என்ருர் பிறர் செய்வதற்கு அருமையான காரியத்தை யார் செய்கிருரோ அவர் பெரியார். நமது வ. வே. சு. ஐயர் உலகத்தில் பலரும் செய்யமுடியாத உயர்ந்த வினைகள் செய்து பெரியாரானவர். துணிவு என்ற பொருளுக்கு உறைவிடம் வ. வே. சு. ஐயர். 'திலகர்' என்ற சொல்லுக்கு 'சுதந்தரம்' என்று அகராதியில் பொருள் எழுதவேண்டும் என்று அன்பர் சுப்பிரமணிய சிவம் சொல்லுவார். வ. வே. சு. ஐயர் என்ற சொல்லுக்கு 'அஞ்சாமை' எனப் பொருள் எழுதுதல் பொருந்தும்.

வ. வே. சு. ஐயர் பாரிஸ்டர்ப் படிப்பின் பொருட்டு லண்டனில் வாழ்ந்து வந்த காலத்தில் நிகழ்த்திய துணிவு கொண்ட வீரச்செயல் பலப்பல. ஐயர் லண்டனிலிருந்து இந்திய நாட்டின் எல்லையை மிதித்த உண்மைக் கதை, அதி அற்புதமாகக் கட்டப்பட்ட நாவற் கதைகளைவிட ரசமானது. அவற்றை அன்று உடன் பழகி அறியாத என் போன்ருர்

விரித்தெழுதுவதைவிட, அன்றுகூட லண்டனில் இந்தியா மாளிகையிலிருந்து கலந்து கொண்ட டாக்டர் ராஜன் போன்ருரே அங்கிகழ்ச்சிகளை விரிக்கத் தகுதியுடையார். எனவே நான் அவற்றில் புகவில்லை. நான் நேரில் கண்ட வ. வே. சு. ஐயரைப்பற்றிக் கூறுகின்றேன்.

வரகனேரி என்பது அவர் ஊர். அது திருச்சியைச் சேர்ந்த ஒரு பகுதி. அவர் தகப்பனுர் பெயர் வேங்கடராம ஐயர். அவர் பெயர் சுப்பிரமணிய ஐயர்.

ஐயர் என்ற பட்டத்தை அவர் விடாமல் சிறப்பாக வைத்துக் கொண்டமையால், சாதி வித்தியாசம் இருத்தல் வேண்டும் என்ற கொள்கையுடையவர் அவர் என எண்ணி விடாதீர்கள். அதோடு 'குருகுல'ச் சண்டையையும் சேர்த்துப் பார்த்து, அதற்கு ஒரு வால் வைத்துவிட வேண்டாம். தொடக்கத்தில் ஏதோ சுருக்கமாக இருக்கிறது என எண்ணி அவ்வாறு வைத்துக் கொண்டிருக்கலாம். பின்னல் அது பழக்கத்திற்கு வந்துவிட்டபடியால் மாற்ருமல் விட்டிருக்கலாம்.

வ. வே. சு. ஐயர் கம்பீரமான தோற்றமுடையவர்; மார்பை எட்டிப் பார்க்கும் அழகான நல்ல கறுப்புத் தாடி; அன்பு ஒழுகும் கண்கள் ; மூலை செருகிக் கட்டப்பட்ட முரட்டுக் கதர்; மேலே உடம்பு முழுதும் போர்த்தப்பட்ட ஓர் ஆடை; நெற்றியில் பிறைச் சந்தனக்குறி ; குளிர்ந்த பார்வை ; உண்மை முனிவரின் தோற்றம்; நிமிர்ந்த நடை ; அவர் நடக்கும் நடை ஒரு தனி அழகு கொண்டது. நடப்பதற்கும் நடையென்று பெயர் ; ஒழுக்கத்திற்கும் தமிழில் நடையென்று பெயர். இரண்டிலும் சாலச் சிறந்தவர் வ. வே. சு. ஐயர்.

வ. வே. சு. ஐயர் லண்டனிலிருந்து தப்பிப் பிழைத்து ஒரு வாறுக இந்தியா சேர்ந்ததும் புதுச்சேரி வாசியாஞர். அந் நாளில் மாறுவேடப் போட்டியில் தேர்ச்சிபெற்ற தேச பக்தர் பலர்க்கு வாழ்வு அளித்த 'பாண்டிச்சேரி', வ. வே. சு. ஐயருக்கும் அபயம் அளித்தது. பாரதி பாக்களில் பல பாண்டிச்சேரியில் தோன்றியமைபோலவே ஐயர் வாயிலாக வும் பாண்டிச்சேரியினின்றும் பல நூல்கள் தோன்றின. 'புக்கர் வாஷிங்டன்', 'மங்கையர்க்கரசியின் காதல்' முத லிய புத்தகங்கள் அங்கிருந்தே வெளியாயின.

அங்கு 'கம்ப நிலேயம்' என்ற ஒரு பதிப்பகத்தை உண்டாக்கி அதன்மூலமாகப் பல நூல் வெளியிட்டார் வ. வே. சு. ஐயர். கம்பரிடம் வ. வே. சு. ஐயருக்கு மிக உயர்ந்த மதிப்பு. கம்பருக்கு இணையான மகாகவி உலகில் எங்குமே அரியர் என்பதைக் காரணங்களுடன் விளக்கி எழுதியிருக்கின்ருர் ஐயர். கம்பராமாயணம் பாலகாண்டத்தைச் சுருக்கி அச் சிட்டிருக்கின்ருர் வ. வே. சு. ஐயர். அதில் நல்ல ஆராய்ச் சிக் களஞ்சியமாக விளங்குகின்றது அவரின் விரிந்த முக வுரை. நடுவு நிலேமை சிறிதும் பிறழாமல் எழுதப்பட்ட உய ரிய நூன்முகம் அது. கருத்து வேறுபாடு இருக்கலாம். அவர் கண்ட உண்மையையே ஐயர் கூறுகிருர் என்பதை மறுக்கமுடியாது.

வ. வே. சு. ஐயர் பல மொழியும் வல்லவர். மேல் நாட்டு மொழிகளில் கிரீக், லத்தீன், பிரஞ்சு, ஆங்கிலம் முதலி யன அறிவார். தமிழில் நல்ல பாண்டித்தியம். வடமொழி யும் நன்கு தெரியும். எனவே அவர் பெரும்பாலும் உல கத்து ஆசிரியர் எல்லோரையும் பற்றிப் பேச உரிமையுடை யார். திருக்குறளே ஐயர் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்திருக் கின்ருர். ஹோமரின் வீர காவியத்தை ஐயர் மூலபாஷை யில் கம்பீரமாக உரக்கப் படிப்பதைக் கேட்கும் எவரும்

ஓர் உணர்ச்சிகொண்டு துள்ளி எழுந்துவிடுவர் ; கேட்போர்க்குப் பாஷை தெரியவேண்டும் என்பதுகூட இல்லை.

பாண்டிச்சேரிவிட்டுச் சென்னைக்கு வந்து 'தேசபக்தன்' பத்திரிகைக்குச் சிலகாலம் ஆசிரியராக இருந்தார். நாளடைவில் தடை தானாக நீங்கியது. பாண்டிச்சேரிச் சிறை வாழ்வைக் கடந்தார். பரந்த இந்தியாவில் கால்வைத்தார். அந்த நாளில் பத்திரிகை உலகிற்கும் பத்திரிகைத் தமிழுக்கும் புத்துயிர்கொடுத்த 'தேசபக்தன்' ஆசிரிய பீடம் காலியாக இருந்தது. அதன் முதலாசிரியர் அன்பர் திரு. வி. க. விலகிய சமயம், அன்பர் ஐயர் அமர்ந்தார் அவ் அணையில். அதன் பயனாக ஐயருக்குச் சிறை வாழ்வு கிடைத்தது. 'தேசபக்த'னில் வெளிவந்த கட்டுரை ஐயருக்குச் சிறையை நல்கியது. 'தேசபக்தன்' பத்திரிகையைப் பற்றியிராவிட்டால் பிற்கால வாழ்வு, வ. வே. சு. ஐயருக்குச் சிறைசெல்லும் சந்தர்ப்பத்தை நல்கியிருக்காது. 'சிறைசென்ற தேசபக்தர்' என்ற முத்திரையை ஐயர் பெறத் துணைசெய்தது 'தேசபக்தன்' பத்திரிகை.

வ. வே. சு. ஐயர் சிறைவாழ்வு கடந்ததும் குருகுல முயற்சியில் தலைப்பட்டார். இந்தியாவிலுள்ள சிறந்த பல குருகுலங்களை நேரிற்சென்று கண்டு அவற்றின் நடைமுறைகளை நன்கு பயின்றுவந்தார். தண்பொருநை நதிக்கரையில் சேரமாதேவி என்ற திவ்யஸ்தலத்தில் குருகுலம் தோற்றுவிக்கப்பட்டது. குருகுல ஆசிரியராக அமர்ந்து வீரர்களை உண்டாக்கும் தனித்தகுதியில் ஐயர் நிகரற்றவர் என்பதில் ஐயம் இல்லை. ஆனால், ஐயரின் மேதை விளங்கமுடியாமல் போய்விட்டது. மாயை மறைத்துவிட்டது. ஐயரின் அறிவு ஒளியை மாய இருள் கவ்விவிட்டது. தேசத்தைக் கொல்லும் பாழான வகுப்புப்பிணி, வ. வே. சு. ஐயரையும் விரைவில் இவ் உலகத்தைவிட்டே பிரித்துவிட்டது.

வ. வே. சு. ஐயர் வகுப்பு உயர்வு தாழ்வு இருந்து தீரவேண்டும் என்ற கொள்கைகொண்டவரல்லர். அவர் எங்கும் சாப்பிடுவார். காரைக்குடியில் என் வீட்டில் சிதம்பரம் சகஜாநந்த சுவாமிகளோடு உடனிருந்து உண்டிருக்கிறார். குருகுலம் இருந்த இடமும் விதிவசத்தால் அமைந்த சீடர்களும் வ. வே. சு. ஐயரால் தமிழ்நாடு அடையவேண்டிய பெரும் பயனைத் தொலைத்துவிட்டனர்.

வ. வே. சு. ஐயரிடம் தமிழ்நாட்டார் பெருமதிப்பு வைத்தனர். அவர் கண்ட குருகுலத்திற்குத் தமிழர் பேராதரவு தந்தனர். ஏராளமான பொருளைத் தமிழர் வாரி வழங்கினர். குருகுலத்தில் சாதி பிரித்துவைத்துப் பிள்ளைகளுக்குச் சோறு போட்டதைக் கண்டனர். மனம் பதைத்தனர். அத் தகாத முறையைப் போக்க முயன்றனர். முடியவில்லை. போர் தொடுத்தனர். காந்தியடிகள் வரை இதில் தலையிடும் நிலை வந்தது. சென்னையில் காந்தியடிகள் முன்னிலையில் எஸ். சீனிவாச ஐயங்கார் இல்லத்தில் பலர் கூடி வாதித்தனர். முடிவு ஏதும் ஏற்படவில்லை.

துணிவே உருவாக ஒருகாலத்தில் இருந்த வ. வே. சு. ஐயர், பின்னாளில் சுற்றுச் சார்புக்குப் பெரிதும் அஞ்சிவிட்டார். துணிவுக்கே பொருளாக வரையலாம் என்ற நிலையில் இருந்த வ. வே. சு. ஐயர், தம்போன்றார்க்கு மிக்க சாதாரணமான ஒரு காரியத்தைச் செய்யப் பயந்துவிட்டார் என்பது வியப்பாகவில்லையா ? ஆம் ! உண்மை அதுதான் ! பிரித்துவைத்துச் சோறு போடுவதை அவர் விரும்பவில்லை. பிறருக்காகவே அவ்வாறு செய்தார். அதன் பயன் என்ன ? குருகுலம் பாழாகப் போய்விட்டது. அக்குருகுலத்தால், தமிழ்நாட்டிலேயே தலைசிறந்து விளங்கியிருக்கவேண்டிய வ. வே. சு. ஐயர் புகழ் மங்கிப்போய்விட்டது. குருகுலச் சண்டை நடந்தகாலத்தில் வ. வே. சு. ஐயர்

1925 பிப்ரவரி மாதம் 20-ஆம் தேதி பின்வருமாறு எனக்கு எழுதினர் :

> 'என்னையும் தற்பொழுது வேருகக் கருதியிருக்கிறீர்கள் ; தாங்களும் இவ்வாறு நினைத்தால் மற்றோர் என்ன நினைக்கமாட்டார் ?'

இதனால் அவர் என்மீது கொண்ட அன்பு வெளிப்படுகிறது. ஆயினும் என் செய்வது? கொள்கைக்காகச் சண்டை போட்டே தீரவேண்டியதாகிவிட்டது.

1924 ஆகஸ்ட் 12-இல் பல நண்பர்களுடன் சேரமாதேவி சென்று குருகுலத்தில் தங்கினேன். அன்று அதைப் பார்த்து நான் பட்ட ஆனந்தம் அதிக நாள் நிலைக்கவில்லை. நாங்கள் போன அன்று வ. வே. சு. ஐயருக்குத் தலையில் ஒரு காயம். அது அப்பொழுதுதான் ஏற்பட்டது. எதனால்? அவர் விளையாட்டுப் பிள்ளைபோல் குடுகுடுவென்று எல்லாம் செய்வார். ஏற்றுக்கேணியில் தண்ணீர் எடுத்தார். அந்த நீளக்கம்பு தலையைக் கிழித்து ரத்தத்தை வடித்துவிட்டது. அதைப் பொருட்படுத்துபவரல்லர் வ. வே. சு. ஐயர்.

இன்று பாண்டிச்சேரியிலிருந்து நூல்களை எழுதிக் குவித்துக் கொண்டிருக்கும் சுத்தானந்த பாரதியார், வ. வே. சு. ஐயரோடுகூடக் குருகுலத்தில் இருந்தவரே. 1924-ஆம் வருஷம் சுத்தானந்த பாரதியார், சேரமாதேவியிலிருந்து குருகுலப் பிள்ளைகளுடன் குற்ருலம், வந்து நான் இருந்த பங்களாவில் தங்கி, அப்பிள்ளைகளைக் கொண்டு ஒருநாள் அப்பர் சுவாமிகள் சரிதத்தை நடத்திக் காட்டியது இன்னும் நன்ருக நினைவில் இருக்கிறது.

சண்டை தொடங்கிய சில மாதங்களில் 1925 ஜுன் 3-ஆம் தேதி வ. வே. சு. ஐயர் நம்மைப் பிரிந்து சென்றுவிட்டார்.

அவர்தம் முடிவு கோரமானது. 'ஓ'வென்று அலறி இடையருது விழுந்துகொண்டிருக்கும் பாபநாசம் பேர் அருவி, வ. வே. சு. ஐயர் உயிரை உடலினின்றும் அகற்றிவிட்டது.

தொடக்கத்தில் கொண்ட திண்மையை இறுதியில் கைவிடா திருந்திருப்பாராஞல், வ. வே. சு. ஐயரின் நிலே வேறு விதமாக இருந்திருக்கலாம்.

விதி யாரை விட்டது ?

கட்டுக்கடங்காத காளை

'சுரபி'

கட்டுக் கடங்காத காளை - அது
காவ லறியாத காளை
சட்டம் பயிலாத காளை - ஒரு
சாத்திரங் கேளாத காளை.

வட்டப் பிறைபோன்ற கொம்பு - அனல்
வாரி யிறைக்கும்அகன் நாசி - ஆல
வட்டம் எனச்சுழலும் செவிகள் - சற்றும்
வாட்ட மறியாத விழிகள்.

பட்டுத் துகில்விரித் தென்ன - பள
பளக்குங் கொழுகொழுத்த மேனி
எட்டுக் குலகிரியி லொன்றை - அங்கு
ஏற்றி வைத்ததெனத் திமிலும்.

கட்டித் திரித்தசடை வாலில் - உயர்
கவரி யெனவசையுங் குஞ்சம் - எஃகுச்
சட்டத்தினைப் பழிக்குங் காலில் - ஜதி
தவழ்ந்து தவழ்ந்தெழுந்து கொஞ்சும்.

பட்டிக் கடாவையுங் கலக்கி - மண்ணைப்
பறிக்க வைக்குமந்தப் பார்வை
எட்டுத் திசைகளிலு மெங்கும் - நிகர்
இல்லை யெனத்தருக்கும் நெஞ்சம்.

வெட்டி இருளினைச் செதுக்கி - நல்ல
வீர எருத்துருவ மாக்கி
நிட்டை யோடுயிரை யூட்டின் - என
நிமிர்ந்து நின்றதந்தக் காளை.

பட்டத் திளவரசு கண்டான் - அதைப்
பற்றி யொடுக்கமனங் கொண்டான்
மட்டு மரியாதை இல்லை - இதை
மாட்டு மிக்கணமே என்றான்.

கொட்ட மடக்குவோ மென்றே - பலர்
குதித்துக் கிளம்பினர் சூரர்
கிட்ட எவரதனைத் துணிவார் - குடல்
கிழிந்து மடியஎவர் நினைவார்.

கொட்டிப் பறைமுழக்கி ஆர்த்தார் - பல
கோலுந் தடியுங்கொண்டு பார்த்தார் - உடல்
கட்டிப் பயின்றவித்தை யெல்லாம் - அந்தக்
காட்டுக் கதிபனிடம் செலுமோ.

விட்டோ மில்லையிதை யென்றார் - பள்ளம்
வெட்டி வீழ்த்திடுவோ மென்றார்
பட்டம் பதவிகளில் வீழ்வார் - அவர்
படிறும் அறிந்திடுமோ காளை.

பட்டியி னில்கொண்டு சேர்த்தார் - இனிப்
 பார்ப்போம் இதன்மிடுக்கை யென்றார்
பெட்டிப்பாம் பாகிவிடு மென்றார் - எவர்
 பிடிக்கும் அடங்கிவிடு மென்றார்.

எட்டோ டிரண்டுநா ளாச்சு - இரை
 எடுக்கத் தலைகுனிந்து காளை
கட்டைத் தளர்த்திவிடு மென்றார் - அதன்
 கருத்தை இறுக்குவது காணார்.

மட்டி லுபாயங்கள் செய்தார் - ஒரு
 மாட்டிற்கு மிவ்வளவோ என்றார்
சட்டையிலுங் குட்டையிலுந் தானே - மனச்
 சாகச மொளித்திருக்குங் கூறீர்.

எட்டிரண் டானதைய நாளும் - இனி
 இறங்கிவிடுங் காளை யென்றார்
பட்டினியி னல்பறக்கும் பத்தும் - எனும்
 பாடம் படித்தவர்க ளன்றோ.

கட்டை யவிழ்த்தெறிந்து காளை - நரர்
 காணாத பதிசென்ற தாள
கட்டுக் கடங்காத காளை - அது
 கட்டுக் கடங்காத காளை.

சடைக்கத் தேவன்

மு. அருணுசலம்

பதினும் நூற்ருண்டின் மத்தியிலே, மதுரையிலிருந்து அரசாண்ட பாண்டிய வமிசம் அழிந்துபோய், பாண்டி நாடு விசயநகரத்திலிருந்து ஆண்ட ராயர் ஆட்சிக்கு உட் பட்டது. ராயருடைய படைத்தலைவனுகத் தென்னடு வந்து, மதுரையிலே ஆண்டவன், விசுவநாத நாயக்கன் என் பவன். இவனுக்குப் பிறகு இவனுடைய சந்ததியினர் விசயநகரத்து மன்னருக்குக் கப்பங் கட்டாமலே தனியரசு நடத்தி வந்தார்கள். இப்படித் தனியரசு நடத்திய நாயக்க மன்னருள், அடுத்த நூற்ருண்டின் முற்பாதியில் அர சாண்ட திருமலை நாயக்கர் (கி. பி. 1623 - 1659) பெருஞ் சிறப்புடையவராயிருந்தார். பழைய கோயில்களையெல்லாம் புதுப்பித்து அவற்றுக்கு ஏராளமான நிலங்களையும் வரு வாயையும் அளித்து, சிறந்த தான தருமங்களைச்செய்து ஒப் பற்ற வள்ளலாக விளங்கினர். தமிழ் வளர்ச்சிக்கும் இவர் அருந்துணையா யிருந்தார். பெரும் புலவரும் அரிய சிவ ஞானியுமான குமரகுருபர சுவாமிகள் இவரால் ஆதரிக்கப் பெற்றவர் என்ருல், இவர் தமிழ் வளர்த்த புகழுக்கு வேறெதையும் சொல்ல வேண்டுவதில்லை.

திருமலை நாயக்கர் காலத்துக்கு முன்னிருந்தே இராமநாத புரத்தில் சேதுபதி என்ற பட்டப் பெயர் தரித்த தமிழ் வீரர் இருந்து அரசாண்டு வந்தார்கள். இராமர் கட்டிய அணையாகிய சேது இவர்கள் பரிபாலனத்தில் இருந்தமை

யால், இம்மன்னர்களுக்குச் சேதுபதி என்ற பெயர் வந்தது. கூத்தன் சேதுபதி என்ற தலைவன் 1635-ல் இறந்து போனான். அவனுடைய மகனான சடைக்கன் சேதுபதி அதே ஆண்டில் பட்டத்துக்கு வந்தான். இவனுடைய அஞ்சாத வீரம் காரணமாக இவனுக்குத் தளவாய் சேதுபதி என்ற பெயரும் வழங்கியது; சாதாரணமாக சடைக்கத் தேவன் என்றே இவனைச் சொல்வதுண்டு.

இவனுக்குக் கங்கை நாச்சியார் என்ற ஒரே பெண்; பிள்ளை இல்லை. அதனால், தன்னுறவினருள் ஓரிளம் பிள்ளையை எடுத்து, ரகுநாத சேதுபதி என்று பெயர் கொடுத்துச் சுவீகாரம் செய்துகொண்டு, அவனை இளவரசாக வளர்த்து வந்தான். சேதுநாட்டு மறவர் அனைவருக்கும் சடைக்கத் தேவனிடமும் அவன் பிள்ளையிடமும் மிக்க பக்தியும் விசுவாசமும் இருந்து வந்தன.

கூத்தன் சேதுபதிக்குத் தாசி புத்திரனான ஒருவன் இருந்து வந்தான்; 'தம்பி' என்று இவன் பெயர் வழங்கிற்று. எப்படியேனும் சேதுநாட்டு அரசைக் கைப்பற்றித் தான் சேதுபதியாகவேண்டுமென்று அவனுக்கு மிக்க ஆசை. சடைக்கன் சேதுபதிக்குப் பிள்ளை இல்லாமையினாலே, அவனுக்குப்பின் தனக்கே சேதுநாடு கிடைக்குமென்ற நம்பிக்கையும் இவனுக்கு முதலில் இருந்தது. ஆனால், சேதுபதி ஒரு பிள்ளையைச் சுவீகாரம் எடுத்துக் கொண்டதில் இவனுக்கு ஏமாற்றம் உண்டாயிற்று. மதுரைத் திருமலை நாயக்கரைத் தேடிச் சென்று, சேதுநாட்டு அரசைக் கைப்பற்றுவதில் தனக்கு உதவி புரிமாறு அவரைக் கேட்டான். நாயக்கருடைய தளபதியாயிருந்தவன், ராமப்பய்யன் என்ற பிராமணன். இவன், போர் நடத்துவதிலே மிக்க திறமையும் அனுபவமும் வாய்ந்தவன்; அதேபோல, தந்திரத்திலும் சிறந்தவன். சடைக்கன் நாயக்கருக்கு அடங்காமலே இருந்து

வந்தான்; அவனுடைய செருக்கை அடக்கவேண்டுமென்பது இவன் ஆசை. எனவே, 'தம்பி' வந்து உதவி கேட்டபோது, இது நல்ல தருணமென்று ராமப்பய்யன் நினைத்தான்.

ராமப்பய்யனுடைய ஆலோசனையின்படி, சேது நாட்டில் ஒரு பகுதியைத் 'தம்பி'க்குக் கொடுக்கும்படி நாயக்கர் சடைக்கனுக்குச் சமாதான முறையிலே தூதனுப்பினார். அவன் அதற்கு இணங்கவில்லை. நாயக்கர் வார்த்தையைப் புறக்கணித்ததில் அவருக்கும் கோபமுண்டாயிற்று. ஆனால், மறவன் சேதுபதியின் வீரத்தைப்பற்றி அவர் நன்றாய் அறிந்திருந்தார். அவனோடு போர் புரிந்து வெல்வது இயலாத காரியம் என்று அவர் எண்ணியிருந்தார்.

ஆயினும், அவருடைய தளபதியான ராமப்பய்யனுக்கு இந்தச் சந்தர்ப்பத்தை விட்டுவிட மனமில்லை. எப்படியேனும் படையெடுத்துச் சென்று சேதுபதியை அடக்க வேண்டுமென்று அவன் முடிவு செய்தான். நாயக்கரோ, போருக்கு எளிதில் இணங்கவில்லை. தமிழ் நாட்டு மறவ வீரர், வடநாட்டிலிருந்து வந்திருந்த வடுகரை எவ்வளவு தாழ்வாக எண்ணினார்கள் என்பதை அவர் உணர்ந்தவர். எனவே, வீணிலே போய்ப் போரிட்டுத் தோற்று அவமானமடைய அவர் விரும்பவில்லை. ஆகவே, அவர் 'மறவனோடு சண்டையே வேண்டாம்' என்று ராமப்பய்யனுக்குச் சொன்னார்:

'வேண்டா மடா, ராமா; வீரியங்கள் பேசாதே.
பண்டுமுன்னாள் நம்சேனை பாருலகு தானறியக்
குழல்வாய்க் கிரையாகக் கொள்ளை கொடுத்தோமே!
இன்று பகைத்தால் எதிர்த்தமன்னர் தாம்நகைப்பார்;
சேதுக் கரைதனிலே சென்றவர்கள் மீண்டதில்லை!
மதுரைப் படையென்றால் மதியான் மறவனுந்தான்:
பண்டு வடுகர் படைத்தலைவர் அத்தனையும்
காட்டிலே வெட்டிக் கழுகுபசி தீரவைத்தான்,

வெற்றிச்சங் கூதி விருது பறித்தவன்காண்,
முன்னமே வெட்டி முனைகண்டான் மறவனுந்தான் ;
இந்நாளி லேதான் எண்ணுன் வடுகரென்றால் !
வேண்டாங்காண் ராமய்யனே, வீரியத்தை விட்டுவிடும்'

என்று கதறினர். ராமப்பய்யனே, எப்படியும் சடைக்கனை அடக்கி அவனைக் கட்டிப் பிடித்துக்கொண்டு வருவதாக அவருக்குப் பக்குவமாய்ச் சொல்லி, படை யெடுத்துச் செல்ல அவரிடம் அனுமதியும் பெற்றுவிட்டான்.

பிறகு ராமப்பய்யனுடைய பெருஞ்சேனை புறப்பட்டது. பல ஊர்களிலுள்ள பாளையக்காரர்களும் படைத் தலைவர்களும் அவனுக்குத் துணையாக வந்து சேர்ந்துகொண்டார்கள். படைகளோடு வந்த ராமப்பய்யன் மானமதுரையை யடைந்து கூடாரமடித்துத் தங்கினன். இச்செய்தி ஒற்றர் மூலமாகச் சடைக்கனுக்குத் தெரிய வந்தது ; மிக்க சீற்றங் கொண்டான் :

பூண்ட மணிமார்பன் புகழ்ச்சடைக்கன் அப்போது
செங்கமலக் கண்கள் சிவக்கவிழி நீர்ததும்பச்
சீறுவடி வாள்அசைத்துச் சினந்தான் சடைக்கனுந்தான்:
'பார்ப்பான் தனக்குப் பயந்துமெள்ளத் தானுமினிக்
கப்பமுங் கட்டிக் கைகட்டி நிற்பேனே ?
மண்டலத்தி லுள்ள மன்னர் நகைப்பார்கள்.
சடைக்கனுட வலுவைத் தானும் அறியானே ?
என்னை மெலிவிக்க எவரால் முடியுமடா ?
எண்ணமல் வந்து இறங்குமந்தப் பார்ப்பானைக்
கண்ணைப் பிடுங்கிக் காட்டிலே ஓட்டாட்டால்,
என்பெயர் தான்சடைக்கன் ? எடுத்ததுவும் ஆயுதமோ ?'

என்று வீரமுழக்கஞ் செய்தான். செய்தபின் தன் படைகளை யெல்லாம் திரட்டிப் போருக்கு ஆயத்தப்படுத்தினன்.

சடைக்கனுடைய மருமகன் வன்னித் தேவன் என்பவன்; ஆண்மை மிக்க காளையாக இருந்தான்; மறவ வீரர் அனைவருக்கும் வன்னியென்றால் உயிர். இவனே சடைக்கனுடைய படைத் தலைவனாகவும் அவன் பெற்ற வெற்றிக்கெல்லாம் காரணமாகவும் இருந்து வந்தான். ராமப்பய்யன் படையெடுத்துவந்த செய்தியை வன்னி அறிந்தான். மாமனை வந்து கண்டு, வீர வார்த்தைகளெல்லாம் பேசி, படைவீரர் அனைவரையும் ஊக்கி, போர் மேற்கொண்டு படையை நடத்திச் செல்லலானான்.

வன்னியும் வேறுள்ள படைத் தலைவர்களும் அலங்கரித்துக் கொண்டு ஆயுதங்களெல்லாம் ஏந்தி, யானைமீதும் குதிரை மீதும் ஏறி, போர்முனை நோக்கிச் சென்றார்கள். படைகள் சூழ்ந்து சென்ற காட்சி மிக்க கோலாகலமாயிருந்தது:

ஆனைமேல் பேரிகை அலைகடல் போல்முழங்க
ஒட்டகைமேல் பேரிகை உலகங் கிடுகிடெனக்
குதிரைமேல் டம்மாரம் குமுகுமென்று தான்முழங்கப்
பதினெட்டு மேளவகை பண்புடனே தான்முழங்க,
வானத்தின் மீன்போல மன்னர் குடைநெருங்க,
வாணப் பொதியுடனே வங்கார ஈட்டிகளும்
அம்புவில்லுக் காரர் அதிவீரர் சூழ்ந்துவர
கட்டியக் காரர் கனவிருது கூறிவர
ஆலவட்டம் பிடிக்க அதிவீரர் முன்நடக்க,
சந்திர காவிடால் தளமெல்லாம் தானிலங்க
வெண்சாமரம் வீசி விருதுசின்னந் தானூத, -
நடந்தானே வன்னி துரை நாவலர்கள் கொண்டாட.

அரியாண்டிபுரம் என்ற ஒரு கோட்டையிலே இருவர் படைக்கும் முதலாவதாக ஒரு சிறிய போர் நடந்தது. கேட்பானேன், வெற்றி வன்னி பக்கந்தான்.

வெற்றிச்சங் கூதினான் விருது சடைக்கனவன்.
பார்ப்பான் பெரும்படையில் பட்டார்கள் மூந்நூறு,
மறவர் அறுபதுபேர் மாண்டார்கள் அக்களத்தில்.

(நாம் என்னவோ நினைத்துக் கொண்டிருக்கிறோம்: போரிலே இருதரப்பின் படைகளிலே ஏற்பட்ட சேதத்தைச் சொல்லும்போது, நமது படையின் சேதத்தை மிகக் குறைத்தும் எதிரியின் சேதத்தை மிக அதிகப்படுத்தியும் சொல்லுகின்ற ஒரு திறமை இந்தக் காலத்துக்கு மட்டுந்தான் உரியது என்று!)

மறுநாள் கொடிய பெரும் போரொன்று நடந்தது. ராமப் பய்யன் படை எவ்வளவோ வீரத்தோடு போரிட்டாலும், வன்னித் தேவனை எதிர்த்து நிற்க முடியவில்லை.

மன்னன்புலி ராமன்படை மட்டில்லாச் சேனைவெள்ளம்,
தட்டழிந்து கெட்டதுபோல் தலைகெட்ட நூலதுபோல் -
மூவா யிரம்பேர் முழுதுமங்கே தான்மடிந்தார் ;
மறவன் படையில் மடிந்தார்கள் முந்நூறு.

ராமப்பய்யனுக்கு, இல்லாத ரோசமும் ஆத்திரமும் வந்துவிட்டது. 'மறவனே ஆண் பிள்ளைகாண், மண்டலத்திலுள்ளோரே!' என்று கதறினான். 'மற்றப் படை வீரர் யாவரும் பெண்டுகளோ?' என்று பெருமூச்செறிந்தான். இருந்தாலும், மதுரையில் நாயக்கரிடம் சொன்ன வீர மொழிகள் நினைவு வந்தன. வெட்கம் மேலிட்டது. படைத் தலைவர் அனைவரையும் திரட்டி, அவர்கள் முன்னே சபதம் செய்தான் :

'இன்றைக்கு லெக்காக எதிர்த்த மறவனைத்தான்
சென்று பிடித்துத் திசைநாலுங் கொள்ளையிட்டுக்

கைப்பிடியாய்த் தான்பிடித்துக் கட்டிக்கொடு வாராட்டால்
என்பேரோ ராமன், எடுத்ததுவும் ஆயுதமோ?'

என்று வஞ்சினங் கூறினன். கூறி, இதை ஓலையிலும் எழுதிச் சடைக்கனுக்கு அனுப்பிவிட்டான்!

இதுவரையில் இரண்டு போரிலே தோற்றவனுக்கு இவ்வளவு ஆத்திரம் வருமானால், வென்றவனுக்கு எவ்வளவு வெற்றிப் பெருமிதம் இராது? அதுவும் மறவன் சடைக்கனுக்குச் சொல்லவேண்டுமா? இந்த ராமப்பய்யனை அவன் ஒரு பொருட்டாகவே எண்ணவில்லை. தன் ஆயுத பலத்தினல் இவனைக் கொல்வது மிக எளிது என்பது அவன் உறுதி. ஆனல், ராமப்பய்யன் பிராமணன் ஆயிற்றே! பிராமணனைக் கொல்வது, போரிலானாலும் சரி, பாவமல்லவா? ஆகவே, இவனை வென்று அவமானப்படுத்தவேண்டுமேயன்றிக் கொல்லலாகாது என்று முடிவுசெய்தான். எப்படி அவமானப்படுத்துவது?

'பார்ப்பான் ஒருபொருட்டோ பாருலகில் மன்னவனே?
நாளைப் பகற்பொழுதில் நாழியனுக் குள்ளாக
அம்மானை பந்தாடி அலைக்கழிவு பண்ணுட்டால்,
என்பேரோ சடைக்கன், எடுத்ததுவும் ஆயுதமோ?
பார்ப்பானைக் கொன்றால் பாவம்வந்து சூழுமென்று,
பின்குடுமி தன்னில் பேருலகந் தானறியத்
தேங்காயைக் கட்டிச் சிதற அடிப்பேன்நான்;
கண்ணைப் பிடுங்கிக் காட்டிலே ஓட்டிடுவோம்'
என்றுசொல்லி ஓலை எழுதுமென்றான் சடைக்கனுந்தான்.

இவ்வாறு சடைக்கன் மறுஓலைவிட்டான். அடுத்த போரிலும் வெற்றி வன்னி பக்கந்தான். இதற்கிடையிலே சடைக்கன் சேதுக்கரைக்குப் போயிருந்தான். வெற்றிபெற்ற வன்னி, அவனைத் தேடிச் சேதுக்கரையடைந்தான். ஆனல் ராமப்பய்யன் அதுவரையில் வீண்பொழுது போக்கவில்லை. சடைக்க

னும் வன்னியும் சேதுக்கரை போய்விட்டதறிந்து, மிக்க வீரத்தோடு போரிட்டு, சடைக்கனுடைய கோட்டைகள் பலவற்றை ஒன்றன்பின் ஒன்றாகக் கைப்பற்றிக்கொண்டு வந்தான். சடைக்கன் சேதுக்கரையினின்றும் போர்முனை நோக்கி வந்து, ராமப்பய்யனை எதிர்த்துப் போரிட்டான். அடுத்து நடந்த போரிலே சடைக்கனுக்குக் காயமுண்டாகி விட்டது. தக்க சமயத்திலே வன்னி வந்து உதவி, ராமப்பய்யன் படையைப் புறமுதுகிட்டு ஓடச்செய்து, காயமடைந்த சடைக்கனுக்கு வைத்தியம் செய்வதற்காக இராமேச்சுரம் தீவுக்கு அழைத்துச் சென்றான்.

தலைவர்கள் அகன்று போகவே, சடைக்கன் படை மீண்டுமொருமுறை தோல்வியுற்றது. படையிலே தலைவர்களாயிருந்த அழகன் குமாரன் என்ற இரு மறவ வீரர்களை ராமப்பய்யன் சிறைபிடித்து, மிக்க பயங்கரமான முறையிலே சித்திரவதை செய்து கொன்றான். காதல் விஷயத்திலும் போர் விஷயத்திலும் நீதி வரம்பு என்று ஒன்று கிடையாது: எதையுஞ் செய்யலாம், எல்லாம் நியாயந்தான் என்று ஒரு பழமொழி உண்டு. போர்வெறியும் நாடு பிடிக்கும் ஆசையும் தலைக்கேறிப்போன ராமப்பய்யன் செய்த குரூரச் செயல்களுக்குக் கணக்கில்லை. அழகன் குமாரன் என்ற இருவருடைய தேவிமாரையும் அழைத்து வரச்செய்து, அவர்களுடைய கற்புக்குப் பங்கம் வருகிற முறையிலே அவர்களை நடத்தச் செய்தான். அக்கணமே அவர்கள் உயிரை விட்டுவிட்டார்கள். இதைக் கேட்டபோது, கொடியவனான ராமப்பய்யன் உள்ளத்திலும், 'இப்பெண்கள் உத்தமப் பத்தினிகள்' என்ற நல்லுணர்ச்சி சிறிதே பிறந்தது. மிக்க மரியாதையோடு ஆடம்பரமாக அப்பத்தினிகளின் உடலை அடக்கம் பண்ணச் செய்தான்.

விடுத்தா ளவளுயிரை, விண்ணுலகம் போய்ச்சேர்ந்தாள்.
மன்னன்புலி ராமனுக்கு வந்துசொன்னா ரந்நேரம்.

அவ்வார்த்தை கேட்டு அய்யனுந்தான் அப்போது [டிப்
வாய்த்ததொரு பெண்கொடியை மனமகிழ்ந்து கொண்டா
பச்சை வடங்கொடுத்துப் பாங்குடனே அடக்கச்சொன்னர்.
அந்தப் படியே ஆனதொரு பெண்கொடியை
எடுத்தடக்கச் சொன்னர்கள் எல்லோருங் கொண்டாட.

அடுத்துநடந்த போர்களிலே ராமப்பய்யனுக்கு வெற்றிமேல் வெற்றி கிடைத்தது. விரைவிலே எல்லா நாட்டையும் அடிமைப் படுத்திக்கொண்டு, பாம்பாற்றங்கரையை அடைந்து விட்டான். இனி, ஆற்றைக் கடந்து இராமேச்சுரந் தீவினுட் சென்று சடைக்கனைப் பிடிப்பது ஒன்றுதான் பாக்கி என்ற நிலைமை ஏற்பட்டுவிட்டது. ஆற்றைப் படைகள் கடப்பதற்காக அணைபோடத் துணிந்தான். எல்லோரும் பார்த்து ஏளனமாகச் சிரித்தார்கள். 'பாம்பனாறு என்று பேர்தானேயொழிய, இது கடலாயிற்றே! முன்னமே இராமர் இங்கே அணைகட்டினரென்று இதிகாசம் சொல்லுகிறது. ஆனல் இப்போது, மனிதரால் இக்காரியம் முடியுமா? ராமப்பய்யனுக்கு ஏதாவது மூளைக் கோளாறோ?' என்று சொல்லிச் சிரித்தார்கள்.

எல்லோருங் கூடி இருகைகொட்டித் தாம்சிரித்து,
'மலைமுறிந்து வீழ்ந்தாலும் மண்ணிலுள்ளோர் வந்தாலும்,
ஆரால் முடியுமடா ஆளச் சமுத்திரத்தை?
காவேரி யாறுமல்ல கைவாய்க்கால் தானுமல்ல,
பூவேரி தானுமல்ல புனல்நீர் மடுவுமல்ல -
ஆழச் சமுத்திரத்தை அமைக்கவென்று தான்துணிந்து -
இந்நாட்டில் கண்டதில்லை இவ்வுலகில் கேட்டதில்லை:
பார்ப்பான்பேய் கொண்டான்காண் பாருலகில் மன்னவரே!'

என்று கூறிப் படைவீரரும் மற்றுமுள்ளோரும் பழித்தார்கள். ஆனல் ராமப்பய்யன் விடுவானு? நெஞ்சுறுதியும் எடுத்த காரியத்தைச் சாதிக்கும் திறமையும் அவனிடம் பொருந்தியிருந்தன. உடனே அவன், தானே சென்று, உச்

சிக் குடுமியும் தலைப்பாகையுந் தவிர வேறு சுமையொன்றுந் தாங்கியறியாத தன் தலைமீது கற்களை அடுக்கித் தூக்கிவந்து ஓடத்துறையிலே கொண்டுபோய்க் கொட்டலானான். தளகர்த்தனே இவ்வாறு செய்யும்போது, பிற படைத்தலைவரும் படைவீரரும் பார்த்துக்கொண்டு சும்மா இருக்கமுடியுமா? கல்லும் மண்ணுமாக அணையிலே வந்து குவியலாயின. மன்னரும் பாளையக்காரரும் தாசிமகளிரும் செட்டிகளும் பரதேசிகளும் கல் தூக்கலானார்கள். அணையும் விரைவிலே அடைபட்டு வந்தது.

பார்த்தான் வன்னி. இராமேச்சுரந் தீவிலே வந்து புகுந்திருந்த படையனைத்தையும் திரட்டினான். தன்னிடமிருந்த இரண்டு பீரங்கிகளையும் பெரிய கப்பலொன்றையும் கொண்டுவரச் செய்தான். பகைவன் போட்ட அணையை நோக்கிப் படையை முடுக்கினான். இருபுறமும் கடல்நீர் சூழ்ந்த குறுகிய அணையின்மீது கொடும்போர் மூண்டது:

சுட்டார் குழற்காரர் துங்கமுடி மன்னரையும்;
எறிந்தார் எறிவாணம் எல்லையற்ற சேனையின்மேல்;
வாணமடி பட்டு மயங்கிக் கடலில்விழ
உண்டைபட்டுச் சோர்ந்து உருண்டு கடலில்விழப்
பட்டார்கள் ராமன்படை பாற்கடலில் தாம்நிறைந்தார்.
காலற்று வீழ்வாரும் கையற்று வீழ்வாரும்,
அய்யோ சிவனேயென் றலறி மிகமயங்கி
ஆனைவிட்டுச் சேனைவிட்டு ஆற்றும லோடுவாரும்,
பாளையத்தி லுள்ள படைத்தலைவ ரெல்லோரும்,
வன்னி யுடகோபம் கண்டு மயங்குவாரும், -
பாளையங்க ளெல்லாம் பலதிக்குந் தானோடி
நிர்த்தூளி யாக்கி நின்றானே வன்னியுந்தான்.

பார்த்தான் ராமப்பய்யன். தனக்கு வந்த சிறுமையை எண்ணி எண்ணி மிக்க ஆத்திரங்கொண்டான். அப்போது, ஐரோப்பாவிலிருந்து பலநாட்டு வணிகர்கள் கப்பலோடும்

படையோடும் வந்து தமிழ்நாட்டுத் துறைமுகங்களிலே இறங்கி வியாபாரம் செய்த காலம். போர்த்துக்கீசியர், டச்சுக்காரர் முதலாயினேருக்கு அக்காலத்தில் தமிழ்நாட்டில் பரங்கிகள் என்றே பெயர் வழங்கிவந்தது.

இந்தப் பரங்கிகளையெல்லாம் அழைத்தான் ராமப்பய்யன். வெகுமதிகளையும் பரிசுகளையும் அவர்களுக்குத் தாராளமாய் வழங்கினன். இராமேச்சுரந் தீவிலிருந்த சடைக்கனைப் பிடித்துத் தந்தால், தீவையே அவர்களுக்குத் தருவதாக ஆசை காட்டினன். அவர்களுக்கோ, மறவன் சடைக்கனென்றல் நடுக்கம். ஆயினும், ராமப்பய்யன் கூறிய ஆசைமொழிகள் என்ன, நாயக்கர் தயவு என்ன-இவை அற்பமானவையா ? இவற்றில் மயங்கி, ராமப்பய்யன் தரப்போகும் நாடுகளையும் எண்ணி, அவர்கள் சடைக்கன்மேல் போர் தொடுத்தார்கள். அவர்களுடைய கப்பற்படை யவ்வளவும் வந்து தீவை வளைத்துக்கொண்டது.

கப்பலும் சோங்கும் கடுகவே பாய்விரித்து,
அட்ட சமுத்திரத்தில் அலைகடலில் கப்பல்விட்டு,
ஏழு சமுத்திரத்தில் இடமறவே பாய்விரித்து -
வந்து வளைந்துகொண்டார் வாய்த்த பரங்கியர்கள்.

இதற்கும் சளைக்கவில்லை, அஞ்சாநெஞ்சனன வன்னித்தேவன். தன் படை வீரர்களை முடுக்கிவிட்டு, பீரங்கிகளையும் கைக்கொண்டு எதிர்த்துப் பொருது, பரங்கியர் கப்பற்படையையும் ஒருசேர அடித்துநொறுக்கிவிட்டான். கப்பல்களிலே ஒருபாதி நெருப்பினலும் மற்றப் பாதி நீரிலும் அழிந்தன. கூலிப் படைதானே அது ?

ராமப்பய்யனுக்கோ தாங்கமுடியாத அவமானம். அவனும், மிகச் சிறந்த தளகர்த்தன். திருமலை நாயக்கருக்காக எத்தனையோ இடங்களில் சண்டையிட்டு வெற்றிபெற்றவன். எங்குமே காணத தோல்வியை இங்கு இம்மறவனிடம் பெறுவ

தென்றல் அவனுக்கு எப்படித்தான் பொறுக்கும்? தன் படைத் தலைவர்களை மீண்டும் அழைத்து, 'இலங்கையை அனுமான் அழித்ததுபோல நீங்கள் இத்தீவிற் புகுந்து பொருது அழித்துச் சடைக்கனைப் பிடிக்கவேண்டும். இல்லை யானல் உங்களைக் கழுவேற்றி விடுவேன்' என்று கடுமை யாகக் கட்டளையிட்டான். படைகள் திரண்டு அணியில் வந்து குவிந்தன.

ஆனல், சடைக்கனுடைய படை இன்னும் திரண்டு எதிரே வரவில்லை. வன்னிக்கு வைசூரி பூட்டிவிட்டது. இதை யறிந்த சடைக்கன் மிகவும் மனம் வருந்தினன். இராமநாத சுவாமியையும் மாயன் பெருமாளையும் எவ்வளவோ வேண் டிக்கொண்டான். ஆனல் இராமநாதரும் பெருமாளும் சிறிதுகூடக் கருணை செய்யவில்லை. வன்னிக்கு வைசூரியின் கொடுமை அதிகமாயிற்று. எழுந்து வரவும் உடலிலே வலிமையில்லை. என்ன செய்வது?

அந்த நிலையிலே, ராமப்பய்யன் படைகள் திரண்டு வந்து விட்டன. சடைக்கன் படைகளோ, தங்கள் தலைவனை வன்னியில்லாமல் மனவெழுச்சி குன்றிவிட்டன. வன்னியை ஒருமுறை கண்டுவிட்டாலே போதும்: அப்படைகள் முன் னேறிச் சென்று ராமப்பய்யன் சேனையைத் தொலைத்து விடும்.

இதை யுணர்ந்தான் வன்னி. வைசூரியின் வேகத்தால் தான் இறப்பது நிச்சயமென்பதை யறிந்து, எப்படியும் போர் முனைக்குச் செல்லவேண்டுமென்று முடிவு செய்தான். நாடு கலக்கி என்ற பெயருடைய தன் போர்க் குதிரையைக் கொண்டுவரச் செய்தான். அதை அலங்கரித்து, அதன்மேல் தன்னைத் தூக்கிவைத்துக் கயிறுகொண்டு கட்டிவிடும்படி சொன்னன். (அவனல்தான் எழுந்து நிற்கவும் இயல வில்லையே!) வேறுவழியின்றி, படைவீரர் அவன் கட்டளைப்

படியே செய்தார்கள். வன்னியைச் சுமந்துகொண்டு, அவனுடைய போர்க் குதிரை பாம்பாற்று அணையை நோக்கிச் சென்றது. படைகள் மிக்க எழுச்சியோடு ஆர்ப்பரித்துப் பின் தொடர்ந்தன.

அணையிலே பயங்கரமான போர் நடைபெற்றது. இதுவே வன்னியின் கடைசிப் போர். படைக்கு வன்னி தலைமை வகித்திருக்கிறான் என்ற எண்ணத்தோடு அவன் படைகள் போரிட்டு, ராமப்பய்யன் படை நிலையழிந்து ஓடும்படி செய்துவிட்டன. வெற்றிக் கோலத்தோடு மீண்டுவந்து வன்னி மாமனை அடிபணிந்தான்.

தான்வெகுசீக்கிரத்தில் இறக்கப்போவதையுணர்ந்த வன்னி, அடுத்த போரிலே, சடைக்கன் வெல்லமாட்டான், ராமப்பய்யனே வெல்வான் என்பதையும் உணர்ந்தான். எப்படியேனும் சடைக்கன் ராமப்பய்யனுடன் சமாதானம்செய்து கொள்வதே நலமென்று கருதினான். ஆனால், சொன்ன வார்த்தையைக் காப்பாற்றிய பெருமை ராமப்பய்யனுக்குக் கிடையாது; ஆகவே, அவனோடு சாதாரணமாகச் செய்து கொள்ளும் எந்த உடன்படிக்கையும் பயனற்றுப் போகும் என்றும் எண்ணினான். (வன்னி சிறந்த வீரனாயிருந்ததோடன்றி, ராஜதந்திரமும் தெரிந்தவனாயிருந்தான்!) ராமப்பய்யனுக்குத் தன் தமையன் வயித்தியப்பனிடத்தில் மரியாதை மிகவுமுண்டு; ஆகவே, அவன்மீது ஆணையிட்டுச் சொன்னால், சொன்ன வார்த்தையை மீறமாட்டான் என்று வன்னி உறுதிகொண்டான். இதைச் சடைக்கனுக்கு அறிவுறுத்தி, மேல் ஆகவேண்டியவற்றைக் கவனிக்கும்படி சொன்னான்.

'என்வார்த்தை தன்னை இனிக்கேளு, மன்னவனே!
படைத்தலைவர் அத்தனையும் பாங்காக நம்பாதே!

ஆனை குதிரை அடங்கலும் நம்பாதே!
உற்ருர் உறமுறையார் ஒன்றும்நீ நம்பாதே!
தெய்வத்தை நம்பாதே, தீர்க்கமுடன் சொல்லுகிறேன்.

(தெய்வங்களுக்குப் பிரார்த்தனை செய்வதிலே சடைக்கனுக்குப் பற்றுதல் அதிகம். இதனுல் போரில் வெற்றிபெற முடியாது என்று வன்னி வலியுறுத்திக் கூறுகிருன். தனக்கு வந்த வைசூரி போவதற்காக, மாமன் வேண்டிக் கொண்டதை நேரிலே பார்த்தவனல்லவா? ஆகவே இவ் விஷயத்தை இவ்வளவு தூரம் அவன் குறிப்பிட்டுச் சொல்ல வேண்டியதாயிற்று.)

மன்னன்புலி ராமனுக்கு வாகாக ஓலைதன்னைக்
கண்டு வணங்கக் காகிதமுந் தானெழுது.
அவன்தமையன் வயித்தியனுர் அவர்மேலே ஆணையிட்டு
நம்பிக்கை யோலை நமக்குவர வேணுமென்றே
கோடித் திரவியங்கள் கொண்டுபோய்த் தான்கொடுத்துக்
கண்டு வணங்கிக் கலங்காமல் தாமிருங்காண்'

என்று வன்னி தன் மாமனுக்கு அறிவுரையெல்லாம் கூறிவிட்டு மயக்கமுற்றுச் சாய்ந்துவிட்டான். அவன் பூண்ட போர்க்கோலம் கலையாமல் அப்படியே இருந்தது; போர்த்த கவசமும் இடையிலே செருகிய உடைவாளும் கையிலே வேலும் அப்படியே இருந்தன. வைசூரியின் கொடுமையால் உயிர் போய்விட்டது.

வன்னியின் உயிரைக் கவர எமன்கூட எதிரே வர அஞ்சினும்; வன்னியின் உயிர் எமன் கையிலகப்படாமல், வன்னி வழிபட்ட இராமநாதேச்சுரரின் சிவலோகம் போயிற்றென்று சுவையோடு முடிக்கிருர் கவிஞர்:

மெத்தைதனிற் சாய்ந்தான் மெய்க்கலக்க மாகவேதான்:
ஏமனும் வந்து எதிர்க்கவர மாட்டாமல்

கிட்ட வரப்பயந்து கெடிகலங்கிப் போய்விடுமாம் -
தீரனவன் வன்னி சிவலோகந் தான்சேர்ந்தான்.

இவ்வாறு முடிந்தது வன்னித்தேவனுடைய வீர வாழ்க்கை. அவன் இறந்தவுடனே அவனுடைய தேவியும் உடன்கட்டை ஏறிவிட்டாள். வன்னியிறந்த செய்தியறிந்து ராமப்பய்ய னுக்கு எல்லையற்ற மகிழ்ச்சி யுண்டாயிற்று. சடைக்கன் விட்ட சமாதான ஓலையும் அப்போதே தூதுவன் கொண்டு வந்து தந்தான். சமாதானத்துக்கு உடன்பட்டு, ராமப்பய் யன், சடைக்கன் விரும்பியவாறே தன் தமையன்மீது ஆணை யிட்டு ஓலையெழுதிச் சடைக்கனுக்கு அனுப்பிவிட்டான்.

ஓலையைக்கண்ட சடைக்கன், ராமப்பய்யன் ஆணையிட்டுக் கூறிய சொல்லை நம்பி, அவனைக் காண்பதற்கேற்ற வரிசை களை எடுத்துக்கொண்டு, தண்டிகையேறிப்போய் அவனைக் கொலுமுகத்தில் கண்டான். சடைக்கனைக் கண்டவுடனே, ராமப்பய்யனுக்குத் தான் முன்னமே அவனிடம் பல போர் களிலே தோற்ற தோல்வியும் பெற்ற அவமானமும் நினை வுக்கு வந்தன. எல்லையற்ற சீற்றங் கொண்டான். கொண்டு, தன் தலைப்பாகையைக் கழற்றிவிட்டு, தன் உச்சிக் குடுமி யைத் தட்டிக் காட்டிச் சொன்னான் :

" சடைக்கா, பார்ப்பான் குடுமியிலே தேங்காயைக் கட்டி அடிப்பேன் என்று நீ முன்னமே வஞ்சினங் கூறினாயே! இதோ இருக்கிறது என் குடுமி. தேங்காய் எங்கே? கட்டி அடி பார்க்கலாம் " என்று ஏளனமாய்க் கூறினான்.

மறவன் சடைக்கன் அப்போதும் வீரத்திலோ சொல்லிலோ சளைக்கவில்லை. " சமாதானம் பேசி வந்திருக்கிறேனே யொழிய, இன்னும் நான் உனக்குப் பணிந்துவிடவில்லை ;

உன்றனிடத்தில் ஒடுங்கியே வந்தேனென்று
இந்த வசனம் எடுத்துரைத்தாய் மன்னவனே.

என்மருகன் வன்னி இருந்தானே யாமாகில்
தேங்காயைக் கட்டிச் சிதற அடிப்பானே !''

என்று இறுமாப்போடு மறுமொழி கூறினான். ராமப்பய்ய னுக்கு வந்த கோபத்துக்கு அளவில்லை; சமாதானப் பேச்சையும் தான் சடைக்கனுக்குக் கொடுத்திருந்த உறுதி மொழியையும் காற்றிலே விட்டுவிட்டான். தன் காவலர் களைக் கொண்டு சடைக்கனைக் கட்டச் செய்தான். கட் டுப்பட்ட சடைக்கனைத் தன் படைவீரருடைய பாது காவலிலே மதுரைத் திருமலை நாயக்கரிடம் அனுப்பினான்.

நாயக்கர், சடைக்கன் சிறைப்பட்டதிலே மிக்க மகிழ்ச்சி யடைந்தார். அவனையழைத்து விசாரித்தார்:

'ஏண்டா, சடைக்கா, இத்தனையும் உண்டோதான்?
என்னை வணங்காமல் என்பாதங் காணுமல்
நாட்டிமைக ளாகத் தானிருந்தா யேசடைக்கா !'

என்று கேட்டார். சிறைப்பட்டிருந்த போதிலும், சடைக்க னுடைய மறவ வீரம் குன்றவில்லை: சிறை உடலுக்குத் தானேயொழிய, உள்ளத்துக்கு ஏது?

'ஆண்டவனே, இப்போ அடியேன்சொல் விண்ணப்பங் [கேள்.
என்மருகன் வன்னி இருந்தானே யாமாகில்,
தேவரீர் பாதம் தெரிசிக்க மாட்டேன்யான்'

என்றான். உண்மைதானே? வன்னியிருந்த வரையிலே நாயக்கர் படையத்தனையும் ஓட்டந்தானே? ராமப்பய்ய னுடைய வீரம் சிறிதும் வன்னியினிடம் பலிக்கவில்லை. தெய் வச் செயலாக, வன்னி இறக்கவே, சடைக்கன் சமாதானம் பேசிவந்து சிறைப்பட நேர்ந்தது. ஆகவே, எந்த விதத்தில் அவன் தோற்றவன்?

அவனுடைய இறுமாப்பு திருமலை நாயக்கருக்குப் பிடிக்க வில்லை. விலங்கிட்டு அவனைக் கொடிய சிறையில் அடைத்து விட்டார்.

ஆனால், சேதுநாட்டு மறவர் எளிதிலே நாயக்கருக்குக் கீழ்ப்படிந்து விடவில்லை. அங்கங்கே கலகங்களும் போர்களும் மலிந்தன. அன்றியும், வட நாட்டிலிருந்து சுவாமி தரிசனத்துக்காக இராமேச்சுரம் செல்லும் பைராகிகளுக்கு இந்த நிலை மிக்க இடையூரு யிருந்தது. முன்னமே, சேதுபதியின் ஆளுகையில் அவர்களுக்கு எல்லா வசதியுமிருந்தது. ஆனால், இப்போதோ கொலையும் கொள்ளையும் மலிந்தன. சேதுபதியன்றி வேறெவருக்கும் பணியாத மறவர், யாத்திரையாக வந்த வட நாட்டாரையும் துன்புறுத்தினர். இவற்றின் பயனாக, இந்தப் பைராகிகள் திருமலை நாயக்கரிடம் சென்று, தங்கள் நிலையையும் சேது நாட்டின் நிலையையும் எடுத்துக்கூறி, சடைக்கனைச் சிறைவிட்டால்தான் தங்களுக்கு இராமேச்சுர தரிசனம் கிடைக்குமென்று சொல்லி வேண்டினார்கள். திருமலையும், அவர்கள் விரும்பியபடியே சடைக்கனைச் சிறை நீக்கி, வரிசைகளெல்லாந் தந்து, சேது நாட்டை யாளும்படி அனுப்பிவிட்டார்.

(கவிஞர் இந்த வரலாற்றின் கடைசிப் பகுதியை வேறு விதமாகச் சொல்லுவார். சிறையிலிருந்த சடைக்கனுடைய விலங்குகள் திருமாலின் அருளாலே தெறித்துவிழுந்தனவாம். இதையறிந்த திருமலை, சடைக்கனுக்கு மாயன் கருணையிருப்பதையுணர்ந்து அவனைக் கொண்டாடிச் சிறை நீக்கி ஆட்சிதந்து அனுப்பிவிட்டார் என்பது அவர் கூற்று.)

இச் சடைக்கன் சேதுபதியே சேதுநாட்டைச் சுதந்திர நாடாக ஆண்ட மறவ வீரருள் கடைசியானவன். இவனுக்குப் பிறகு, அந்நாடு மதுரை நாயக்கருக்கு உட்பட்ட நாடாக ஆகிவிட்டது.

[சடைக்கத்தேவன் வரலாற்றைக் கூறும் 'இராமப்பய்யன் அம்மானை' என்ற நூல் ராவ்சாகிப்-எஸ். வையாபுரிப் பிள்ளையவர்களால் பதிப்பிக்கப்பெற்று சென்னைச் சர்வகலாசாலைப் பிரசுரமாக வெளிவருகிறது.]

நாட்டுக் கதைகள்

எஸ். வி. வி.

நம் நாட்டில் வெகு சாதாரணமாய் வழங்கி வரும் வேடிக்கைக் கதைகளில் இரண்டை இங்கு எழுதுகிறேன். இம்மாதிரிக் கதைகள் நம் தேசத்தில் எங்குப் பார்த்தாலும் சிதறிக் கிடக்கின்றன. தற்காலத்தவர்கள் அவைகளில் உற்சாகம் காட்டுவதில்லை. அவைகளைப்பற்றி இகழ்ச்சியாகப் பேசுகிறவர்களும் இருக்கிறார்கள். 'இவை என்ன கதைகள்?' என்று உதட்டைத் திருப்புவார்கள். ஆங்கில வழியாக வந்தால்தான் எதற்கும் நம் நாட்டில் இப்பொழுது மதிப்பு ஏற்படுகிறது.

மேல்நாட்டார் ஒருவர் நம் தேசத்துக்கு வந்து நாட்டுப் பாட்டுக்களின் ருசியை விளக்கினார். இப்பொழுது நாட்டுப் பாட்டுக்கள் கரும்பு படுகிறபாடு படுகின்றன. அதுவரையில் வெகு சந்தோஷம்.

நாட்டுக் கதைகளிலும் அம்மாதிரி உற்சாகம் கிளம்ப வேண்டும் என்பது என்னுடைய அவா. இவற்றில் சிலவற்றை நான் ஆங்கிலத்தில் எழுதியிருந்தேன். அவைகளை லண்டனில் பி. பி. ஸி.க்காரர்கள் படித்துவிட்டு அவைகளை பி. பி. ஸி.யில் ஒலிபரப்ப வேண்டுமென்று என் அனுமதியைக் கோரினர். இப்பொழுது ஒன்றரை வருஷ காலமாக அவை லண்டனில் ஒலி பரப்பப்பட்டு வருகின்றன.

இந்த ஒலி பரப்பை வெகு உற்சாகத்தோடும் வியப்போடும் இங்கிலாந்தில் கேட்கிறார்கள் என்றும் இதனால் இந்தியாவுக்கு ஒரு மதிப்பு உண்டாயிருக்கிறதென்றும் பி. பி. ஸி.க் காரர்கள் எனக்குத் தெரிவித்திருக்கிறார்கள்.

இங்கு எழுதப்பட்டிருக்கும் இரண்டு கதைகளும் சிலருக்கு முன்னமேயே தெரிந்திருக்கலாம். அனேகருக்குத் தெரியாமலும் இருக்கலாம். இவைகளை மறுபடிச் சொல்வதில் என்னுடைய முக்கிய நோக்கம், இவைகளை வாசகர்கள் மறுபடியும் ஊன்றிக் கவனிக்க வேண்டுமென்பதே.

தற்காலத்தில் சிறு கதைகள் அதிக செல்வாக்கு பெற்றிருக்கின்றன. அவைகளுக்கு லக்ஷணங்களும் ஏராளமாய் வரையப்பட்டிருக்கின்றன.

இந்த நம் நாட்டுக் கதைகள், ஜோடிப்பிலாவது, கதைப் போக்கிலாவது, விசேஷ லக்ஷணமாகச் சொல்லப்படும் அற்புத முடிவிலாவது பிற கதைகளுக்குப் பின்வாங்கியவையா என்று கவனிக்கவேண்டும். இம்மாதிரிக் கதைகளை நம்மவர்கள் தேடித் தொகுத்துவைக்கவேண்டும் என்று வற்புறுத்துவதும் என்னுடைய மற்றொரு நோக்கம்.

முதல் கதை

இது ஒரு வெகுளியைப் பற்றியது.

பட்டப்பகல். வெயில் கடுமையாகக் காய்ந்து கொண்டிருந்தது. அக்கிரகார வீதியில் தெருவோடு ஒரு பிராமணன் போய்க்கொண்டிருந்தான். வெயிலின் கொடுமை தாங்காதவனாய் ஏதாவது ஒரு வீட்டுத் திண்ணையின்மேல் சற்றுக் களைப்பாறிவிட்டுப் போகலாமென்று அவனுக்குத் தோன்றியது. செல்வம் வளர்ந்து நாகரிகம் முதிர்ந்திருக்கும் இந்தக் காலத்தில்தான் வீட்டுப் பக்கம் ஒருவரும் அண்டாதபடி

தெருப் பாகத்தை இரும்புக் கிராதி போட்டு அடைத்து விடுகிறதும், பங்களாவாயிருந்தால் தோட்டத்து வெளி கேட்டைப் பூட்டித் தோட்டத்திற்குள் காவலுக்காக ஒரு வேட்டை நாயை அலையவிடுகிறதுமான உன்னதப் பழக்கங்கள் ஏற்பட்டிருக்கின்றன. ஆனுல், முன் காலத்தவர்கள் வீட்டையமைப்பதிலும் ஒரு பரோபகாரச் சிந்தனையைக் காட்டிவந்தனர். வீட்டின் முன்புறத்தில் அகன்ற குறடிருக்கும். அதற்கடுத்தாற்போல் வாசற்படிக்கு இரண்டு பக்கங்களிலும் இரண்டு திண்ணைகள் இருக்கும். திண்ணைகளிலும் தலையணையாக உபயோகப்படும் பொருட்டு மேடாகத் திண்ணை நிகளத்திற்குச் சுண்ணும்பினல் கட்டப்பட்டிருக்கும். இதற்கு வேடிக்கையாக 'மாப்பிள்ளைத் தலையணை' என்றுகூடச் சொல்லுவார்கள்.

இந்தத் திண்ணைகளில் வழிப்போக்கர் யார் வேண்டுமானுலும் தாராளமாய் வந்து படுத்துக்கொள்ளலாம்.

தெருவோடு போய்க்கொண்டிந்த பிராமணன் களைப்பாறுவதற்காக ஒரு வீட்டுத் திண்ணையின்மேல் போய்ப் படுத்தான். தெற்குப் பார்த்த வீடு. தெருவில் வளர்க்கப்பட்டிருந்த வேப்பமரத்திலிருந்து நிழலும் குளிர்ந்த காற்றும் வந்துகொண்டிருந்தது. அந்த ஆரோக்கியம் அவனுடைய வறுமையை நினைப்பூட்டியது. 'செல்வம் இருந்தால் இம்மாதிரி போகத்தை நாமும் அனுபவிக்கலாம். செல்வம்தான் எப்படிக் கிட்டுமோ, எங்கிருந்து கிட்டுமோ ?' என்று பெருமூச்சுவிட்டான்.

அந்த வீட்டிற்குள்ளிருந்து வயது முதிர்ந்த ஒரு ஸ்திரீ வெளியில் வந்தாள். படுத்திருந்த பிராமணனை உற்று நோக்கினுள்.

"நான் ஒரு வழிப்போக்கன் அம்மா! வெயில் கடுமையாயிருந்ததால் சற்றுக் களைப்பாறிவிட்டுப் போகலாம் என்று

படுத்தேன்" என்று பிராமணன் தானுகவே அந்தம்மாளிடம் சொன்னுன்.

"சுகமாய்ப் படுத்துச் கொள்ளுங்கள் சுவாமி. வீட்டை நாங்கள் தலையில் கட்டிக் கொண்டா போகப்போகிருேம்? சௌக்கியமாகப் படுத்துக் கொள்ளுங்கள்" என்ருள் அந்த அம்மாள்.

அந்த ஸ்திரீ உபசாரமாகப் பேசினதைக் கண்டு, ரொம்பவும் நல்லவள் போலிருக்கிறது என்று எண்ணி, "சில்லென்று கொஞ்சம் தீர்த்தம் கொடுக்கிறீர்களா அம்மா?" என்று பிராமணன் கேட்டான்.

"ஆகா, தீர்த்தத்திற்கென்ன? கொஞ்சம் மோர் வேண்டுமாஞலும் கொடுக்கிறேன்" என்ருள் அந்தம்மாள்.

"மிகவும் நல்லதாய்ப் போய்விட்டது. ஒரு உப்புக்கல்லும் துளி பெருங்காயமும் போட்டுக்கொண்டு வந்தால் இன்னும் விசேஷமாயிருக்கும்" என்ருன் பிராமணன்.

கொஞ்சம் இடம் அகப்பட்டால் அதை உபயோகப்படுத்திக் கொள்ளவா பிராமணனுக்குத் தெரியாது?

அந்தம்மாள் மோர் கொண்டுவந்து கொடுத்தாள்.

"சுவாமி இருப்பிடம் எந்தூரோ?" என்று அந்தம்மாள் கேட்டாள்.

"நான் இருப்பது ஸ்ரீவைகுண்டம் அம்மா."

ஸ்ரீ வைகுண்டம் என்று அந்தப் பிராமணன் சொல்லவே அந்தம்மாளின் முகம் மலர்ந்தது.

"தாங்கள் ஸ்ரீ வைகுண்டமா சுவாமி? அப்படியானுல் அங்கே எங்கள் செங்கமலத்தைப் பார்த்திருக்கிறீர்களோ? அவள் பரமபதம் போய்ச்சேர்ந்து இரண்டு வருஷங்களாயின சுவாமி. இரண்டு நாட்கள்கூட ஒரு ஜுரம் என்ருே தலைவலி என்ருே அவள் படுத்துக் கொண்டிருந்ததில்லை.

பத்துமணிக்கு மார் அடைக்கிறமாதிரி இருக்கிறது என்ருள். பன்னிரண்டு மணிக்குள் இறந்து வைகுண்டம் போய்விட்டாள். அதிலிருந்து எனக்கு அவள் துக்கந்தான், சுவாமி'' என்று அந்தம்மாள் மூக்கைச் சிந்திப் போட்டாள்.

"ஓகோ, இப்படியும் ஒரு வெகுளி உலகத்திலிருக்கிருளா? இறந்துபோன செங்கமலம் ஸ்ரீ வைகுண்டத்திலா இருக்கிருள்!'' என்று பிராமணன் தனக்குள் சிரித்துக்கொண்டான்.

"ஸ்ரீ வைகுண்டத்தில் செங்கமலம் என்று ஒரு பெண் இருக்கிருள். அவள் உங்கள் பெண்தானு? அப்படியா? அய்யோ பாவம், ஏதோ இருக்கிருள்!'' என்று பிராமணன் பெருமூச்சு விட்டான்.

"என்ன, சுவாமி, அவளைப்பற்றி இழுத்தாற்போல் சொல்லுகிறீர்கள். என்ன சங்கதி, சொல்லுங்களேன்?''

"என்னத்தைச் சொல்லுகிறது? ஏதோ இருக்கிருள். அவ்வளவைத்தான் சொல்லலாம். கட்டிக்கொள்ளப் புடவை இல்லாமல் போட்டுக்கொள்ள ஒரு நகையில்லாமல் துக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது குழந்தை. நீங்கள் இவ்வளவு செல்வவந்தர்களா யிருக்கும்பொழுது அந்தப் பெண் ஏனம்மா அப்படிக் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்க வேண்டும்?''

"அப்படியா சுவாமி, எங்கள் செங்கமலம் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிருளா? அதைக் கேட்க என் மனது தாளவில்லை சுவாமி. அவள் புடவைகள் நகைகள் எல்லாம் இங்கே அப்படியேதான் இருக்கின்றன சுவாமி. அவைகளைக் கொடுக்கிறேன். எடுத்துப் போய் அவளிடத்தில் கொடுத்துவிடுகிறீர்களா சுவாமி? உங்களுக்குப் புண்ணியமாயிருக்கும்.''

" இது என்ன அம்மா ஒரு கஷ்டம் ? ஒருத்தருக்கொருத்தர் இவ்வளவு உபகாரம் கூடவா செய்யக்கூடாது ? கொடுத்தால் கொண்டுபோய்க் கொடுத்துவிடுகிறேன். நான் அவசரமாய்ப் போகவேண்டும், கொடுப்பதானல் கொடுங்கள் " என்ருன் பிராமணன்.

நகைகளையும் புடவைகளையும் மூட்டையாய்க் கட்டிக் கொண்டுவந்து கொடுத்தாள் அந்த அம்மாள்.

அதைப் பிராமணன் வாங்கிக்கொண்டு " நான் பத்திரமாய் இவைகளை அவளிடத்தில் கொண்டுபோய்க் கொடுத்துவிடுகிறேன். செங்கமலத்தைப்பற்றி நீங்கள் இனி ஒரு க்வலையும் படவேண்டியதில்லை. நான் அவளை ஒரு கண் பார்த்துக் கொள்ளுகிறேன் " என்று சொல்லிவிட்டுப் பிராமணன் வெகு வேகமாய்க் கிளம்பிப் போய்விட்டான்.

அவன் சற்றுத் தூரம்கூடப் போயிருக்கமாட்டான் : அதற்குள் அந்தப் பெண்மணியின் புருஷன் வீடுவந்துசேர்ந்தான். " கேட்டீர்களா ! நம் செங்கமலம் ஸ்ரீ வைகுண்டத்தில் துணி இல்லை நகை இல்லை என்று ரொம்பவும் கஷ்டப் பட்டுக்கொண்டிருக்கிருளாம். அங்கிருந்து ஒரு பிராமணர் வந்திருந்தார், அவர் சொன்னுர். என் மனது கேட்கவில்லை. புடவைகளையும் நகைகளையும் இப்பொழுதுதான் அவரிடத்தில் கொடுத்தனுப்பினேன் " என்று வெகு உற்சாகத்தோடு சொன்னுள்.

புருஷனுக்குப் பற்றிக்கொண்டு வந்தது ஆத்திரம். அவளைக் கடிந்துகொண்டு காலதாமதம் செய்வதால் பயன் இல்லையென்று எண்ணி, " அந்தப் பிராமணன் எந்தப் பக்கம் போனுன் ? " என்று கேட்டான். அதைத் தெரிந்து கொண்டு, நடந்து போனுல் அவனைப் பிடிக்க முடியாதென்றெண்ணி, அவனுக்கு இருந்த குதிரையின்மேல் ஏறிக் கொண்டு அந்தப் பிராமணனைத் துரத்திச் சென்ருன்.

குதிரையின்மேல் வருபவன் கிட்ட நெருங்கவே, பிராமணன் ஒரு மரத்தின்மேல் ஏறிக்கொண்டு விட்டான். புருஷனும் குதிரையைக் கீழே கட்டிவிட்டு மரத்தின்மேல் ஏறினன். மரத்தின்மேலிருந்த பிராமணன் திடீர் என்று கீழேகுதித்து, குதிரையின் மேலேறிக்கொண்டு விட்டான் சவாரி.

புருஷன் கீழே வந்து "சுவாமி சுவாமி, அந்தக் குதிரையையும் செங்கமலத்தினிடத்தில் கொடுத்து விடுங்கள். எங்கேயும் அந்தப் பெண்ணை நடந்து போக வேண்டாம் என்று சொல்லுங்கள்" என்று ஓடுகிறவன் பின்னல் சாமர்த்தியமாகக் கத்தினன்!

இரண்டாவது கதை

இந்தக் கதை பெண்பிள்ளைகளின் சமயோசித சாமர்த்தியத்தைக் குறிப்பது.

ஓர் ஊரில் ஒரு நாயகன் நாயகி யிருந்தார்கள். நாயகனுக்கு நாயகியினிடத்தில் ரொம்பப் பயம். பழையது - பழுதைக் கயிறு என்று ஒரு கதை சொல்லுவார்கள்: நாயகன் நாயகியிடத்தில் போய், "கொஞ்சம் பழையது இருக்குமா?" என்று கேட்டானும். "என்ன?" என்று அவள் தடபுடலாய்ப் பேசினளாம். "பழுதைக் கயிறு இருக்குமா என்று கேட்டேன்" என்று அவன் தலையைச் சொறிந்துகொண்டே நழுவினனும்.

சாதாரணமாக இவ்வளவுதான் இந்தக் கதையைச் சொல்லுவது. நான் இன்னும் கொஞ்சம் வேடிக்கை சேர்த்துக் கேட்டிருக்கிறேன். தெருப் படிகளைவிட்டு இறங்கி, "பழையதுதான் கேட்டேன். என்னை என்ன செய்து விடுவாயாம்?" என்று நாயகன் சொன்னன் என்றுகூடச் சேர்த்துச் சொல்வார்கள்.

நம் கதையில் வருகிற நாயகனும் இந்த ரகத்தைச் சேர்ந்தவன். அந்த ஊரில் ஒரு சன்னியாசி வந்திருந்தார். அவருக்குத் தன் வீட்டில் ஒருநாள் பிக்ஷை பண்ணிவைக்க வேண்டுமென்று அவனுக்கு ஆசையாயிருந்தது. இதைத் தன் மனைவியினிடத்தில் சொல்லி எப்படி அவளை இதற்கு இணங்க வைக்கிறது?

> இருந்து முகம்திருத்தி ஈரோடு பேன்வாங்கி
> விருந்து வந்ததென்று விளம்ப - வருந்திமிக
> ஆடினாள், பாடினாள், ஆடிப் பழமுறத்தால்
> சாடினாள், ஓடினான் தான்

என்று ஒரு ஹாஸ்யக் கவி சொல்லியபடி இவனுடைய மனைவியின் குணம்.

இருந்தாலும் மனைவி, முகமலர்ச்சியுடன் இருந்த சமயம் பார்த்து விஷயத்தைச் சொன்னான். அவளும் 'சரி' என்று ஒத்துக்கொண்டு விட்டாள்.

அவனுக்குச் சந்தோஷம் மேலிட்டு விட்டது. அன்றைய இரவே சன்னியாசியிடம் போய், நமஸ்கரித்து, மறுநாள் தன் வீட்டில் பிக்ஷை செய்யவேண்டுமென்று வேண்டிக் கொண்டான். அவரும் சம்மதித்தார்.

மறுநாள் காலையில் நாயகன் தன் மனைவியிடம் போய் "சமையலெல்லாம் ஆய்விட்டதா? சன்னியாசியை அழைத்துக்கொண்டு வரலாமா?" என்று கேட்டான். "அழைத்துக்கொண்டு வாருங்களேன்" என்றாள் அவள். சன்னியாசி வீடுவந்து சேர்ந்தார். சன்னியாசிகள் பல் தேய்ப்பதற்கு மா இலையைத்தான் உபயோகிக்கிறதாம். மா இலை அங்கு இல்லாமற் போகவே, பக்கத்தில் இருந்த தோப்புக்குப் போய் மா இலை கொண்டு வருவதற்காக நாயகன் சென்றான்.

அதற்குள் மனைவி ஓர் உலக்கையை எடுத்துச் சன்னியாசி எதிரிலே கழுவினாள். அதற்கு மஞ்சள் குங்குமம் இட்டாள். உலக்கை நுனியில் பூவைச் சுற்றினாள்.

இவைகளை எல்லாம் பார்த்துக்கொண்டிருந்த சன்னியாசிக்கு ஒன்றும் விளங்கவில்லை.

"எதற்கம்மா, இந்த உலக்கைக்கு இவ்வளவு சிங்காரம் செய்கிறாய்?" என்று சன்னியாசி கேட்டார்.

"புருஷன் என்று ஒருவனைக் கட்டிக்கொண்டால் பாபமோ புண்ணியமோ, அவர் சொன்னபடி ஆடவேண்டியது தானே? அய்யோ மகா பாபமாச்சுதே என்று நாம் சொல்லுவதற்கு இருக்கிறதா? என் தலைவிதி, என் கையால் இந்த உலக்கையைச் சிங்காரித்து வைக்கிறேன்" என்று, வெறுப்புடன் அந்த வேலையை அவள் செய்வதாகக் காட்டிக் கொண்டாள்.

சன்னியாசிக்கு இன்னும் சந்தேகம் அதிகமாய்விட்டது.

"என்னவென்றுதான் விட்டுச் சொல்லேன்" என்றார்.

"நான் சொல்லுவதற்கில்லை சுவாமி, சொல்லுவதற்கில்லை. சொன்னால் புருஷனுக்குத் துரோகம் செய்தவளாவேன்" என்று அந்தப் பெண்மணி சாகசம் செய்துகொண்டே கதையைச் சொன்னாள்.

"பத்துச் சன்னியாசிகளுக்குப் பிக்ஷை செய்துவைத்து அவர்கள் மண்டையை இந்த உலக்கையால் உடைத்தால் அவர் உத்தேசித்த காரியம் கைகூடும் என்று யாரோ அவருக்குச் சொல்லிவிட்டார்கள். அதையே வெகுவாய் நம்பி அம்மாதிரிச் செய்துகொண்டு வருகிறார். இதுவரையில் ஒன்பது சன்னியாசிகள் ஆய்விட்டது; நீங்கள்தான் பத்தாவது" என்றாள்.

சன்னியாசி வயிற்றில் 'பகீர்' என்றது. "அம்மணி! என்னைக் காப்பாற்ற வேண்டும்" என்று அவள் காலில் விழுந்தார். அவள் கொல்லைக் கதவைத் திறந்துவிட்டாள். சன்னியாசி ஓட ஆரம்பித்தார்.

அதற்குள் நாயகன் மா இலையுடன் வீடுவந்து சேர்ந்தான். "எங்கேடி சன்னியாசி?" என்று கேட்டான்.

"உங்கள் சன்னியாசியின் அழகைச் சொல்லுங்கள்! சன்னி யாசியாம், சன்னியாசி! எள்ளுப்பொடி இடிப்பதற்காக உலக்கையை அலம்பிக்கொண்டிருந்தேன்! அந்த உலக் கையைத் தனக்குக் கொடுக்கும்படியாகக் கேட்டார். புருஷனைக் கேட்காமல் கொடுக்கமுடியாது என்றேன். கோபித்துக்கொண்டு சரேல் என்று எழுந்து கொல்லைக் கதவைத் திறந்துகொண்டு போய்விட்டார். இன்னும் கொஞ்சத் தூரம் கூடப் போயிருக்க மாட்டார். வேண்டு மானால் உங்கள் சன்னியாசி அழகை நீங்களும் போய்ப் பாருங்கள்" என்றாள் அந்தப் பதிவிரதா சிரோன்மணி.

நாயகனுக்குக் கோபம் வந்துவிட்டது: "அடி பாவி! இந்த அற்ப உலக்கைக்காகவா சன்னியாசியிடத்தில் அபசாரப் பட்டாய்! அந்த உலக்கையை எடு. நான் அதைக் கொண்டு போய்க் கொடுத்து அவரைச் சமாதானப்படுத்தி அழைத்துக் கொண்டு வருகிறேன்" என்று சொல்லி உலக்கையைக் கையில் எடுத்துக்கொண்டு, கொல்லைப்புறமாய்ச் சன்னி யாசியைத் தொடர்ந்து, "சுவாமி சுவாமி" என்று கத்திக் கொண்டே ஓடினான்.

சன்னியாசியோ, உலக்கையும் கையுமாக ஓடிவருபவனைத் திரும்பிப் பார்த்தார்.

"அந்தப் பெண்மணி சொன்னது சரியாய்விட்டதே" என்று உயிருக்குத் தப்பி இன்னும் வேகமாக ஓட ஆரம் பித்தார்!

பண வீக்கமும் பட்டினிப் பெருக்கும்

ஏ. என். சிவராமன்

இப்பொழுது எங்கு போனுலும், முக்கியமாக நகரங்களில், சிலருக்குப் புதுப்பணம் வந்திருப்பதாக நாம் நேரில் காண் கிறேம். இரண்டு வருஷத்துக்கு முன்பு வேலையில்லாமல் கஷ்டப்பட்டுக் கொண்டிருந்த சிலருக்குத் திடீரென்று முப்பது ரூபா சம்பளமும் புதுச்சட்டைகளும் கிடைத்திருப் பதும் நிரந்தரக் காட்சியாக இருக்கிறது. பத்து வருஷ கால மாக அறுபது ரூபா சம்பளத்தில் இருந்தவர்களுக்குப் புது தினுசான உத்தியோகங்களில் ரூ. 300, ரூ. 400 சம்பளம் கிடைப்பதாகவும் கேள்விப்படுகிறேம். பொதுவாகப் பார்க்கப்போனுல் பணப்புழக்கம் (புழுக்கம்?) சற்று அதிகரித்திருப்பதாகவே காண்கிறேம். ஆனுலும் அதே சமயத்தில், "பொதுவாக ஜனங்களுக்குக் கஷ்டம் மிகவும் அதிகரித்திருக்கிறது" என்றும் எல்லோரும் பேசிக்கொள் கிருர்கள்.

பணமும் பசியும் ஏககாலத்தில் அதிகரித்திருக்கிறது. விலை வாசிகள் ஒரேயடியாக அதிகரித்து விட்டதால் பெருவாரி யான மக்கள் தம்மிடமுள்ள பணத்தைக்கொண்டு தமக்குத் தேவையான பொருள்களை முன்போல வாங்க முடிவதில்லை. இம்மாதிரி சமூகத்தில் பணம் அதிகரித்து, தனி மனிதர் களில் பெரும்பாலோருக்குக் கஷ்டம் ஏற்படும் நிலைமையை நாணயப் பெருக்கு அல்லது செலாவணிப் பெருக்கு என்று பொருளாதார அறிஞர்கள் கூறுவார்கள். பெருக்கு என்

பதைவிட, 'வீக்கம்' என்றாலும் தகும். ஆங்கிலத்தில் 'இன்பிளேஷன்' என்று சொல்லுவார்கள். இதைப்பற்றி 'குமரி மல'ரில் ஏற்கெனவே ஒரு கட்டுரை பிரசுரமாயிருக்கிறது. "ஒரு சமூகத்தில் அல்லது நாட்டில் பொது விலை நிலை அதிகமானால் பணம் அதிகமாயிற்று என்றும் பொது விலை நிலை குறைந்தால் பணம் குறைந்தது என்றும் கூறலாம்" என்று அக்கட்டுரையில் காணப்படுகிறது. அப்படியானால் பணம் அதிகரிப்பது நல்லதல்ல என்று ஏற்படுகிறது! இது சிலருக்கு ஆச்சரியமாகத் தோன்றும். ஆகையால் சமூக திருஷ்டியுடன் பார்க்குமிடத்து, 'பணம்' என்பது வேறு, 'செல்வம்' என்பது வேறு என்ற உண்மையை எத்தனைத் தடவை வற்புறுத்தினாலும் தகும்.

உதாரணமாக, 1939 ஆகஸ்டில் ஜனங்களிடையே இருந்த கரன்ஸி நோட்டுகளின் தொகை 170 கோடி ரூபாய். இப்போது இத்தொகை சுமார் 750 கோடியாக இருக்கிறது. அதாவது, பணப் புழக்கம் சுமார் நாலரை மடங்கு அதிகரித்திருக்கிறது. இதே அளவிற்கு நாட்டில் செல்வம் அதிகரித்திருக்கிறதா ? இல்லை. அதனால்தான் இதைச் 'செலாவணி வீக்கம்' என்று ஒரு வியாதிபோல வர்ணிக்க வேண்டியிருக்கிறது.

இந்த வீக்கம் எப்படி ஏற்பட்டது ? பிரதிப் பிரயோசனம் எதையும் எதிர்பார்க்காமல் சர்க்கார், நோட்டுக்களை அச்சடித்துச் சிலரிடம் தானம் செய்ததா ? இல்லை. ஜனங்கள் தம்மிடமுள்ள வெள்ளி ரூபாய்களை சர்க்காரிடம் கொடுத்து அதற்குப் பதிலாக நோட்டாக வாங்கிக் கொண்டார்களா ? அதுவுமில்லை. ஏனென்றால், சர்க்காரிடம் கையிருப்பு வெள்ளி ரூபா 600 கோடி அதிகரிக்கவில்லை. சர்க்கார் அன்றாடச் செலவுக்காக - சம்பளப் பட்டுவாடா முதலியவற்றிற்காக அல்லது அதன் தேவைக்கு - ஜனங்களிடமிருந்து வாங்

கும் பொருளுக்கு விலையாக இந்த நோட்டுகளை வழங்கிற்று? ஆம் என்று ஒருவாறு சொல்லலாம். ஆனால் அந்த மாதிரிச் சுலபமாகப் பதில் சொல்லிக் கதையை முடித்து விடுவது முழு உண்மையாக விருக்காது. ஏனென்றால், சர்க்கார் எவ்வளவு பணம் செலவிட வேண்டுமென்பதற்கு 'பட்ஜெட்' இருக்கிறது. அந்தச் செலவு முழுதுக்கும் வரியோ, கடனோ வாங்கிக் கொள்வதற்கும் 'பட்ஜெட்'டில் ஏற்பாடிருக்கிறது. செலவிடும் பணம் வரியாகவோ, கடனாகவோ சர்க்காருக்குக் கிடைத்து விடுவதால் புதிதாக இவ்வளவு ஏராளமான நோட்டுக்களை அச்சடித்துத்தான் ஆகவேண்டு மென்பதில்லை. தற்காலிகமாக, சர்க்கார் செலவுக்காக நோட்டு அச்சடித்து வெளியிட்டாலும் ஜனங்கள் வரி செலுத்தும்போதும் சர்க்காருக்குக் கடன் கொடுக்கும் போதும் நோட்டுக்கள் மறுபடியும் சர்க்காரின் பொக்கிஷங்களுக்கே திரும்பி விடுவதால் ஜனங்களிடையேயுள்ள செலாவணியின் அளவு பெருகுவதற்கு வழியில்லை. அப்படியானால் இந்தச் சுமார் 600 கோடி ரூபாய் நோட்டும் எதற்காக அச்சிடப்பட்டது? யாரிடம் கொடுக்கப்பட்டது?

'பட்ஜெட்டு'க்குப் புறம்பாகச் சர்க்கார் சில புதுப்பொறுப்புக்களை ஏற்றுக்கொள்ளும்படி நேர்ந்ததுதான் செலாவணிப் பெருக்கத்துக்குக் காரணம். இந்தப் புதுப் பொறுப்புக்கள் இரண்டு துறைகளில் ஏற்பட்டன. அதில் ஒன்று வெளி நாட்டு வர்த்தகம். இந்த நாட்டிலிருந்து ஏற்றுமதி செய்யப்பட்டுள்ள பொருள்களுக்கு வெளி நாட்டினர் தமது தேசச் செலாவணி மூலம் தமது நாட்டுப் பாங்கிகளில் பணம் செலுத்துகிறார்கள். அந்தப் பாங்கிகள் இங்குள்ள சில பாங்கிகளைக்கொண்டு ஏற்றுமதி வர்த்தகங்களுக்கு ரூபாயாகக் கொடுக்கச் சொல்லுகிறார்கள். அதேபோல, நாம் வெளிநாடுகளிலிருந்து பொருள்களை இறக்குமதி செய்தால் இங்குள்ள பாங்குகளில் பணம் செலுத்துகிறோம்.

இந்தப் பாங்கிகள், வெளி நாட்டிலுள்ள பாங்கி களைக்கொண்டு அங்குள்ள ஏற்றுமதி வர்த்தகர்களுக் குப் பணத்தை பட்டுவாடா செய்விக்கிறார்கள். ஏற்று மதியின் பண மதிப்பும் இறக்குமதியின் பண மதிப்பும் சமமாக இருந்தால் இரு நாட்டுப் பாங்கர்களிடையேயும் பற்றும் வரவும் சரிக்கட்டிப் போய்விடுகிறது. இவ்வாறு சரிக்கட்ட முடியாது போனால் பாங்கர்கள் தமக்கு வர வேண்டிய பணத்துக்குத் தங்கத்தை வரவழைத்து இங்கு விற்றுக் கொள்ளலாம். (தங்கம் கப்பலில் அதிக இடத்தை அடைத்துக்கொள்ளா தாகையால் அதை வரவழைப்பதில் அதிகச் செலவேற்படாது). இவ்வாறு பொருள் ஏற்று மதியானது இறக்குமதியைவிட அதிகரித்துத் தங்கத்தை இறக்குமதி செய்வதற்கும் தடையேற்படுமானால் நாட்டில் செலாவணியைப் பெருக்கக் காரணம் பிறந்து விடுகிறது. அது எப்படி என்று பார்ப்போம்.

தங்கத்தை வரவழைக்க முடியாதபோது பாங்கிகள் தமது வெளிநாட்டுப் பணத்தை அந்நாட்டின் தலைமைப் பாங்கிக்கு மாற்றி அதை இந்நாட்டுத் தலைமைப் பாங்கில் (ரிஸர்வ்) ஈடாகக் காட்டிப் பணம் கேட்கிறார்கள். அப்போது ரிஸர்வ் பாங்கி சர்க்காரின்பேரால் நோட்டுக்களை அச்சிட்டு வழங்கு கிறது; வெளிநாட்டுப் பணத்தைக் கடன் பத்திரங்களாக மாற்றி இருப்பு வைத்துக் கொள்ளுகிறது. வெளிநாட்டுக் கடன் பத்திரங்களாக மாற்றுவதென்றால் வெளிநாட்டுக்குக் கடன் கொடுப்பதென்பதுதான் அர்த்தம். இப்போதைய செலாவணிப் பெருக்கத்தில் ஒருபகுதி இம்மாதிரி ஏற்பட் டதுதான். அதாவது, இந்தியாவில் தனி நபர்களுக்கு வெளி நாட்டிலிருந்து கிடைக்க வேண்டிய பணத்தை இந்திய சர்க் கார் வசூலித்து வெளிநாட்டில் கடனாகக் கொடுத்துவிட்டு, இங்கு நோட்டுக்களை அச்சடித்து வழங்கியிருக்கிறது. இந்தி யர் கையில் வந்து சேரவேண்டிய தங்கத்தை இந்தியசர்க்கார்

பிரிட்டிஷ் சர்க்காரின் தேவைக்காகக் கடனுகக் கொடுத்திருக்கிறது என்று சொல்லலாம். ஆனல், இதில் பரிதாபமான விஷயமொன்றிருக்கிறது: இந்த பிரிட்டிஷ் கடன் பத்திரங்களை விற்கும்பொழுது, இதேயளவு தங்கம் கிடைக்குமாவென்பது சந்தேகம். உதாரணமாக, இப்போது பிரிட்டனில் சர்க்கார் நிர்ணயித்துள்ள விலைப்படி ரூபாய் 27-க்கு ஒரு சவரன் கிடைக்கவேண்டும். யுத்தத்திற்குப் பின் இந்திய சர்க்கார் தம்மிடமுள்ள பிரிட்டிஷ் கடன் பத்திரங்களை விற்ருல் இதே விலையில் தங்கம் அகப்படுவது சந்தேகம். ஆகையால், இந்திய சர்க்கார் வைத்துக் கொண்டிருக்கும் 'ஸ்டெர்லிங்' பத்திரங்களின் உண்மையான மதிப்பு குறையத்தான் செய்யும். (லண்டனில் சவரன் விலை சுமார் 27 ரூபாய்க்குச் சமமாக விருக்கும்பொழுது இந்தியாவில் அதற்குச் சுமார் 50 ரூபாயாக விருப்பது யுத்தகால விசித்திரங்களிலொன்ருகும். இங்குச் செலாவணிப் பெருக்கம் எவ்வளவு மிதமிஞ்சிப் போயிருக்கிறதென்பதற்கும் இது ஓர் அடையாளமாகும்.)

செலாவணிப் பெருக்கத்துக்கு இரண்டாவது காரணம், பிரிட்டிஷ் சர்க்காரின் சார்பாக இந்திய சர்க்கார் இங்குப் பல செலவுகளை நிர்வகித்து வருகிறது. பிரிட்டிஷ் அமெரிக்க சோல்ஜர்களின் செலவுகள், பிரிட்டன் அமெரிக்கா இவைகளின் யுத்தத் தேவைகளுக்காக இங்குப் பலவிதமான கட்டிட வேலைகளை நடத்தும் செலவு (விமான நிலையங்கள் முதலியன), யுத்த சப்ளைகள் முதலிய இனங்களில் இந்திய சர்க்கார் ஏராளமான பணம் பட்டுவாடா செய்கிறது. இவையெல்லாம் சர்க்காரின் பட்ஜெட்டுக்குப் புறம்பான செலவுகள். ஆகவே, இதற்கான பணம் வரிமூலமோ கடன் மூலமோ வருவதில்லை. செலாவணிப் பெருக்கத்தின் மூலமே இச்செலவுகள் நடைபெறுகின்றன. இந்தச் செலவுகளை பிரிட்டனிடமிருந்து இப்பொழுது வசூலிக்க முடியாததால்

பிரிட்டனிலேயே 'முதல் முடக்கமாக' இந்திய சர்க்கார் பிரிட்டிஷ் கடன் பத்திரங்களில் போட்டிருக்கிறது. ஆகவே மறைமுகமாக இந்திய சர்க்கார் பிரிட்டிஷ் சர்க்காருக்குக் கடன் கொடுத்துக் கொண்டிருக்கிறதென்பதுதான் தற்போதுள்ள நிலைமை. இந்தக் கடன்தான் ரிஸர்வ் பாங்கின் செலாவணி இலாக்காவில் 'ஸ்டர்லிங் ஸெக்யூரிட்டிகள்' என்ற இனமாகக் காணப்படும் சுமார் 625 கோடி ரூபாய்.

சுமார் 300 கோடி ரூபாய் பிரிட்டனில் 1939க்கு முன் ஏற்பட்டிருந்த கடன் பொறுப்பை மீட்பதில் வினியோகமாயிருக்கிறது. இந்திய சர்க்கார் இவ்வாறு பிரிட்டனுக்குச் சுமார் 900 கோடி ரூபாய் ரொக்க வசதிகள் செய்து கொடுத்ததாலேயே உள் நாட்டில் இவ்வளவு நாணயப் பெருக்கமேற்பட்டது.

இந்த அதிகச் செலாவணி எல்லா ஜனங்களிடமும் பரவியிருந்தால் விலைவாசி உயர்வால் ஏற்படும் கஷ்டம் இவ்வளவு தூரம் அன்றுட வாழ்க்கையைப் பாதித்திருக்காது. பிரிட்டனின் சார்பாக இங்குச் சர்க்கார் செலவு செய்த பணம் சுமார் 400 கோடியிருக்கலாம். இந்தத் தொகையில் பெரும்பகுதி கண்டிராக்டர்கள் மூலம் ஊதாரித்தனமாக நடந்த செலவாகும். யுத்தப்பொருள் கண்டிராக்டர்களுக்குக் கிடைத்து வரும் கொள்ளை லாபத்திலிருந்து இது வெட்ட வெளிச்சமாகத் தெரிகிறது. இந்த அதிகச் செலாவணி முழுதும் சில ஆயிரம் கண்டிராக்டர்களிடமும் தரகர்களிடமும் தங்கியிருக்குமேயொழிய உழைப்பாளர் சமூகத்தை எட்டிப் பார்த்திருக்காது. ஆகையால் இந்தப் பணப்பெருக்கமானது பொருள் உற்பத்தி அதிகரித்ததற்கு அடையாளமாகாது. உண்மையில் பொருள் உற்பத்தி அதிகரித்திருந்தால் விலைவாசிகள் இவ்வளவு உயர்ந்திருக்க முடியாது. இப்போதைய பரிதாபகரமான நிலைமைக்குக்

காரணம் என்னவென்பதை ஒரே வாக்கியத்தில் சொல்லி விடலாம். செல்வம் பெருகாமலே பணம் பெருகியிருக்கிறது.

யுத்த நிமித்தமாகச் சிலருக்கு வேலையும் பிழைப்பும் கிடைத்திருக்கிறதென்பது உண்மையே. ஆனால் இவர்கள் ஈடுபடும் வேலையானது நாட்டில் உற்பத்தியை அதிகரிக்கும் வேலையல்ல. தேசியச் செல்வமென்பது சிலரது சம்பள உயர்வைப் பற்றியதல்ல. விளை நிலம், சுரங்கப்பொருள்கள், இயந்திரங்கள் ஆகிய மூலதனத்துடன் மனித உழைப்பும் சேர்வதால் விளையும் பயன்தான் உண்மையான செல்வம். உற்பத்தியைப் பெருக்கக்கூடிய உழைப்பிற்கு வசதியேற்படுத்துவது தான் செல்வ வளர்ச்சிக்கு வழியாகும், அந்த வழியை ஏற்படுத்தும் கடமை சர்க்காருடையது. இந்நாட்டின் அரசியல் நிர்வாகம் இந்த நோக்குடன் நடக்கவில்லை. வெளிநாட்டில் தேங்கிக்கிடக்கும் இந்தியப் பணத்தை உபயோகித்துப் புதுவகையான பொருள்களைத் தயாரிக்கும் இயந்திரங்கள், இயந்திரங்களையே தயாரிப்பதற்குரிய கருவிகள் முதலியவற்றை இறக்குமதி செய்திருந்தால் செலாவணி இவ்வளவு தூரம் வீங்கி அவதி விளைவித்திராது. செலாவணிப் பெருக்கத்திற்குத் தகுந்தபடி உற்பத்திபெருகி பணம் எல்லோரிடமும் பரவியிருக்கும். செலாவணிப் பெருக்கத்தால் ஏற்படும் அனர்த்தம் ஒழிந்து செல்வம் பெருகியிருக்கும். ஆனால் அதற்கான அரசியல் பொருளாதார சுதந்திரம் இந்நாட்டிலில்லை. யுத்தத்துக்குப் பிறகும் இதே அடிமைத்தனம் நீடிக்குமாயின் - நாட்டின் கதி என்னவாகுமென்பதைச் சொல்லவே வேண்டியதில்லை.

சீனத்துக் கவிதை

ம. பெரியசாமி

சீனத்துக் கவிதை செவிக்கும் உள்ளத்திற்கும் இன்பமளிப் பதோடு கண்ணுக்கும் இன்பமளிக்கக்கூடிய சித்திர எழுத் துக்களில் எழுதப்படுகின்றது. கவிதையைத் தாங்கி நிற்கும் பட்டுத் துண்டமும், பீங்கான் கிண்ணமும், கிண்ணத்தில் வரையப்படும் ஓவியமும், அவற்றிற்குமேல் ஓவியம் போன்ற எழுத்துக்களும் பார்க்கப் பெருவிருந்தாக விளங்குகின்றன. அவற்றையெல்லாம் மொழிபெயர்ப்பில் தர இயலாது. மேலும், கவிதையை வேறு மொழியில் பெயர்ப்பதே கவிதை வரம்பை மீறிய காரியமாகும். ஆதலால், இங்குச் செய்வ தெல்லாம், சீனக் கவியுள் செறிந்து பொதிந்திருக்கும் உணர்ச்சியின்பத்தை மட்டும் ஓரளவு உரைநடைச் செய்யு ளாகத் தருவதேயாகும்.

சீனக் கவிதைகள், சில சொற்களில் பல எண்ணங்களை வருவிப்பனவா யிருக்கின்றன. மேலாகப் பார்க்கும்பொழுது அவைகளிற் புதைந்து கிடக்கும் எண்ணங்கள் புலப்படா. சாவதானமாகத் திருப்பித் திருப்பிப் படிக்கவேண்டும்; சிந் திக்கவேண்டும். அப்பொழுதுதான் அவைகளில் மறைந் திருக்கும் கவிதையழகு பெருகி விளங்கும். எந்த உயர்ந்த கவிதையும் இவ்வாறுதான் அமைந்திருக்கின்றது.

உதாரணமாகக் கீழ்வரும் கவியைப் பார்ப்போம் :

தனிமை

ஒளி பாய்கின்ற சாளரத்து
ஒருபுடை வீற்றிருப்பவர் யார்?
நாங்கள் இருவர் - யானும் எந்நிழலும் :
விளக்கொளி இறந்ததும்
நிழலும் என்னை நீங்கிடும்.
ஐயகோ துன்பமே!
எத்துணைத் தனிமையேன்!

இவ்வரிகளில் எத்துணை அவலம் புகுந்திருக்கின்றது! உறக்கம் பிடியாது தன்னந் தனியனாய்ச் சாளரத்தின் வழியாக எதிர்பார்த்திருக்கிறானே—யாரை? அவள் வருவாளா? அல்லது அவன் ஆசையை நிறைவேற்ற முடியாத தூரப் பயணம் சென்றுவிட்டாளா? நிழல்தானா இப்பொழுது அவனுக்குத் தோழன்? அந்நிழலும் இரவு முழுதும் உடனிருப்பதில்லையே!

கவியைப் படிக்கப் படிக்க, நினைக்க நினைக்கத் தனிமையும் அது தரும் துயரமும் தெளிவாகின்றன.

காதல் - தேனையும், காதல் - கனலையும் பாட விரும்பாத கவி எந்நாட்டிலுமிரான். சீனத்துக் கவிஞர்களும் இதற்கு விலக்கல்ல. ஆனால் அவர்கள் மணத்திற்குப்பின் ஏற்படும் பிரிவு, ஊடல் முதலியவற்றைப் பற்றியே அதிகம் எழுதியிருக்கிறார்கள். சீனாவிலும் பெற்றோர்களாலேயே முடிவு செய்யப்பட்டு மணம் நிகழ்வது இதுவரை வழக்கமாக இருந்து வந்ததால், மணத்திற்கு முன்பு ஏற்படும் காதல் உணர்ச்சிகளை விரிக்கும் பாடல்கள் அதிகம் இல்லை போலும்.

வாராதிருத்தல்

1. காலையில் தவருது,
மாலையில்த் தவருது,
வந்திடும் கடல்திரை நாளும் -
ஆனல்
நீ தான் வருவதில்லை.

2. காலத்தில் வந்து
காலத்தில் போவதில்
பறவைகளும் தவரு -
வீடுநோக்கி நீ வருவதோ நிலையிலை.

குறித்த காலத்தில் கணவன் வராததால் துயருழந்தாள் மனைவி.

முதல் முழுநிலா இரவு

1. சென்றயாண்டில் முதல்முழுநிலா இரவில்
பூக்கடை தன்னில் விளக்குகள் ஒளிர்ந்தன ;
மரங்களின் உச்சியில் மணிநிலா வந்தது ;
காதலி தன்னைக் கண்டனன் யானே.

2. இந்த யாண்டில் இம்முதல் நிலவில்
நிலாவும் விளக்கும் நிமிர்ந்தன முன்போல் -
முன்போல் என்னுடன் மங்கையைக் காணேன்
என்னுடல் போர்த்த அங்கியைக் கண்ணீர் நனைத்தது.

காதலியோடு இன்புற்றிருந்த ஒருவன் ஓராண்டில் அவளை இழக்கின்ருன் - முழு நிலவு கண்டதும் பழைய நினைவு வரப்பெற்று ஆற்ருது கண்ணீர் விடுகின்ருன்.

பிரிவு

1. கார்மேகம் அவள் கூந்தல் ;
முத்துக் கோவை அவள் பற்கள் ;

நீல நிறப் பட்டாடை தானுடுத்திக்
கரும் புருவம் வளைத்து வந்தாள்.

2. தூறல் விழுந்திடவும்,
வாடை உயிர் நடுங்க வீசுகிறது, அந்தோ!
சாளரத்தின் முன்னால் தேன்கதலி தான்நிற்க
இந்த இடரிரவை எவ்வாறு நீந்துவளோ!

காதலன் பிரிந்து தொலைவிலிருக்கிறான். அவன் மனக்கண் முன்பு நீல நிறப் பட்டாடை உடுத்தி வந்த காதலியின் தோற்றம் தெரிகிறது. இதைக் குறிப்பது முதற் செய்யுள். இரண்டாவது, அவள் பலகணி வழியாய்த் தன்னை எதிர் பார்த்து நிற்பதையும் முன்னால் வளர்ந்து குலைதள்ளி நிற்கும் வாழையை நோக்குவதால் அவள் பிரிவாற்றாமை அதிகரிப்பதையும் விளக்குகிறது.

வீட்டு நினைவுகள்

மாலையில் வந்தமாரி யாற்றினைப் புடைத்தது;
வானம் விமலமாய் விளங்கிடப்
பனிகொடு வீசும் காற்று உடல் நடுக்கிடும்.
சாலைக ளெல்லாம் தனிமை சான்றன.
சாயும் பகலோன் பொற்கதிர் கோபுரந் தீண்டின:
செக்கர் மறைந்திடப் பசுமை குலைந்தது:
தழைத்திடும் இயற்கை குவிந்தது;
பேரியா றென்றே,
மௌனமாய்க் கடல்தனை நோக்கி விரைந்திடும்.
உயர நின்று தொலைவில் உள்ள
சொந்த நாடதனைச் சிந்தனை செய்திடச் சகியேன்,
வீட்டு நினைவால் வெடித்திடும் நெஞ்சம் -
ஆண்டுதோ றுண்டாய் இங்கு நான்
தங்குவ தென்னோ? அந்தோ!
அழகிய நல்லாள்
பலகணி வழியாய்த் தொடுவானத்திடைத் தோன்றிடும்
பலபல பார்த்து ஏமாந்திருப்பாள் - [தோணிகள்

சிந்தனை மூழ்கிச் சிறுசுவர் சாய்ந்து
இங்குளேன் என்பதை எப்படி அறியும்?

* * *

சீனாவில் ஒத்த பருவத்தினர் ஒருவரையொருவர் சந்தித்துக் காதல்கொண்டு மணம் புரிந்து கொள்வதே இல்லையென்று கூறமுடியாது. அம்மாதிரி நடைபெறுவது பெரும்பாலும் இல்லை. சில சமயங்களில் இயற்கைக் கூட்டத்தின் பின்னர் துரோகம் நிகழ்வதும் உண்டு. கீழ்வரும் பாடல் ஏமாற்ற மடைந்த ஒரு மங்கையின் சோகத்தை விரிக்கிறது.

1. கானகத் திறந்த கலைமான் தன்னை
வெண்ணிறக் கோரையில் மண்ணிடை மறைத்தனர்.
வசந்தம் விரும்பிய வனிதை யொருத்தியை
அழகிய வீரன் முறைதவ றிழைத்தான்.

2. கானகத் திடையோர் காய்மரக் கூட்டம்;
ஆங்கே யிறந்த அணிமான் தன்னை
வெண்ணிறக் கோரையில் மண்ணிடை மறைத்தனர்,
படிக மணிபோல் வடிவினள் ஏங்கினள்.

3. ஆத்திரம் வேண்டா - அவசரம் ஏனோ?
சிறுகைக் குட்டையைத் தீண்டவும் வேண்டா:
கவன மிலையேல் கடுவன் குரைக்கும்.

இறந்த மானையும் மண்ணிடைப் புதைத்து மறைக்கின்றனர்; கன்னியழிந்த எனக்கு அவ்வளவு பரிவும் காண்பிக்கப்படவில்லையே, என்னை மணந்து எனது கற்பைக் காக்க அவன் முற்படவில்லையே என்பது அவள் பிரலாபம்.

மேற்கண்ட பாட்டில் மூன்றாவது செய்யுள் கூட்டத்தின் போது நடந்த செய்கையைக் குறிப்பாகக் காட்டுகின்றது. கைக்குட்டையைச் சீனப் பெண்கள் இடுப்பில் அணிவது வழக்கம்.

சீனர் சிறந்த வீரர்கள் என்பது வெளிப்படையாயினும் அவர்கள் பொதுவாக சமாதானத்தையே விரும்புகின்றனர். போரைப் பற்றி எழுதப்பட்ட பல பாடல்கள் வீரர்களின் பரிதாபகரமான நிலைமையே பேசுகின்றது. உதாரணத்திற்கு ஒன்று எடுத்துக் கொள்வோம்.

1. வாடாத செடியுண்டா ?
 வீரன் அணிவகுத்துச் செல்லாத நாளுண்டா ?
 நான்கு எல்லைகளையும் காக்க
 அழைக்கப் பெருத மனிதனுண்டா ?

2. வளராத செடியுண்டா ?
 மனைவியிட மிருந்து பிரிக்கப்படாத மனிதனுண்டா ?
 அந்தோ வீரன் வாழ்வு !
 நாங்களும் மனிதர்கள் தானே ? பின் ஏன்
 எங்களை இவ்வாறு நடத்துவது ?

3. நாங்கள் எருமைகளா ? புலிகளா ?
 ஆருமற்ற இந்த வனங்களில் வசிக்க ?
 அந்தோ வீரன் வாழ்வு !
 பகலிலும் ஓய்வில்லை ! இரவிலும் ஓய்வில்லை !

அமைதியையே விரும்பும் இந்நாட்டு மக்கள் அவசியமானல் உலகம் அதிசயிக்கும்படியாகப் பல பிரதிகூலங்களையும் பொருட்படுத்தாது தேசத்திற்காகப் போரிடுவார் என்பதையும் நாம் காண்கின்ருேம்.

* * *

சீன பழம் பெரு நாடு. சிறந்த நாகரிகம் வாய்ந்தது. கலையிலும், கவிதையிலும், தத்துவ விசாரணையிலும் அது உலகிற்கு அபரிமிதமாகச் சேவை செய்திருக்கின்றது. சீனத்துக் கவிதையைப் படிக்கும்போது அதன் உள்ளமும், இந்தியாவின் உள்ளமும் ஒன்று என்பது நன்கு புலப்படும்.

வறுமைக்கு ஒரு பெருமையா?

தியாகராஜன்

சிலர், வறுமையைப் பெருமைப்படுத்திப் பேசுவதைப் பார்த்தால் எனக்கு அடிவயிற்றிலிருந்து ஆத்திரம் கிளம்புகிறது. வறுமையைப்பற்றி யார் பெருமையாகப் பேசலாமென்றால் பணக்காரர்கள். ஏனென்றால், தரித்திரத்தினுடைய கொடுமை அவர்களுக்குத் தெரியாது. தெரியாத ஒன்றைப் பற்றி எவ்வளவும் பேசலாம், என்னவும் பேசலாம், அல்லவா? இரந்து குடிக்கிற ஓர் ஏழையைப் போய்க் கேளுங்கள், அல்லது குழந்தை குட்டிகளுடன் ஒரு குடிசையில் வாழும் கூலிக்காரனைப் போய்க் கேளுங்கள்: 'அப்பா, உனக்கு இந்த வாழ்க்கை பிடித்திருக்கிறதா' என்று. அவன் உங்களுக்குச் சரியானபடி பதில் சொல்லாமலிருக்கலாம். தன்னுடைய வறுமையை வார்த்தைகளினால் அலங்கரித்துக் காட்டக்கூடிய அறிவு அவனுக்கு இல்லை. ஆனால் அவன் பார்வையிலே ஒரு சூனியம் இருப்பதைப் பார்க்கலாம். அந்தச் சூனியப் பார்வைதான் உங்கள் கேள்விக்குப் பதில்.

நாமரூபங் கடந்த கடவுளுக்கு 'தரித்திர நாராயணன்' என்று நமது பெரியோர் பெயரிட்டழைப்பது அவர்களுக்குத் தரித்திரத்தினிடமுள்ள பக்தியையே காட்டுகிறது. மனிதன் எதை விரும்புகிறானோ அதையே அடைகிறான். இன்றைய பாரத ஜாதி வறுமைச் சேற்றிலே உழன்று கொண்டிருக்கிறதென்று சொன்னால், வறுமையினிடம் நமக்

குள்ள விருப்பந்தான் அதற்குக் காரணம். அந்த விருப்ப மிருப்பதனுல்தான் அதனைப் பெருமைப்படுத்திப் பேசு கிருேம். அப்படி விருப்பமில்லையானுல் அதனை எப் பொழுதோ உதறித்தள்ளியிருப்போ மில்லையா ?

மனிதனுடைய நல்வாழ்வுக்குப் பொருள் இன்றியமையாதது என்கிற மையமான உண்மையை உபநிஷதங்களும் திருக் குறளும் வலியுறுத்துகின்றன. ஏன், தர்மசாஸ்திரம் என்று எதை எதை நாம் கொண்டாடுகிருேமோ அந்த நூல்கள் யாவுமே, பொருளைப்பற்றிக் குறைவாகப் பேசவில்லை; அப்படிக் குறைவாகப் பேச வேண்டுமென்ற எண்ணம் நமது பெரியோர்களுக்கு இருந்திருக்குமானுல், செல்வத் திற்கு அதிதேவதையாக லட்சுமியைச் சிருஷ்டித்திருக்க மாட்டார்கள். லட்சுமியைப்பற்றின தோத்திரப் பாடல் களையும் கவிஞர் இயற்றியிருக்க மாட்டார்கள்.

இவ்வுலகத்திற்குப் பிறகுதான் மறுவுலகம். இவ்வுலகத் தில் பிறந்து இருந்து இறந்த பிறகுதான் மறுவுலக வாழ்வு பிறக்கிறது. அவ்வுலகத்து அருள் கிட்டுவதற்குமுன், இவ் வுலகத்துப் பொருள் கிட்டவேண்டும். அருள் இல்லார்க்கு அவ்வுலகமில்லையானுல், பொருள் இல்லார்க்கு இவ்வுலக மில்லை. இல்லாத இந்த உலகத்திலிருந்து இருக்கிற அந்த உலகத்தை எப்படி அடைய முடியும் ? இல்லாததிலிருந்து இருப்பது பிறக்குமா ?

புத்தர் பிரானும் ஏசுநாதரும் எளிய வாழ்க்கையைப் பற்றியும் துறவைப்பற்றியும் அதிகமாக உபதேசித்து விட் டுப் போனுர்களென்பது வாஸ்தவம். ஆனுல் மனிதன், நித் திய தரித்திரத்தில் உழன்று கொண்டிருக்க வேண்டு மென்று அவர்கள் சொல்லவில்லை. எளிய வாழ்க்கை வேறே; வறுமை வாழ்க்கை வேறே. அன்றுடத் தேவைகளை மிகவும் சுருக்கிக்கொண்டு, இயற்கையோடியைந்து நடத்து

கிற வாழ்க்கை எளிய வாழ்க்கை. இதனை நியாயமாக இயற்கை வாழ்வு என்றுதான் சொல்லவேண்டும். தேவை இன்னதென்பதையே அறியாத, ராப்பட்டினி, பகல்பட்டினி என்று சொல்வார்களே அந்தமாதிரியான ஒரு நிலைமையே வறுமை வாழ்க்கை.

பிறருடைய சௌக்கியத்திற்கு விரோதமாகத் தன்னொருவனுடைய சௌக்கியத்தை நாடுவது பாவம். அதாவது, மற்றவர்களுடைய தேவைகளைத் தன்னொருவனுடைய தேவையாகப் பிரத்தியேகப்படுத்திக் கொள்ளக்கூடாது. இந்த மாதிரியான உபதேசங்களைத்தான் புத்தரும் ஏசுவும் செய்துவிட்டுப் போனார்களே தவிர, 'வயிற்றிலே ஈரத் துணியை மடித்துப் போட்டுக்கொண்டு வாழ்க்கையை நடத்து' என்று சொல்லவில்லை. அப்படி நடத்துகிற வாழ்க்கை வாழ்க்கையாகாது. நிறைந்ததுதான் வாழ்க்கை. வறுமை யென்பது குறைவு. குறைவு இருக்கிறபோது நிறைவு உண்டாகாது. அதனால் அது வாழ்க்கையுமாகாது.

அப்படியே அவர்கள் துறவுக்கு ஒரு முக்கியத்துவம் கொடுத்துப் பேசினார்களென்றால், அதற்குக் காரணம், அப்பொழுது அவர்களைச் சுற்றியிருந்த நிலைமைதான். புத்தருடைய காலத்திலும், கிறிஸ்துவினுடைய காலத்திலும் வாழ்ந்த ஜனங்கள் உலக மார்க்கத்தில் அதிகமாகச் சஞ்சரித்து வந்தார்கள். எல்லாம் எமதே என்ற எண்ணம் வளர்ந்து வந்தது. அதனால் அவர்களுக்குத் துறவு எண்ணத்தைப் புகுத்த வேண்டியது அவசியமாயிருந்தது. வாழ்க்கையென்னும் தராசின் இரண்டு தட்டுகளாகிய லௌகிகமும் பாரமார்த்திகமும் சமநிலையில் நிற்கவேண்டுமென்பதே அவர்கள் கருத்து. ஆனால் இப்பொழுது நமக்கு லௌகிக வாழ்க்கையே சூனியமாயிருக்கிறது. அதை முதலில் நாம் சம்பாதித்துக் கொள்ளவேண்டும். அது மிதமிஞ்சிப்போன நிலையில் தான், நமது இருதயம் அதனால் அழுகிப்போன காலத்தில்

தான், நமக்குத் துறவு மனப்பான்மை ஏற்படவேண்டும். இப்பொழுது நமக்கு லௌகிக வாழ்க்கை இல்லாத காரணத்தினால் நமது இருதயம் அழுகிப்போயிருக்கிறது. உலக மார்க்கத்தில் சஞ்சரிக்கிற யோக்கியதையே நமக்கு இன்னும் உண்டாகவில்லையென்பதற்கு அத்தாட்சி, நாம் - நாற்பது கோடி மக்களைக்கொண்ட பாரத ஜாதி - இன்னமும் அடிமையா யிருப்பதுதான். உலக வாழ்க்கை இன்னதென்பதை நாம் சரியாக அறிந்து கொண்டிருந்தோமானால், இப்படி அடிமைத்தனத்திலே திருப்தியடைந்திருக்கமாட்டோம்; உலகநிலை இன்னதென்பதையாவது தெரிந்து கொள்ள ஆவல் கொண்டிருப்போம். நமக்குத்தான், உலகத்திலே வாழவேண்டும், உலகத்தில் உயர்வு பெறவேண்டும் என்ற ஆவலே இல்லையே ! பிரமன் எழுதின எழுத்திலே நமக்கேற்பட்டிருக்கிற அசைக்கமுடியாத நம்பிக்கையானது, இறப்பதற்காகத்தான் நாம் பிறந்திருக்கிறோமே தவிர, வாழ்வதற்காகப் பிறக்கவில்லையென்ற எண்ணத்தையல்லவோ வளர்த்து வருகிறது? இந்த நிலையிலே நமக்கு, வறுமை வாழ்க்கையென்றும், துறவு என்றும் உபதேசம் செய்வது நம்மைப் பார்த்துப் பரிகசிப்பதுபோல இருக்கிறது.

ஒரு பணக்காரன் தன்னை ஏழையென்றோ, ஒரு பண்டிதன் தன்னைக் கற்றுச் சொல்லியென்றோ முறையே சொல்லிக்கொண்டால், அஃது அவனுடைய அடக்கத்தைக் காட்டுகிறது என்று சொல்கிறோம். அதில் அர்த்தமும் இருக்கிறது. பால், பொங்கி அடங்கினால் ருசியுண்டு. அதைப்போல் கல்வி, அடக்கத்தினால் சோபிக்கிறது. இது சரி. ஆனால் கல்வி வாசனையே இல்லாதவர்கள், கல்வி கற்றுக்கொள்ள முனையாமல், அடங்கி யிருக்கிறேனென்று சொல்லிக்கொண்டு, குட்டிச்சுவர்மாதிரி மௌனமா யிருந்தாலோ அல்லது எனக்கு ஒன்றுந் தெரியாது என்று சொல்லிக்

கொண்டாலோ, அஃது அடக்கமாகுமா ? அதில் ஏதேனும் அர்த்தமிருக்கிறதா ? அதைப்போல், எல்லாம் இருக்கிற வன் துறப்பதிலே, அர்த்தமிருக்கிறது. ஒன்றுமில்லாதவன் எதைத் துறப்பது ? எப்படித் துறப்பது ? வாழ்வு என்பது ஒன்று இருந்தாலல்லவோ அதைத் துறப்பதற்கு ? முதலில் நாம் வாழ்வைச் சம்பாதித்துக்கொள்ள முயலல் வேண்டுமே தவிர, துறவைப்பற்றிப் பேச இப்பொழுது நமக்கு யோக்கியதையே கிடையாது. அப்படியே, உடல் பலம், மனோ பலம், ஆத்ம பலம் முதலியவற்றைச் சம்பாதித்துக்கொண்ட பிறகே, அஹிம்ஸையைப்பற்றிப் பேச நமக்குத் தகுதி யுண்டு.

வறுமைக்கு ஒரு பெருமையைக் கொடுத்து அனேக அறிஞர்கள் எழுதி யிருக்கிருர்கள் என்பதை நான் அறியாமலில்லை. அவர்களுடைய கருத்துக்களில் சில உண்மைகள் இருக்கின்றன வென்பதை நான் ஒப்புக்கொள்கிறேன். ஆனல் அதற்காக, வறுமையே நல்லது, செல்வமே வேண்டாம் என்று சொல்லிவிட முடியுமா ? வறுமையே பெருமை யென்று சொன்னல் அதை என் மனச்சாட்சி ஒப்புக்கொள்ளவே கொள்ளாது. வேண்டுமானல், வறுமையிலே பெருமையடைவதற்கான மார்க்கங்கள் இருக்கின்றன வென்று சொல்லுங்கள். அதை ஒப்புக்கொள்கிறேன். அதில் உண்மையும் இருக்கிறது. ஏனென்ருல், எந்த ஒரு காரியத்தைச் செய்து முடிப்பதற்கும் சிறிது சிரமப்பட்டுத் தான் ஆகவேண்டும். குழந்தை இன்பத்தை அனுபவிக்க வேண்டுமானல், பிரசவவேதனைப்பட்டுத்தானக வேண்டும். அதைப்போல் வாழ்க்கையிலே வெற்றிபெற வேண்டுமானல் ஓரளவுக்காவது துன்பத்தை அனுபவித்தே யாக வேண்டும். ஒருவனுடைய படிப்பு பூர்த்தியடைய வேண்டுமானல் அவன் ஒருமுறையாவது சுற்றுப் பிரயாணம் செய்தாக வேண்டுமென்று சொல்வார்கள். அதைப்போல் ஒருவ

னுடைய வாழ்க்கை பூர்த்தியும் புனிதமும் பெறவேண்டு மானல் அவன் சிறிது காலமாவது சிரம தசையிலிருக்க வேண்டும் என்று நான் சொல்கிறேன். ஆனல் இப்படிப் படுகிற சிரமமானது, அனுபவிக்கிற துன்பமானது, தானே வலிய ஏற்றுக் கொண்டதா யிருக்கவேண்டும். அவன் துன் பத்தைப் போயடைய வேண்டுமே தவிர, துன்பம் அவனைப் போயடையக் கூடாது. வலிய அனுபவிக்கிற துன்பத்திலே ஓர் இன்பம் இருக்கிறது : தானே படுகிற கஷ்டத்திலே ஒரு சுகம் இருக்கிறது. எந்த ஒரு காரியமும் இப்படித்தானே ? நாமே வலியச் சென்று ஒரு காரியத்தைச் செய்தால் அதைச் சரியாகவும் செய்கிரும் ; நன்ருகவும் செய்கிரும். அதில் நமக்கு ஒரு சந்தோஷம் உண்டாகிறது ; திருப்தி ஏற்படு கிறது. பிறருடைய கட்டாயத்திற்காக ஒரு காரியத்தைச் செய்வோமானல் அஃது அரைகுறையான காரியம்தான். அதில் நமக்கும் திருப்தியில்லை ; மற்றவர்க்கும் சந்தோஷம் இல்லை. உதாரணமாக, சிறைச்சாலைக்கு, திருடர்கள் செல் வதற்கும் சத்தியாக்கிரகிகள் செல்வதற்கும் எவ்வளவோ வித்தியாசம் இருக்கிறதில்லையா ?

உலகத்தில் இதுவரையில் அவதரித்த மகான்கள் அத்தனை பேரும் வறுமைத் தீயிலே வறுத்தெடுக்கப்பட்டவர்கள் என்பது சரி. ஆனல் அவர்கள் அத்தனை பேரும் தாங்களே வலியவந்து வறுமைத் தீயிலே விழுந்தவர்கள் என்பது நமக்கு ஞாபகமிருக்கவேண்டும். ஏதோ ஒரு மகத்தான காரியத்தைச் சாதிக்க வேண்டுமென்பதற்காக, அவர்கள் வறுமை வாழ்க்கையை ஒரு சாதனமாக ஏற்றுக்கொள்கிருர் கள். மற்றவர்கள் சுகப்படவேண்டு மென்பதற்காக அவர் கள் கஷ்டப்படுகிருர்களே தவிர, மற்றவர்களும் அந்தக் கஷ்டத்தை அனுபவிக்க வேண்டுமென்பதற்காக அல்ல.

தவிர, இங்ஙனம் துன்பத்தை அனுபவிக்கிற மகான்களிற் பெரும்பாலோருடைய ஆரம்ப வாழ்க்கை இன்பச் சுவை

யுடையதாகவே இருந்திருக்கிறது. இன்பத்தைச் சுவைத்துச் சுவைத்து அதிலே ஒரு வெறுப்பு ஏற்பட்ட பிறகுதான் துன்பத்தைச் சுவைக்க முன்வந்திருக்கிருர்கள். செல்வத்திலே புரண்டவர்கள்தான் வறியரானுர்கள். சிற்றின்பத்தைத் துய்த்துத் துய்த்துச் சலித்துப் போனவர்களே பேரின்பத்தை நாடி ஓடினுர்கள். இல்லறத்திலிருந்தே துறவறம் பிறந்தது. உழைத்து உழைத்து உடம்பு சோர்வடைந்தால் அது நல்லது. உழைக்காமலே உடல் சோர்வடைந்தால் அது வியாதியல்லவா? அதைப்போல் செல்வத்திலே சோர்வு கண்டவர்கள்தான் வறுமையிலே துறவு காண முடியும்; அந்தத் துறவிலே இன்பம் நுகர முடியும். அப்படித்தான் பெரியோர் செய்திருக்கிருர்கள்.

வறுமை வாழ்க்கை யென்பது, தனி மனிதனுடைய வளர்ச்சிக்கான ஒரு சாதனமே தவிர, சமுதாயத்திற்குப் பொதுவான ஒரு விதியாகாது. எல்லோரும் வறுமை வாழ்க்கையை மேற்கொண்டு விட்டால் அல்லது துறவு பூண்டு விட்டால், உலகத்தில் இலக்கியம், கலை, அழகு, தாய்மை முதலியவற்றிற்கு இடமேது? அப்படி இடமிருந்தாலும் அவற்றிற்கு உயிர் இருக்குமா? நிலத்தினுடைய மண்ணிலிருந்தோ மனிதனுடைய மூளையிலிருந்தோ ஏதேனும் உற்பத்தியாகுமா? மனிதன்தான், மனிதனுக வாழ முடியுமா? வறுமையுள்ள ஒரு சமுதாயம், எளிதிலே அடிமையாகி விடும். அது வளர்ச்சியும் அடையாது; நோய்பற்றிய உடல்மாதிரி அழுகி இறந்து போகும்.

வறுமையினுல் சில நன்மைகள் உண்டென்று சொல்கிருர்களே அவைகளைப்பற்றிச் சிறிது ஆராய்வோம். வறுமைக்குப் பொறுமை உண்டு என்கிருர்கள். உண்மை. பொறுமை உண்டுதான். ஆனுல் அந்தப் பொறுமைக்குப் பெருமை உண்டா? பலவீனத்தினுலும், கோழைத்தனத்தி

லும் ஒன்றுஞ் செய்ய முடியாமல் ஸ்தம்பித்துப் போயிருக்கிற ஒரு நிலையைப் பொறுமை என்ற கௌரவமான பெயர் கொடுத்துச் சொல்வது எப்படிப் பொருந்தும்? பிச்சைக்காரன் ஒருவன் வருகிறான்; வயிற்றுப் பசியென்று வயிற்றிலடித்துக்கொண்டு கேட்கிறான். நாம் அப்பொழுதுதான் அஜீரணத்திற்காக மருந்து சாப்பிட்டுக் கொண்டிருக்கிறோம். அவன் வயிற்றிலடித்துக் கொள்வதனாலுண்டாகிற சப்தம், நமது இதய வாசலின் கதவைத் திறவாவிட்டாலும், நமது காதுகளின் ஜவ்வைக் கிழித்துவிடும்போலிருக்கிறது. ஆனாலும் நாம் அசைவதில்லை; அவனைப் பார்த்துச் சிரிக்கிறோம். அவன் பல்லை இளிக்கிறான்; கெஞ்சுகிறான்; தெய்வத்தின் பெயரைச் சொல்லி நம்மைத் துதிக்கிறான்; கடைசியில் அலறுகிறான்; கதறுகிறான். ஒன்றும் பயனில்லை. ஒரு தம்பிடி கூட நம்மிடமிருந்து பெயரமாட்டேனென்கிறது. என்ன செய்வான் அவன்? மௌனமாகத் திரும்பிவிடுகிறான். கொடுக்கவில்லையே யென்று அவன் வாய் பழிப்பதில்லை. இதனால் அவனைப் பொறுமைசாலி என்று சொல்லிவிடலாமா? கொடாதவனிடத்தில் ஏற்படுகிற அன்பின் நெகிழ்ச்சியினால் அவனுக்கு அந்தப் பொறுமை உண்டாகிறதா? இல்லை; செயலாற்றும் திறனற்ற நிலையிலேதான் அந்தப் பொறுமை உண்டாகிறது. பழிக்குப் பழி வாங்க அவனுக்குத் தெரியும்; அவனுக்குச் சக்தியுமுண்டு. ஆனால் அவனுடைய வயிற்றுக்கொடுமை, அவனுடைய கைகால்களை, மனத்தையுங்கூட, பிணித்துவிட்டிருக்கிறது. அப்படிப் பிணிப்புண்ட நிலைமையிலே அவன் சும்மாயிருக்கிறான். அது பொறுமையாகுமா? இங்ஙனமே தரித்திர நிலைமையிலுள்ள அனைவரும், இல்லாத கொடுமையினால் பொறுமையாய் இருக்கிறார்களே தவிர, அன்பின் முதிர்ச்சியாலல்ல.

உலகத்திலே புதிது புதிதாகக் கண்டுபிடிக்கப் பட்டன யாவும், அதாவது புதிய சிருஷ்டிகள் யாவும், வறுமையி னின்று தோன்றியவையென்று சொல்கிறார்கள். ஆம். கவிஞர்கள், விஞ்ஞான சாஸ்திரிகள், புதிய பூமிகளைக் கண்டு பிடித்தவர்கள், தத்துவ ஞானிகள், அரசியல் நீதி கள் வகுத்தவர்கள் முதலிய பலரும் வாழ்க்கையில் பல இன்னல்களை அனுபவித்திருக்கிறார்கள்; தூக்கு மேடை யிலேகூட ஏறியிருக்கிறார்கள். இவைகளை யெல்லாம் கடந்து அவர்கள் சிருஷ்டிக்கிற வேலையில் வெற்றிபெற் றிருக்கிறார்களென்று சொன்னால் அதற்கு அவர்கள் தாம் காரணமே தவிர, அவர்களுடைய வறுமை காரணமல்ல. அவர்கள் லட்சியத்திலே குறியாயிருந்தார்கள்; மற்றவை களை அலட்சியம் செய்துவிட்டார்கள். அவர்கள் பட்ட கஷ்டம், அனுபவித்த வறுமை வாழ்க்கை முதலிய யாவும் அவர்களால் வலிய ஏற்றுக்கொள்ளப்பட்டவை.

வறுமை வாழ்க்கை, பனிக்கட்டியைப்போல் கடினமான தாகவும் பரிசுத்தமுடையதாகவும், இருக்கிறதென்று சொல்வது, உபமான உபமேய அளவுக்குப் பொருத்த மாகவும், அழகாகவும்கூட இருக்கிறது. ஆனால் பனிக் கட்டி எல்லாருக்கும் பயன்படுவதில்லையே; எப்பொழுதும் பயன்படுவதில்லையே! தேகத்திலாகட்டும், சுற்றியுள்ள சீதோஷ்ண ஸ்திதியிலாகட்டும், தாபம் அதிகரிக்கிறபோது தான், பனிக்கட்டியை நாம் உபயோகிக்கிறோம். அதைப் போல், மிதமிஞ்சிய செல்வத்தினால் நாம் நிலை புரண்டிருக் கிற போது, நமக்குப் பாடங் கற்பிக்க ஓரளவு வறுமை தேவைதான். செல்வம் இன்னதென்பதையே அறியாத நிரந் தர வறுமை எதற்குப் பிரயோசனம்?

மற்றும், பனிக்கட்டி தண்ணீரிலிருந்து உண்டாகிறதேதவிர சுயமாக உண்டாவதில்லை. அதுமாதிரி, செல்வத்திலிருந்து வறுமை பிறந்தால் அதனால் அனுகூலம் உண்டு. இன்னும்,

பனிக்கட்டி உருகுந் தன்மையது. ஆனல் வறுமை, அதுவும் சிறிது அளவுக்கு மீறியும் சாசுவதமாகவும் போய்விட்டால், இருதயத்தைக் கல்லாக்கிவிடக் கூடியது ; உணர்ச்சியென்பதை வற்ற அடிக்கும் தன்மையது.

பனிக்கட்டி வெண்மையானதுதான் ; தூய்மையானதுதான். ஆனல் அதன்மீது யாராவது நடக்கமுடியுமா ? வாசம் செய்யமுடியுமா ? அதனைப் பின்னணிச் சீலையாக வைத்துக் கொண்டு அதன்மீது ஏதேனும் சித்திரம் வரையமுடியுமா? கரிக்கோடாவது இழுக்கமுடியுமா ? வெண்மையானது என்ற ஒரு காரணத்திற்காக மட்டும் எந்தப் பொருளையும் நாம் உபயோகிப்பதில்லை.

வறுமை, ஒழுக்கத்தை வளர்க்கிறது, தைரியத்தை ஊட்டுகிறது, சுய முயற்சியைத் தூண்டுகிறது என்று இப்படியெல்லாம் சொல்கிருர்கள். இதில் உண்மையில்லாமல் இல்லை. ஆனல் இது வறுமையினுடைய குணமா, மனிதனுடைய குணமாவென்று நான் கேட்கிறேன். ஒவ்வொரு மனிதனும், தான் பெற்ற கல்வி அளவுக்கு, அந்தக் கல்வியை அனுஷ்டானத்திற்குக் கொண்டுவருகிற அளவுக்கு, அவனுடைய மனேபரிபக்குவத்திற்குத் தகுந்தபடி வளர்ச்சியடைகிருன், அல்லது சீர்கெட்டுப் போகிருன். இப்படி வளர்ச்சியடைகிற விஷயத்திலோ, சீரழிந்து போகிற விஷயத்திலோ, செல்வமும் வறுமையும் ஒருவிதமான உதவியையே செய்கின்றன. செல்வத்தினுல் மனிதன் சீரழிந்து போகிருனென்று சொன்னுல் வறுமையினுல் அவன் மேன்மையடைகிருன் என்பது அர்த்தமில்லையே !

இனி, வறுமையை நேரில் சந்திப்போம். வறுமை மகா கொடியது. கொடுமையில் அதற்கீடு அதுதான். அது மனிதனுடைய முதுகை மட்டும் கூனலாக்குவதில்லை ; அறிவைக்கூடக் கோணலாக்கிவிடுகிறது. தொட்டால் சிணுங்கியாக அவன் ஒரு காலத்தில் இருந்திருப்பான். வறுமை

யானது அவனுடைய அந்தச் சுபாவத்தை மழுங்கச் செய்து விடுகிறது. அவனுடைய வீட்டிலே மங்கள வாசகம் முழங்குவதில்லை. அவன் எப்பொழுதும் எரிகிற கொள்ளியாகவே இருந்துகொண்டிருக்கிறான். அவன் சொல், செல்லாக் காசு; அவனை, உற்றார் ஏசுகின்றனர்; அன்னியர் அவமதிக்கின்றனர். அவனுக்கு உலகத்திலே நிறைய அனுபவம் இருக்கலாம்; ஒரு காரியத்தைத் திறம்படச் செய்து முடிக்கிற சாமர்த்தியம் இருக்கலாம்; மனிதத் தன்மை இன்னதென்பது தெரிந்திருக்கலாம். ஆனால் எல்லாம் காட்டிலே காய்ந்த நிலவு. வறுமை காரணமாக அவன் சதா அச்சப்பட்டுக்கொண்டே வாழவேண்டியவனா யிருக்கிறான். ஏனென்றால் வறுமை அவ்வளவு பயங்கரமானது.

தரித்திரனைப் பார்த்து ஓர் அனுதாப வார்த்தை சொல்வார் ஒருவருமில்லை. அவன் நோய்வாய்ப்பட்டால் இரக்கப்படுவார் கிடையாது. அவன், மற்றவர்களுக்கு இரங்குகிறான்; ஆனால் மற்றவர்கள் அவனுக்கு இரக்கங் காட்டுவதில்லை. உலகத்திற்கு அவன் அஞ்சுகிறான்; அஃது அவனை உதைத்துத் தள்ளுகிறது; அவனுக்காக ஒரு பொட்டுக் கண்ணீர் கூட விடுவதில்லை.

வறுமை, மனிதனுடைய ஆத்மாவில் அனேக வடுக்களை உண்டுபண்ணிவிடுகிறது. அவை, அவன் இறந்த பிறகுகூட மறைவதில்லை. பிரதியொரு மனிதனுக்கும், ஆத்மாவின் அஸ்திவாரம் ஒன்றுண்டு. அந்த அஸ்திவாரத்தை அசைத்துக் கொடுக்கக்கூடிய சக்தி வறுமைக்குத்தான் உண்டு. அப்படி அந்த அஸ்திவாரம் அசைகிறபோது அவன் தலை குனிகிறான்; மௌனஞ் சாதிக்கிறான். வறுமை அவனை அந்தமாதிரி அழுத்தி வைத்துவிடுகிறது.

வறுமையே! நீ கொடியை! மகா கொடியை! நீ ஒழிந்தால் தான் உலகத்திற்கு உய்வுண்டு.

நிருபர்கள்

ரா. நாராயணன்

பல வருஷங்களுக்கு முன் நடந்த சம்பவம். சவர்க்கார், காலஞ்சென்ற வ. வே. சு. ஐயர் முதலியோர் லண்டனில் புரட்சிக்கு அடிகோலிக் கொண்டிருந்த சமயம். இந்தியா வில் பல காலம் பதவி வகித்து ஓய்வெடுத்துக்கொண்டிருந்த ஸர் கர்ஸான் வைலி என்பவர் பேசுகிருர். இந்தியாவில் பவுன் மரத்தைப் பதம் பார்த்த பல மாஜி ஸிவிலியன்கள் பிரசங்கத்தைக் கேட்க வந்திருந்தார்கள். நிருபர்கள் தத் தம் பென்சில்களைத் தீட்டிக்கொண்டு தயாராயிருந்தனர். சிற்றுண்டி முடிந்து பிரசங்கமும் ஆரம்பித்தது. ஸர் வைலி யின் பிரசங்கத்தின் நகல் நிருபர்களுக்கு வழங்கப்பட்டது. நகல்படிதான் பேசப் போகிருர் என்று நிருபர்கள் எண்ணி ஒவ்வொருவராகக் கூட்டத்தைவிட்டுத் தத்தம் காரியாலயங் களுக்குச் சென்றனர். ஸர் கர்ஸானின் பிரசங்கத்தைப் பத் திப் பத்தியாக அச்சிட்டுப் பத்திரிகைகளைத் தயார் செய்தார் கள். ஆனால், பிரசங்கம் முடிந்தவுடன் பிரசங்க மண்டபத் தில் நிகழ்ந்த சம்பவம் இவர்களுக்குத் தெரியாது. பேசின பிறகு ஸர் கர்ஸான் வீட்டுக்குச் செல்லப் புறப்பட்டார். பல நண்பர்கள் அவரைத் தொடர்ந்து வந்து கொண்டிருந் தனர். அந்தச் சமயம் ஒரு துப்பாக்கி வெடிச் சத்தம் கேட் டது. ஸர் கர்ஸான் வைலி கீழே விழுந்துவிட்டார். நண்பர் கள் அவரைத் தாங்கிக் கொண்டனர். என்ன நடந்துவிட் டது என்று யாவரும் வியப்புற்றனர். மதன்லால் டிங்கிரா என்னும் இந்திய இளைஞர் அவரைச் சுட்டுவிட்டார்.

அந்தக் கூட்டத்தில் ஒருவர் இந்தக் கோர சம்பவத்தைப் பார்த்துக் கொண்டிருந்தார். அவர் மனம் அல்லல்பட்டது. ஒரு கோப்பைத் தேநீர் சாப்பிட்டால் நல்லதுபோல் தோன்றிற்று. மெல்ல நடந்து விளக்கு வெளிச்சம் இருந்த ஒரு கட்டிடத்திற்குள் நுழைந்தார். என்ன ஆச்சரியம்! அது ஒரு பத்திரிகைக் காரியாலயம். புதிதாய் வந்த ஆசாமியைக் காரியாலயத்தார் ஆசனத்திலமர்த்தி, 'என்ன வேண்டும்?' என்று கேட்டனர். மனத்தை உறுத்திக் கொண்டிருந்த அந்தச் சம்பவத்தை வெளியிட்டு விட்டால் பாரம் சற்றுக் குறையும்போல் தோன்றிற்று.

கண்ணுல்கண்டதை வாயால் விவரித்தார். பத்திரிகைக்காரர்களுக்குத் தேகத்தில் மின்சாரம் பாய்வதுபோலிருந்தது. வந்த ஆசாமிக்குத் தேநீர் வழங்கினர். விடியுமட்டும் அவருடன் ஏதேதோ பேசினர். இதற்குள் உள்ளே சென்றவர்கள் ஸர் கர்ஸான் வைலி கொலையைப்பற்றிக் கொட்டை எழுத்துக்களில் தலைப்புக் கொடுத்து விஷயம் பூராவையும் நேரில் கண்ட மாதிரி பிரசுரித்தனர். விஷய தானம் செய்தவருக்கு நிரம்ப வந்தனங்களும் ஐந்து ஷில்லிங்கும் கொடுக்கப்பட்டன. இந்தச் சொற்பச் செலவில் அந்தப் பத்திரிகை பிரபலமடைந்தது. மற்றப் பத்திரிகைகள் கர்ஸான் வைலியன் பிரசங்கத்தை மாத்திரம் பிரசுரம் செய்தன; ஒரு பத்திரிகையில் மட்டும் பிரசங்கத்தின் பிறகு நடந்த கொலையும் இடம்பெற்றது. ஏமாந்த நிருபர்கள் சுருக்கெழுத்தும், டைப் அடித்தலும் மட்டும் தெரிந்திருந்தால் வெற்றிபெற முடியாது என்பதை உணர்ந்திருப்பார்கள். நிருபர் வேலைக்குச் சோம்பேறித்தனம் பரமவிரோதி என்பதையும் அவர்கள் தெரிந்துகொண்டிருப்பார்கள்.

* * * *

லண்டனிலிருந்து டில்லிக்குச் செல்வோம். வைஸ்ராய் மாளிகை. காந்தி - இர்வின் ஒப்பந்தம் ஏற்படுவதற்குமுன்

இர்வின் பிரபுவும் மகாத்மாவும் சமரசம் பேசுகிறார்கள். பதினைந்து நாட்களாகி விட்டன. இன்னும் முடிவு ஏற்படவில்லை. கடைசி நாள். சமரசம் சாத்தியமில்லையென்று காந்திஜி தம் இல்லத்திற்குத் திரும்பிவிட்டார். சமரச முடிவுக்குக் காத்திருந்த நிருபர்கள் மனமொடிந்து தத்தம் காரியாலயம் சென்றுவிட்டனர். ஆனால் ஒருவர் மாத்திரம் காந்திஜியுடன் இல்லத்தில் தங்கியிருந்தார். கடைசி நிமிஷத்தில் ஏதாவது நிகழுமோ என்று அவர் எதிர்பார்த்தார். அவர் ஊகம் வீண்போகவில்லை. யாரோ ஒருவர் வைஸ்ராய் மாளிகையிலிருந்து வந்தார். சில நிமிஷங்களுக்கெல்லாம் காந்திஜி மோட்டாரில் மீண்டும் வைஸ்ராய் மாளிகைக்குச் சென்றார். காத்திருந்த நிருபருக்கு உற்சாகம் அதிகரித்தது. மற்ற நிருபர்களுக்குக் கிடைக்காத நற்செய்தி தமக்குக் கிடைக்கவேண்டும் என்று ஆவல். அங்குமிங்கும் உலாவிக் கொண்டிருந்தார். மீண்டும் காந்திஜி திரும்பினார். அவர் முகத்தில் பூரிப்பு காணப்பட்டது. அவர் தம் சகாக்களுடன் குதூகலமாகப் பேசினார். சரி, வெற்றி கிட்டிவிட்டது என்று முடிவு கட்டிக்கொண்டார். நிருபர் இச்சமயத்தில் முடிவு என்ன என்று கேட்டுக்கொண்டு காலதாமதம் செய்யலாகாது. நேராகத் தந்தியாபீசுக்குச் சென்று 'காந்தி இர்வின் ஒப்பந்தம் கையெழுத்தாகி விட்டது' என்கிற செய்தியைப் பிறநாடுகளுக்கு அனுப்பினார். காலையில் விழித்தெழுந்தவுடன் செய்தியைப் பார்த்துவிட்டு, ஏமாந்துபோன நிருபர்கள் மனம் நொந்துகொண்டனர்.

* * *

ஒப்பந்தம் அமுலுக்கு வந்து சிலகாலத்திற்குப்பின், லண்டன் வட்டமேசை மகாநாட்டிற்கு இந்தியாவின் ஏகப்பிரதிநிதியாய் மகாத்மா செல்லப்போகிறார். அதற்குள் ஒரு சிறு

தடை. காந்தி இர்வின் ஒப்பந்த ஷரத்துக்களைப் பல இடங்களில் சர்க்கார் அதிகாரிகள் சரியாக அனுஷ்டானத்திற்குக் கொண்டு வரவில்லை. இக்குறைவுக்குப் பரிகாரம் அளித்தால்தான் சீமை செல்லுவேன் என்று கூறிவிட்டார் மகாத்மா. திருப்தி செய்வதற்காக டில்லியில் வைஸ்ராய் காந்திஜியை அழைத்துப் பேசி வருகிறார். முடிவு சுவாரஸ்யமாயில்லை. மகாத்மா லண்டன் செல்லவில்லை. அன்று மாலை பம்பாய்க்குப் போகிறார். இனிச் செய்வது ஒன்றுமில்லை என்று நிருபர்கள் போய்விட்டனர். கடைசி நிமிஷத்தில் மீண்டும் வைஸ்ராய் மாளிகையிலிருந்து அழைப்பு வந்தது. மகாத்மா சென்றார். பேச்சு நடந்தது. சீக்கிரத்தில் திரும்பினார். திரும்பி வந்தவுடன் 'என்ன ஆயிற்று?' என்று கேட்டால் "வைஸ்ராய் மாளிகையில் கேட்டுக் கொள்ளுங்கள்" என்று பதில் கிடைத்தது. இனி என்ன செய்வது என்று யோசித்துக்கொண்டிருக்கையில், மகாத்மா பரிவாரத்தைச் சேர்ந்த சிலர், பம்பாயிலிருந்து கப்பல் புறப்படும் நேரம், குளிர் காலத்திற்கு வேண்டிய உடை முதலியவற்றைப் பற்றிப் பேசிக்கொண்டிருந்தனர். இதைக் கேட்டுக்கொண்டிருந்த நிருபர் ஓடோடியும் தந்தியாபீசுக்குச் சென்று 'மகாத்மா லண்டன் செல்லுகிறார்' என்கிற செய்தியை அனுப்பிவிட்டு வந்தார். காத்திருந்ததும் ஊகமும் வீண் போகவில்லை.

* * * *

சட்டசபைகளில் முக்கியமான காலம் கேள்வி நேரம். அதைவிட முக்கியமானது, உபகேள்விகள்கேட்டுச் சர்க்கார் அங்கத்தினர்கள் திணறும் சமயம். சென்னை அசெம்பிளியில் சில நிருபர்கள் கேள்வித்தாள்களை வாங்கிக்கொண்டு

தனி அறைக்குச் சென்று கேள்வி பதில்களைத் தத்தம் பத்திரிகைகளுக்கு எழுதி அனுப்பிக்கொண்டிருப்பார்கள். இதற்குள் உபகேள்விகளின் வினுவாக எழும் பல சம்பவங்கள் இவர்களுக்குக் காத்திராமல் நிகழ்ந்துவிடும்.

நிருபர்களுக்குச் சட்ட ஞானமும் தெரிந்திருக்க வேண்டும். தெரியாவிட்டால் சங்கடம் நிச்சயம் சம்பவிக்கும். அசெம்பிளியில் காங்கிரஸைப்பற்றி என்ன எழுதலாம் எழுதலாகாது என்பதை உணராததால் சில ஆங்கிலோ இந்தியப் பத்திரிகைகள் வித்தல்பாய் படேல் மத்திய அசெம்பிளித் தலைவராய் இருந்தபொழுது பத்திரிகைகள் உரிமைகளை இழந்து தவித்தன.

நிருபர்களுக்கு முகக்களை வேண்டும். கவர்ச்சியாகப் பேசத் தெரிந்திருக்க வேண்டும். பல சந்தர்ப்பங்களில் பல பிரபலஸ்தர்களைக் கண்டு பேசவேண்டி யிருக்கும். பல தலைவர்கள் பிடி கொடுத்துப் பேசமாட்டார்கள். அவர்கள் வாயிலிருந்து எதையும் எளிதில் 'பிடுங்கி' விட முடியாது. ஊர் சமாசாரத்தையெல்லாம் பேசிக் கல்லிலிருந்து நார் உரிக்கிறமாதிரி சமாசாரத்தைக் கிரகிக்க வேண்டும்.

எந்தச் சமயத்தில் என்ன நடக்குமோ என்று நிருபர்கள் சற்றுக்கூட அயராமல் விழிப்பா யிருக்கவேண்டும். இனி என்ன நடக்கப் போகிறது என்று சற்று விலகி விட்டால், மத்திய அசெம்பிளியில் பி. கே. டட் என்பவர் வெடிகுண்டு எறிந்தாரே அம்மாதிரி எதிர்பாராத சம்பவங்கள் எவ்வளவோ நொடிப்பொழுதில் நிகழ்ந்துவிடும்.

அசிரத்தையினுல் சில சமயம் தப்புச் செய்திகூடப் பிரசுரமாகி விடுவதுண்டு. சென்னையில் கார்ப்பொரேஷன் பொதுத் தேர்தல் நடக்கவிருந்தது. காங்கிரஸ் பெரும்பா

லான ஸ்தானங்களுக்கு அபேட்சகர்களை நிறுத்தியிருந்தது. டிவிஷன் தவருமல் தினசரி தேர்தல் கூட்டம் நடக்கும். அனேகமாக எல்லாக் கூட்டங்களிலும் ஒரே கோஷ்டியினர் பேசிக்கொண்டிருந்தனர். பெரும்பாலான நிருபர்களுக்குக் கேட்டதையே கேட்டுவருவதில் சலிப்புத் தட்டிவிட்டது. ஆகையால், தினசரி கிளம்பிக் கூட்டம்நடக்கும் இடங்களுக்குச்சென்று பேசுவோர் ஜாபிதாவைத் தெரிந்துகொண்டு கூட்டம் நடந்ததாக எழுதி விடுவதுண்டு. ஒருநாள் ஒரு கோயிலுக்கருகில் போடப்பட்டிருந்த கூட்டம் அங்கு கூடலாகாது என்று போலீஸாரால் தடை செய்யப்பட்டுவிட்டது. 'தேர்தல் கூட்டம் போலீஸாரால் தடைப்பட்டது' என்று முதல் பக்கத் தலைப்புப் போடுவதற்குப் பதிலாக ஒரு பத்திரிகையில் "கார்ப்பரேஷன் தேர்தல்; காங்கிரசுக்கு ஆதரவு" என்ற சிறு தலைப்புடன் வெளிவந்ததைப் பார்த்து அந்த டிவிஷன்வாசிகள் சிரிக்காமல் என்ன செய்வார்கள் ?

* * * *

நிருபர்கள் சாகத்துணிந்தவர்களாயிருக்க வேண்டும் என்று சொன்னுல் அதன் அர்த்தம் நம் நாட்டில் பலருக்குப் புரியாமலிருக்கலாம். ஆனுல் இந்த யுத்தத்தின் கடும்போருக்கு மத்தியில் தரையிலும், தண்ணீரிலும், வானிலும் எத்தனை நிருபர்கள் ஆராய்ந்து தங்கள் தொழிலைச் செய்து, அதில் தங்கள் உயிரையும் துறக்கிருர்கள் !

நம் நாட்டில் அவ்வளவு பெரிய தியாகத்திற்குச் சந்தர்ப்பமேற்படாவிட்டாலும், எத்தனை சமயங்களில் கூட்டங்களில் நடக்குங் கலவரங்களில், கல்மாரி பொழிவதில், துப்பாக்கிப் பிரயோகத்தில், தடியடி வீச்சில், நிருபர்கள் அகப்பட்டுக் கொண்டு கஷ்டங்களை அனுபவிக்க வேண்டியிருக்கிறது !

ஒரு சமயம் திரிசிராப்பள்ளியில் சென்னைத் தலைவர் ஒருவர் பேசினார். ஏராளமான கூட்டம். ஆனால் ஒருசில காலிகள் சேர்ந்து கூட்டத்தைக் கலைத்துவிட்டனர். முதலில் மண் ணைத் தூவினர். பூனைமாதிரி கத்தினர். கூட்டம் நடந்து கொண்டே யிருந்தது. பாதரட்சைகளைப் பிரசங்கி மேல் வீசினர். தலைவர்மீது விழாது காக்க ஒரு நிருபர் குறுக் கிட்டார். தலைவருக்கெண்ணிய மரியாதை நிருபருக்குக் கிடைத்தது!

1935ம் ஆண்டு ராஜன் பாபு தமிழ் நாட்டில் சுற்றுப் பிர யாணம்செய்தார். கல்லிடைக்குறிச்சியிலிருந்து முக்கூடலுக் குத் தாம்பிரபரணியைக் கடந்து செல்லவேண்டும். சின்ன மோட்டார்களில் தலைவர்கள் நதியைத் தாண்டிச் சென்று விட்டனர். நிருபர்களும் இன்னும் சிலரும் பஸ்ஸில் ஏறிச் சென்றோம். நதியிலிறங்குகையில் நாங்களும் இறங்கியிருந் தால் பஸ் சுலபமாகச் சென்றிருக்கும். ஆனால் நாங்கள் இறங்கவில்லை. பஸ் நட்டாற்றில் நின்றுவிட்டது. முழங்கா லளவு தண்ணீர் தானிருந்தது. ஆகையால் இறங்கிப் பஸ் ஸைத் தள்ளினோம். நகரவில்லை. பின்சக்கரம் மணலில் புதைந்துவிட்டது. மணலைப் பறித்தோம். பஸ் இன்னும் அழுந்திவிட்டது. இதற்குள் இருள் கவிந்துவிட்டது. ஆனால் நாங்கள் முயற்சியை விடவில்லை. ஆரம்பத்தில் முழங்கால் ஜலமிருந்தது. இருட்டும் சமயத்தில் இடுப்பளவு ஜலம் வந்து உடை நனைந்து விட்டது. பஸ் கீழே இறங்கிவிட் டதே என்று கவனிக்கும் சமயத்தில் தான் உண்மை விளங் கியது. தாமிரபரணியாற்றில் வெள்ளம் பெருகி வருகிறது என்று ஒரு வழிப்போக்கன் கூறினான். நாங்களும் பஸ்ஸை விட்டுவிட்டுக் கரையை நோக்கி விரைந்தோம். பஸ்ஸும் எங்களை அவமானப் படுத்துவதற்காகவோ என்னவோ

இடம் பெயர்ந்து எங்களைத் தொடர்ந்து வந்தது. விஷயம் தெரியாமல் எங்கள் முயற்சியில் ஈடுபட்டிருந்தால் எங்களில் சிலர் நதிக்கிரையாகியிருப்போம்.

தினசரிப் பத்திரிகைக்கு நிருபர்தான் உயிர்நாடி. நிருபர் தொழில் குமாஸ்தா வேலையல்ல. அதற்கு மேஜை வேண்டும்; சகஜபாவம் வேண்டும் ; சுறுசுறுப்பு வேண்டும்; எல்லாவற்றையும்விட, துணிவு வேண்டும்; சுருக்கெழுத்து ஞானம் மட்டுமிருந்தால் போதாது.

சத்திய சோதனை

‘ காவி ’

பள்ளிக்கூடத்தில் மணி அடித்தது. மாணவிகள் எல்லோரும் பிரார்த்தனை மண்டபத்துக்குப் போய்க்கொண்டிருந்தார்கள். மண்டபத்துக்கு எதிரில் புங்க மரத்தடியில் ஏதோ ஒரு புத்தகத்தை வாசித்துக்கொண்டிருந்த பார்வதி, அருகில் இருந்த சருகின் காம்பை ஒடித்து, அடையாளமாக வைத்து, புத்தகத்தை மூடிக்கொண்டே பிரார்த்தனை மண்டபத்துக்குள் மெதுவாக நடந்தாள். பூகோள உபாத்தியாயினி அம்மாள், இதைக் கவனித்துக் கொண்டிருந்தது பார்வதிக்குத் தெரியாது.

பிரார்த்தனை முடிந்ததும், தத்தம் வகுப்புக்களை நோக்கி மாணவிகள் கலைந்தனர். ஒன்பதாவது வகுப்பில் வாசித்துக் கொண்டிருந்த பார்வதி, சில பெண்களுடன் பேசிக் கொண்டே தன் வகுப்பு அறைக்குள் நுழைந்தாள். சிறிது நேரத்துக்குப்பின் பூகோள உபாத்தியாயினி அம்மாள் வந்து அன்றையப் பாடத்தைத் தொடங்கினார்.

மிஸௌரி மிஸிஸிபியின் நீளம், ஆல்ப்ஸ் மலையின் உயரம், தேம்ஸ் நதியின் ஆழம், அட்லாண்டிக் கடலின் போக்குவரத்து வசதிகள் ஆகிய முக்கியமான விஷயங்களைப்பற்றி ஆசிரியை கற்பித்துக் கொண்டிருந்தார். ஒரு மாணவி மிஸௌரி மிஸிஸிபிக்கு ஆங்கிலத்தில் எழுத்துக் கூட்டிக் கொண்டிருந்தாள். இன்னொரு பெண், ஆல்ப்ஸ் மலை தாயு

மானசுவாமி மலையைப்போல் எத்தனை மடங்கு இருக்குமென்று கற்பனை உலகிலே சஞ்சரித்துக் கொண்டிருந்தாள். ஆனால் பார்வதியின் கண்கள் ஆசிரியையின் முகத்தைக் கவனிக்கவில்லை.

உபாத்தியாயினி அம்மையார் திடீரென்று, "ஏ பார்வதி, என்ன படிக்கிறாய்? நாவலா?" என்று கேட்டார்.

"இல்லை" என்றாள் பார்வதி.

"பின் என்ன அது? அதைக் கொண்டு வா இப்படி."

"காந்திஜி எழுதிய சத்திய சோதனை."

ஆசிரியை இப்பதிலை எதிர்பார்க்கவில்லை. சில நிமிஷநேரம் எதையோ சிந்தித்துக் கொண்டிருந்துவிட்டு, பின் வருமாறு சொன்னார்: "இது பள்ளிக்கூடம், பாடம் நடக்கும்போது, அதுசம்பந்தமற்ற வேறு எதிலும் கவனம் செலுத்தக் கூடாது என்று உனக்குத் தெரியாதா? காந்தியும் காங்கிரசும் அரசியலும், பள்ளிக்கூடத்தில் வாசிக்கும்போது கூடாது. படிப்பு முடிந்தபின், நீ சரோஜினிதேவி ஆவதில் எனக்குத் தடை எதுவும் இல்லை. புத்தகத்தை மூடு. இம்முறை உனக்கு மன்னிப்பு" என்று கடுகடுப்பாகவே பேசினார். பார்வதி புத்தகத்தை மூடிவிட்டாள். அவளுடைய பார்வை ஆசிரியையின் முகத்திலே இருந்தது. சிந்தனை வேறு எங்கேயோ லயித்திருந்தது.

மாலையில் சரித்திரபாடம் நடந்து கொண்டிருந்தது. ஆனால் பார்வதி தனது 'சத்திய சோதனை'யிலேயே ஈடுபட்டிருந்தாள். லார்ட் கிளைவ் பாடம் கற்பிக்கப்பட்டது. திடீரென்று பார்வதி வாய்விட்டுச் சிரித்து விட்டாள். ஆசிரியை "என்ன சிரிப்பு, எழுந்திரு" என்றார்.

"இல்லை; மூன்று தடவை முயன்றும் குறிதப்பாமல் தன்னைச் சுட்டுக்கொள்ளத் தெரியாத கிளைவ், பல துப்பாக்கி வீரர்களைத் தன் கைக்குள் அடக்கி வைத்திருந்த சாமர்த்தியத்தை நினைக்க, சிரிப்பு வந்து விட்டது" என்றாள் பார்வதி.

சரித்திர ஆசிரியையும், ஓர் அசட்டுச் சிரிப்பு சிரித்துவிட்டு, பாடத்தை மேலே நடத்தலானார். மாலை மணி அடித்துப் பள்ளிக்கூடம் கலைந்தது.

பார்வதியின் வருகையை எதிர்நோக்கி, அவளுடைய அண்ணன் முத்துராமன், வீட்டிலேயே காத்துக் கொண்டிருந்தான். அவன் சென்னையிலிருந்து காலையில்தான் திருச்சிக்கு வந்தான். இன்னும் எத்தனையோ விஷயங்களைப் பற்றித் தங்கையிடம் பேசாமல் பாக்கியாயிருந்தது. சென்னையில் நடந்த அனேக நிகழ்ச்சிகளை அவளிடம் சொல்ல வேண்டுமென்று ஆவலோடிருந்தான். பார்வதி சிறு குழந்தையாயிருந்தபோதே தந்தை தவறிவிட்டார். அதன் பிறகு குடும்ப நிர்வாகம் இவனுடைய பொறுப்பில் விழுந்தது. பார்வதிக்கு ஒருவிதமான கவலையும் ஏற்படாமல் அவளை அன்புடன் நடத்தி வந்தான். தங்கையின் புத்திசாலித்தனத்தை நினைத்து நினைத்து முத்துராமன் மனம் பூரிக்கும். பார்வதியும் தன் அண்ணன்மீது அளவற்ற அன்பு வைத்திருந்தாள்.

"அண்ணா அண்ணா" என்று கத்திக்கொண்டே பார்வதி உள்ளே நுழைந்தாள்.

முத்துராமனின் முகம் மலர்ந்தது.

"என்ன, பள்ளிக்கூடம் விட்டு இவ்வளவு சீக்கிரத்தில் வந்துவிட்டாயே. இன்றைக்கு என்ன பாடம் நடந்தது?";

"தலைவேதனைதான் நடந்தது. நான் 'சத்திய சோதனை'யில் 105 பக்கம் படித்தேன். பூகோள பாடத்தில் மிஸௌரி மிஸிஸிபி சொல்லிக் கொடுத்தார்கள். சரித்திர பாடத்தில் லார்ட் கிளைவின் துப்பாக்கிப் பெருமையைச் சொல்லிக் கொடுத்தார்கள். இந்த தலைவேதனைகளின்போது, நான் சத்திய சோதனை படித்துக் கொண்டிருந்தேன்."

"ஏன், இந்தியாவில் ரயில்வே, தபால் ஆபீஸ் ஏற்படுத்திய பெருமைகளையும் ஒளரங்கசீப்பின் குணாதிசயங்களையும் பற்றி இப்போது சொல்லிக் கொடுப்பதில்லையா?"

தாயார், இருவருக்கும் பலகாரமும் காபியும் கொண்டு வந்து வைத்துவிட்டுப் போனார். "ஏன் அண்ணா, நீங்கள் இன்னுமா காப்பி சாப்பிடாமல் இருக்கிறீர்கள்? பட்டணத்தில் உள்ளவர்களுக்குக் காப்பி குடிக்காவிட்டால் தலைவலி வந்துவிடும் என்பார்களே" என்றாள் பார்வதி.

"சென்னையில் காப்பி குடிக்கும் பழக்கம் சற்று அதிகந்தான். காப்பியே குடிக்க முடியாத ஏழை ஜனங்களும் அங்கிருக்கிறார்கள். சரி, சீக்கிரம் புறப்படு. மலைக்கோயிலுக்குப் போய்விட்டு வரலாம்."

"அண்ணா, நீங்கள் போன தடவை வந்திருந்தபோது வெளியில் அழைத்துச் சென்றீர்களல்லவா? அதன் பிறகு நான் ஓரிடத்துக்குக்கூட வெளியில் போனதில்லை. எனக்கு யார் அண்ணா துணை? அம்மாளுக்கு வரவரக் கண் சரியாகத் தெரியவில்லை. வெகுதூரம் நடக்க முடிவதுமில்லை. வீட்டுக் காரியங்களைப் பார்ப்பதற்கே சிரமப்படுகிறார்கள்" என்று பரிதாபத்துடன் கூறினாள் பார்வதி.

"அம்மா, பார்வதியை மலைக்குக் கூட்டிக்கொண்டு போகிறேன்; வீட்டுக்குச் சாமான் ஏதாவது வாங்கவேண்டுமா?" என்று முத்துராமன் கேட்டான்.

"வழியில் காய்கறி, கீரை கிடைத்தால் வாங்கி வா. உனக்குக் கீரை என்ருல் பிரியமாயிற்றே" என்று தாயார் கூறினுள்.

வழி நெடுக, முத்துராமனும் பார்வதியும் எதை எதையெல்லாமோ பேசிக்கொண்டே போனுர்கள். குடும்ப விஷயங்கள் முதல் அரசியல் விஷயங்கள் வரையில், வாய்விட்டு உரக்கச்சப்தமிட்டுப் பேசிக்கொண்டே போனது, தெருவில் சென்றவர்களுக்கு ஓர் ஆச்சரியமாயிருந்தது. முத்துராமனேயும் பார்வதியையும் அறிந்தவர்கள் இவர்களுடைய அன்னியோன்யத்தையும், முத்துராமன் பார்வதிமீது கொண்டிருக்கும் அளவுகடந்த வாஞ்சையையும் கண்டு வழக்கம் போல வியந்தார்கள்.

இருவரும் உச்சிமலைக்கு ஏறினுர்கள். அங்கிருந்து நகரின் நாலா பக்கங்களையும் பார்த்தனர். கொள்ளிடமும் காவேரியும் தெரிந்தன. கிழக்கே, 'ஓயாமாரிச்சுடுகாட்டில்' புகைந்து கொண்டிருந்தது. முத்துராமன் அதையே இரண்டு நிமிஷ நேரம் பார்த்துக் கொண்டிருந்தான். தன் தந்தை தகனம் செய்யப்பட்ட இடம் அதுதான். அவன் ஒவ்வொரு முறையும் உச்சி மலையிலிருந்து, அதைப்பார்த்துவிட்டுப் போவான். "முத்துராமா, பார்வதியின் கண் கலங்காமல் நீதான் பார்த்துக் கொள்ளவேண்டும்" என்று சாகுமுன் தந்தை சொல்லிவிட்டுப் போனதை அவன் இன்றுவரை மறக்கவில்லை. இனியும், தன் உயிர் உள்ள அளவும் பார்வதிக்கு ஒரு கவலையும் வராதபடி பார்த்துக் கொள்ளும்படி கடவுள் தனக்குத் துணை நிற்க வேண்டும் என்பதுதான் அவனுடைய ஒரே பிரார்த்தனையாயிருந்தது.

வீடு திரும்பியதும், தாயார் 'திருஷ்டி' 'சுற்றிப் போட்டாள்.

இரவு வெகுநேரம் பேசிக்கொண்டிருந்த பிறகு, பார்வதி சத்திய சோதனையை எடுத்துப் படிக்க ஆரம்பித்தாள். "அண்ணு, இதில் சிதம்பரம் என்று போட்டிருக்கிறதே, அது யார் ?"

"அவர் என்னுடைய நண்பர். மிகவும் நல்லவர். தஞ்சாவூர் சொந்த ஊர். சென்னையில் நானும் அவரும் இணை பிரியமாட்டோம்."

"ஓகோ, அவருக்குத்தான் இன்று கடிதம் எழுதினீர்களா ?"

"ஆமாம். அவரும் நேற்றிரவு என்னுடன் புறப்பட்டு வந்தார். தஞ்சையில் நல்ல குடும்பத்தில் பிறந்தவர்."

"நல்ல குடும்பம் என்ருல், பணக்கார குடும்பத்தைத் தானே சொல்கிறீர்கள் ?"

"கிடையாது. தன்மையில் நல்ல பழக்க ஒழுக்கமுடைய குடும்பம் என்றே சொல்கிறேன்."

பார்வதி புத்தகத்தில் ஆழ்ந்துவிட்டாள்.

ஒரு வாரம் கழிந்தது. முத்துராமன் சென்னைக்குப் புறப்பட்டான். இனி ஆறு மாதம் கழிந்தால்தான் தன் பள்ளிக்கூடத்தில் விடுமுறை. அதுவரையில் குடும்ப காரியம் எதுவும் தடைப்படாமல் நடக்க, சகல ஏற்பாடுகளையும் செய்துவிட்டிருந்தான். பார்வதிக்கு இந்த ஒரு வாரமும் ஒரே குதூகலமாயிருந்தது. இனி தனக்குச் சிலநாள் வரைக்கும் அண்ணனுடைய பிரிவாற்ருமை இருந்து கொண்டிருக்கும் என்பதை அவள் உணர்ந்தாள்.

சென்னையில் முத்துராமனும் சிதம்பரமும் ஒரே அறையில் வசித்து வந்தனர். சட்டக் கல்லூரியில் படித்துக் கொண்

டிருந்தார்கள். இருவருடைய நட்பும் மிக வேரூன்றியிருந்தது. கொள்கையும், கருத்துக்களும் ஒரே மாதிரியானவை. சிதம்பரத்துக்கும் முத்துராமனுக்கும் இடையே இருந்த சிறு வித்தியாசம் என்னவென்ருல், சிதம்பரம் சிறிது அவசரவாதி. முத்துராமன் சற்று நிதானமான போக்குடையவன். ஆகையால், எதிலும் முத்துராமன் செய்யும் முடிவுதான் இறுதியானதாக ஒப்புக்கொள்ளப்பட்டு வந்தது.

இருவரும் கட்டியிருந்த எதிர்காலக் கோட்டை மிகப் பிரமாண்டமானது. 'சத்தியம் தலைகாக்கும்' என்ற உயர்ந்த தத்துவத்தை அடிப்படையாகக் கொண்டு, அதை நிர்மாணித்திருந்தார்கள். ஒருநாள், "இந்த உலகத்தை மாற்றியமைக்காவிட்டால், இது வசிப்பதற்கு லாயக்கற்றது. மனித சமுதாயம் வரவர இழிந்துகொண்டே போகிறது" என்ருன் சிதம்பரம்.

"ஆமாம். உண்மைக்கும், ஒழுக்கத்துக்கும் நியாயத்துக்கும் இப்போது மதிப்பு குறைந்துகொண்டு போகிறது. மனிதனை மனிதன் நம்பாதிருப்பது ஒரு பெரிய கலையாக வளர்ந்து வருகிறது. பொதுக்கூட்டங்களுக்கும் கலியாணங்களுக்கும் சென்று விட்டுத் திரும்பும்போது, வாசலில் விட்டு வைத்திருந்தபடி செருப்பு அகப்பட்டால், அது அதிர்ஷ்டமாகவும் ஆச்சரியமாகவும்கூட இருக்கிறது. எவன் ஒருவன், யாரைக் கண்டாலும் சந்தேகப்படுகிருனே, அவன் ஆழ்ந்த புத்திசாலியாகக்கூட மதிக்கப்படுகிருன். மனச்சாட்சிக்கு மக்கள் மதிப்புக் கொடுக்க மறுக்கிருர்கள்."

"இதை மாற்ற வழி கிடையாதா?"

"ஏன், சிலர் மாற்றிக்கொண்டுதான் இருக்கிருர்கள். பேராசை, அநீதி ஆகியவற்றில் மக்கள் இப்போது போட்

டிப் போடுவதை மாற்றி, அன்பு தருமம் ஆகிய வழியிலே சமுதாயத்தைத் திருப்பிவிடலாம். உலக மக்கள் எவ்வளவு அன்புடன், அழகாக வாழ்வார்கள் தெரியுமா ?'', என்று பேசிக் கொண்டிருந்தனர். அப்போதுதான் ஒரு தபால் காரன் ஒரு கடிதத்தை 'முத்துராமன்' என்று சொல்லிக் கொடுத்தான்.

முத்துராமன் அதை வாங்கிப் பிரித்து, சிதம்பரத்துக்கும் கேட்கும்படி உரத்துப் படித்தான். அது பார்வதி எழுதின கடிதம். 'சத்திய சோதனை' புத்தகத்தை, தான் வேறு ஒரு பெண்ணுக்கு வாசிக்கக் கொடுப்பதற்காகப் பள்ளிக்கூடத் துக்கு எடுத்துச் சென்றதாயும், பள்ளிக்கூடத்தில் சாப் பாட்டு நேரத்தின்போது அதை யாரோ அபகரித்துக் கொண்டதாயும் தெரிவித்திருந்தாள். முத்துராமன் மனம் இடிந்தவன்போல் காணப்பட்டான்.

"போனல் போகிறது, இது என்ன பிரமாதம்? இப்போது என்ன இருந்தாலும் ஐந்து ரூபாய்க்குமேலிருக்காது. புதி தாக வாங்கிக்கொண்டால் போயிற்று'' என்ருன் சிதம் பரம்.

"அது இல்லை சிதம்பரம். பொய் சொல்லக்கூடாது; திரு டக்கூடாது என்று வற்புறுத்திக் கூறும் புத்தகமே களவாடப்பட்டதை நினைக்க நினைக்க, நாம் எவ்வளவு கீழா கப் போகிருேம் பார்த்தாயா ?'' என்ருன் முத்துராமன்.

ஆறு மாதத்துக்குப் பிறகு முத்துராமனும் சிதம்பரமும் ஊருக்குப் புறப்பட்டனர். திருச்சிக்கு வந்து ஒருநாள் தங்கிவிட்டுப் போகும்படி முத்துராமன் வற்புறுத்தியதற் குச் சிதம்பரம் இணங்கினன். திருச்சியில் பார்வதி ஆவ லோடு முத்துராமனை எதிர்பார்த்துக் கொண்டிருந்தாள். முத்துராமன், நுழையும்போதே, "பார்வதி, சிதம்பர

மும் வந்திருக்கிறார். உன்னிடம்தான் நான் அவரைப் பற்றிச் சொல்லியிருக்கிறேனே " என்று கூறிக்கொண்டே பிரவேசித்தான். பார்வதி சிதம்பரத்தை ஏறிட்டுப் பார்த்தாளோ, என்னவோ, தலையைத் தொங்க விட்டுக் கொண்டு உள்ளே போய்விட்டாள். ஆனால் சிதம்பரம் அவளைப் பார்த்து விட்டான். பிறகு இருவரும் வெளியில் எங்கேயோ போய்விட்டு வந்தனர். முத்துராமன் எவ்வளவோ சொல்லியும், பார்வதி சிதம்பரத்தின் எதிரில் வர மறுத்துவிட்டாள். சிதம்பரம் அன்றிரவு தஞ்சைக்குப் போன பின்புதான், பார்வதியும் முத்துராமனும் அளவளாவிப் பேசத் தொடங்கினார்கள்.

மனிதர் போடும் எல்லாத் திட்டங்களும் கைகூடும் என்பது நிச்சயமில்லை. முத்துராமனுக்குத் திடீரென்று காய்ச்சல் கண்டது. லீவுக்காக வீடு வந்தவன் சென்னைக்குத் திரும்ப முடியவில்லை. "பள்ளிக்கூடம் திறந்திருக்கும், திறந்திருக்கும்; திறந்து ஒரு வாரமாகியிருக்கும்" என்று பிதற்றிக் கொண்டிருந்து கடைசியில் கண் மூடியே விட்டான். சிதம்பரம் சென்னையிலிருந்து இரண்டு கடிதம் எழுதியிருந்தான். அவனுக்குப் பத்து நாட்களுக்குப் பிறகு கீழ்க்கண்ட பதில் தான் கிடைத்தது.

"ஸ்ரீ சிதம்பரத்துக்கு

இந்த உலகத்தில் என் உயிருக்கு உயிராயிருந்த அண்ணா என்னைத் தனியேவிட்டு உயிர் நீத்துவிட்டார். இனி எனக்கு அண்ணா எங்கே கிடைப்பார்கள்? இது கடவுளின் சோதனை.

—பார்வதி"

என்றிருந்தது.

சிதம்பரம் இக்கடிதத்தைப் பார்த்துப் பித்துப் பிடித்தவன் போலாகிவிட்டான். அவன் மனம் குழைந்தது. புத்தி எங்கெங்கோ சென்றது. பள்ளிக்கூடத்துக்கு லீவு போட்டு விட்டு, அவன் திருச்சிக்குப் புறப்பட்டான்.

முத்துராமனின் வீட்டுக்குள் நுழையும்போது, அவன் கண் களிலிருந்து கண்ணீர் பெருகிற்று. "பார்வதி" என்று அவன் சப்தமிட்டான். பார்வதி சமையலறையிலிருந்து வெளியே வந்து சிதம்பரத்தைப் பார்த்தாள். அவளுக்கு எப்படி இருந்ததோ, "அண்ணு, என் அண்ணு, உன்னை நான் எப்போது காண்பேன் ?" என்று அலறினுள்.

"பார்வதி, பயப்படாதே. நான் முத்துராமன் என்றே நினைத்துக்கொள். நான் உன் அண்ணன். முத்துராமனு டைய ஸ்தானத்தில் நான் இருக்கிறேன். அம்மா எங்கே ?" என்று சொல்லிக்கொண்டே சிதம்பரம் உள்ளே நுழைந் தான்.

"உள்ளே இருக்கிருர்கள் அண்ணு !" என்ருள் பார்வதி !

அந்த 'அண்ணு' என்ற சப்தத்திலே சிதம்பரத்தின் உள் ளமே பூரித்தது. அவன் இன்றுவரை அடையாத ஒரு தனி மகிமையை அந்தச் சொல்லிலே உணர்ந்தான்.

கணவனையும் மனைவியையும் பார்த்து, அவர்களுடைய அன்பைப்பற்றி வியப்பதில் விசேஷம் எதுவும் இல்லை. ஒரு பெண் 'அண்ணு' என்று ஓர் ஆடவனை அழைக்கும்போது அந்தச் சொல்லிலே எவ்வளவு அன்பும் உரிமையும் உறுதி யும் கலந்திருக்கின்றன !

பார்வதியின் மேஜைமேல் 'சத்தியசோதனை' கிடந்தது. சிதம்பரம், "இது ஏது புதுப் புத்தகமா ?" என்று கேட் டான்.

"இல்லை அண்ணு, உங்களுடையதுதான். நான் காணுமற் போயிற்று என்று நினைத்திருந்தேன். ஆனால் மறுவாரம் அதை யாரோ பள்ளிக்கூடத்தில் என் மேஜைமீது வைத் திருந்தார்கள். யாரோ எடுத்துப் படித்துவிட்டு, திருப்பி வைத்திருக்கிருர்கள். எனக்குக்கூட ஆச்சரியமாய்த்தா னிருந்தது. காணுமற்போன புத்தகம் திரும்பி வரவா போகிறது என்று நினைத்தேன். ஆனால் இது 'சத்திய சோதனை' ஆயிற்றே. எடுத்தவர் மனத்தையே இது மாற்றி யிருக்கும், அண்ணு" என்ருள்.

சிதம்பரம் நாற்காலியில் உட்கார்ந்து எதையோ சிந்தித் தான். "சத்தியத்தை அடைத்துத் தாளிட்டுவிட்டு, சத்தியத் தின் பேரால் என்னென்னவோ நடக்கிறது. இருந்தாலும் சத்தியத்தை உலகத்தாரால் அழிக்க முடியவில்லை" என்ருன்.

பசி

தி. ஜ. ர.

இரண்டு வரியிலே, அந்தச் செய்தி முடிந்துவிட்டது. ஆனால், அதை நான் கற்பனை செய்துபார்த்தேன். என்ன துயரக் காட்சி அது!

அவன் எத்தனை நாள் பட்டினியோ? எப்படி யெல்லாம் தவித்தானோ? யாரார் வீட்டு வாசலில்போய் நின்றானோ? எவ்வளவு பேர் 'சள்' என்று விழுந்தார்களோ? எவ்வளவு பேர் உதாசீனமாய்ப் பேசினார்களோ? ஒருவாய்ச் சோறு, ஒரே ஒரு கவளம் கிடைக்காமல், அலைந்து அலைந்து கால் ஓய்ந்து போயிருப்பான்.

கடைசியிலே, கலெக்டரின் கச்சேரி வாசலில் வந்துவிழுந்தான். காதடைத்தது; கண் இருண்டது; உயிரும் பறந்தது. முடிந்தது அவன் வாழ்வு - துயரம், துன்பமெல்லாம். சவத்தை அகற்ற வந்தார்கள். கூட்டத்தின் ஒரு மூலையிலிருந்து, ஓர் அலறல் கேட்டது. தலைவிரிகோலமாய் ஓடி வந்தாள் ஒரு பெண். அவள் கையிலே, துணியால் சுற்றிய சுமை ஒன்று இருந்தது. அதை அவள் நடுவே கொணர்ந்து, "இந்தாருங்கள், இதையும் கொண்டுசெல்லுங்கள் உங்கள் மயானத்துக்கு" என்றாள். அது அவள் குழந்தை. அதுவும் சோறில்லாமலே செத்ததுதான்.

இது கதையில்லை; கல்கத்தாவிலே நடந்த ஒரு சம்பவம். வைஸ்ராய் நிர்வாக சபையின் மாஜி அங்கத்தினரான ஸர். ஜகதீச பிரசாதே கூறியுள்ளது.

இதைப் பத்திரிகையிலே படித்துவிட்டு, வீட்டுக்கு வந்தேன்.

"அம்மா, தாயே! ஒருபிடி சோறு போடுங்களேன்" என்று அடுத்த வீட்டு வாசலில் ஒரு குரல் கேட்டது. என் உள்ளம் திடுக்கிட்டது. கல்கத்தாவிலே மாண்ட அவனது ஆவியோ இது என்று எண்ணினேன். திரும்பிப் பாராமல் வீட்டினுள் புகுந்தேன்.

"ஐயோ பாவம்! என்ன கஷ்டம், பாருங்கள்" என்றாள் மனைவி.

"என்ன சொல்லுகிறாய்?"

"ஒன்றுமில்லை, இதோ போகிறான் பாருங்கள், இந்தப் பிச்சைக்காரன் எப்போதும் வருகிறவன்தான். இவன் என்ன செய்தான் தெரியுமா?"

"என்ன செய்தான்?"

"உங்களுக்கு ஞாபகமிருக்குமே? போனவருஷம் ஒரு பிச்சைக்காரன் வந்தான். அவன் கப்பரையில், சோறும் தண்ணீருமாய்ப் போட்டு விட்டேன். 'என்னம்மா, பழையதைப் போட்டு விட்டாயே' என்று சண்டைக்கு வந்தானே....."

"அவனா இவன்?"

"இல்லை. அப்படியெல்லாம் சண்டித்தனம் செய்கிற பிச்சைக்காரர்கள் இப்போது எப்படி மாறி விட்டார்கள்!" என்றாள் அவள்.

"விஷயத்தைச் சொல்."

"இவன் வந்தான். முன்னெல்லாம் வந்தால், சோறு போட்டால் தான் வாங்கிக் கொள்வான். இன்று 'அம்மா, கொஞ்சம் சோற்று நீர் இருந்தால், ஊற்றுங்களேன்' என்றான். 'ஏன், சோறு வேண்டாமா?' என்று கேட்டேன். 'சோறு கேட்கப் பயமாயிருக்குதம்மா. எப்படிக் கேட்போம்? உங்களுக்கே படியளக்கிறார்களே?' என்றான். எனக்கு ரொம்பக் கஷ்டமாயிருந்தது......"

"சரி, சரி, போ" என்று நான் எரிந்து விழுந்தேன். ஏன் எனக்கு எரிச்சல் வந்தது? அவனுக்குக் கஷ்டமாயிருந்தது என் காதிலும் விழ வேண்டுமா? என்றால் அதைச் சகிக்க முடியவில்லை.

பசி! சீ! மனித வாழ்க்கை இவ்வளவுதானா? மனிதனுடைய உன்னதமான வேதாந்தமெங்கே, சாஸ்திரங்களெங்கே, கலைகள் எங்கே? எல்லாம் கவளம் சோற்றுக்குப் பின்னால்தானே? இல்லையென்று வித்தாரம் பேசலாம். இதோ பாருங்கள், கல்கத்தாவிலே என்ன நடக்கிறது? எத்தனையோ வருஷமாய் இணைந்து வாழ்ந்த அண்ணனும் தங்கையும் பிரிகிறார்கள்: தாயும் மகனும் விலகுகிறார்கள்; கணவனும் மனைவியும் கலைகிறார்கள்! ஏன்? ஒரு கவளம் சோற்றைக் காணாமல்! அட தெய்வமே! மனிதனை ஏன் சோற்றால் எடுத்த சுவராகப் படைத்தாய்? பல வருஷங்களுக்கு முன்னே நடந்தது, சொந்த விஷயம்தான். இங்கே ஞாபகம் வருகிறது.

சின்ன வயது. அற்ப விஷயத்துக்கெல்லாம் பிரமாதமான கோபம் வரும் எனக்கு. குடும்ப விஷயங்களையெல்லாம் உங்களுக்கு எதற்காக நான் சொல்லவேண்டும்? கேட்டால், உங்களுக்கும் சலிப்புத்தான் வரும். ஆகையால், அதையெல்லாம் விட்டு, விஷயத்தை மட்டில் சுருக்கமாகச் சொல்லுகிறேன்.

ஒருநாள் வீட்டிலே எனக்குச் சிறிய மனஸ்தாபம் வந்தது. உணவு கொள்ள மறுத்துவிட்டேன். காலை முதல் பட்டினி. தந்தை கெஞ்சுகிறார். கெஞ்சக் கெஞ்ச என் ஆத்திரம் அதிகப்பட்டது; வீம்பும் வலுத்தது. அடியோடு கண்டிப்பாய் உண்ண மறுத்துவிட்டேன்.

அஸ்தமித்தது. படுக்கையில் படுத்தேன்.

"இதென்னடா பிடிவாதம்? நீ மகா புத்திமான். அவள், இவள்" என்றெல்லாம் சொல்லி, மீண்டும் ஒருமுறை நய வார்த்தைகள் கூறிப்பார்த்தார் தந்தை. நான் கேட்கவில்லை. எல்லாரும் படுத்தாயிற்று. விளக்குகள் அணைக்கப்பட்டன. இரவின் மௌன இருள் சூழ்ந்தது. குறட்டைச் சத்தம் கேட்கத் தொடங்கிற்று. அனைவரும் தூங்கிவிட்டார்கள், எனக்கு மட்டும் தூக்கம் வரவேயில்லை.

வயிறு கிள்ளுகிறது; உடல் சோர்கிறது; மனம் சுழல்கிறது. புரண்டு புரண்டு படுத்தேன். எத்தனை புரண்டாலும் பசி தீருமா? எழுந்து, சொம்பு சொம்பாய்த் தண்ணீர் குடித்தேன். ஐயோ! வயிற்றை என்ன குமட்டுக் குமட்டுகிறது! அப்பாடா! படுக்கையில் கிடைகொள்ளவில்லையே!

என்ன யோசனை? நாள்தோறும், படுக்கையிலே என்னென்ன சிந்தனையெல்லாம் எனக்கு எழும்? என் கீதை எங்கே, பட்டினத்தார் பாடல் எங்கே, ஷேக்ஸ்பியர் எங்கே, திரிகோண கணிதமெங்கே? மற்ற இன்பமான நினைவுகளெல்லாம் எங்கே? சுகமான தூக்கந்தான் எங்கே? இன்பக் கனவுகள் - அல்லது பயங்கர சொப்பனங்கள் எங்கே? ஒன்றுமில்லை. ஒரே நினைவு - பசி, இரவெல்லாம் பசி, ஒரே பசிதான்! உலகமே சூன்யமான ஒரு வனாந்தரமாகி விட்டது - என் பசிக்கு முன்னே.

பொழுது விடிந்தது. பல்லை விளக்கினேன். விளக்கினேனா வது! விளக்கியதாக ஒரு பாவனை செய்தேன். யார் உப சாரத்தையும் எதிர்பாராமல் உண்ண உட்கார்ந்துவிட்டேன். வயிறு நிறைந்தபின், கீதா புருஷனின் மோனப் புன்னகையின் உருவெளியைக் கண்டேன். ஷேக்ஸ்பியரின் இன்ப வாசகங்களை உணர்ந்தேன். கணித குதூகலத்தை அடைந்தேன். உலகமே ஆனந்தத் தாண்டவம் புரிந்தது. ஒரு கவளச் சோறு, உலகம் முழுவதுக்குமே பொருள் கொடுத்துவிட்டது. அதன் மந்திரசக்திதான் என்ன!

'தனி ஒருவனுக் குணவில்லை எனில், ஜகத்தினை அழித்திடுவோம்' என்று பாரதி பாடுகிறாரே, ஏன்? அவ்வளவு ஆத்திரப்பட வேண்டிய விஷயந்தான் அது. 'பசியால் வாடும் மனிதனுக்கு முன்னே, சோற்று உருவிலன்றி வேறெவ்வகையிலும் பிரசன்னமாகக் கடவுளே துணியான்' என்று மகாத்மா காந்தி கூறுகிறாரே; அந்தக் கோஷம் அர்த்தமற்றதல்ல. "நாட்டிலே ஒரே ஒரு நாய் பட்டினி கிடந்தாலும், அதற்கு உணவு ஊட்டுவதே என் முழுமதமாகும்' என்று சுவாமி விவேகானந்தர் கூறுவதும் இதையேதான்.

ஆத்மா அழிவற்றதாயிருக்கலாம். கலைகள் நித்திய சௌந்தர்யமா யிருக்கலாம். பிரபஞ்சம் தெய்வத் திருக்கூத்தா யிருக்கலாம். 'நாமார்க்குங் குடியல்லோம், நமனையஞ்சோம்' என்று மனிதன் பாடலாம் ; பாடத்தான் வேண்டும். மரண பயம் மனிதனுக்கு இருக்கக்கூடாது. ஆனால், அவன் சோற்றுக்கில்லாமல் சாவதுமட்டும் கூடாது. சாவதா, ஒரே ஒரு வேளை பசியால் தவிப்பதும் ஆகாது. அது கேவலம், கேவலம் : மனித குலத்துக்கே கேவலம்.

இது வேதகோஷம் : 'அன்னம் பிரானன்.'

கப்பல் பிரயாணம்

ஏ. கே. செட்டியார்

கப்பல் பிரயாணம் என்றதும் பலருக்கு மகிழ்ச்சியுண்டாகும்; சிலருக்கு அளவுகடந்த வெறுப்பு உண்டாகும். கடல் நோய் ஒன்றுமட்டும் இல்லாவிட்டால், கப்பல் பிரயாணத்தைப்போலச் சௌகரியமானது வேறொன்றுமேயில்லை.

பிரயாணம் செய்வதற்குப் புதிய புதிய சாதனங்களையெல்லாம் கண்டுபிடித்து வருகிறார்கள். வேகத்தைமட்டும் முக்கியமாகக் கருதினால், ஆகாய விமானமும் ரயிலுமே சிறந்தவை. ஆனால், சௌகரியத்தை மட்டும் முக்கியமாய்க் கருதினால், கப்பல் பிரயாணத்துக்கு இணையானது வேறெதுவுமில்லை.

ரயிலிலே பிரயாணம் செய்யும்போது, வேகமாக ஓடும் ரயில்களையே நாம் விரும்புகிறோம். கைகாட்டிகளைக் காணும் இடங்களிலெல்லாம் நிற்கும் ரயில்களைக் கண்டால் நமக்கு வெறுப்புண்டாகிறது. ஆனால் கப்பல் ரயிலைப்போல வேகமாய்ச் செல்லாது; மணிக்குப் பத்து மைல் முதல் முப்பது மைல் வரைதான் செல்லும். கப்பலைப் பொறுத்தவரையில் அதன் வேகத்தைவிட, அதன் அளவும் எடையும் தான் முக்கியமானவை. கப்பல் எவ்வளவுக்கெவ்வளவு சிறியதாக இருக்கிறதோ, அவ்வளவுக்கவ்வளவு நமது பிரயாணமும் கஷ்டமாயிருக்கும். கப்பல் பெரிதாக இருந்தால், அதிகமாக ஆடாமல் அசையாமல் சந்தோஷமாய்ப் பிரயாணம் செய்யலாம்.

நமது நாட்டிலே ஒரு மாதம் அல்லது இரண்டு மாதம் விடுமுறை கிடைத்தால்-அதுவும் சம்பளத்தோடு விடுமுறை கிடைத்தால் - சிலர் வெளியூர் சென்று சுகமாய்க் காலங் கழிக்கிறார்கள் அல்லவா ? மேலை நாடுகளிலே சிலர், இவ்வாறு விடுமுறை கிடைத்தால், அதனைக் கப்பல் பிரயாணத்திலேயே பெரும் பகுதியும் செலவிடுவார்கள். அப்படியானால் கப்பல் பிரயாணத்தில் எவ்வளவு இன்பமிருக்க வேண்டும் ?

ஒரு நல்ல கப்பலில் பிரயாணம் செய்தால், மிதக்கும் அரண்மனையொன்றில் இருப்பதாகவே நமக்கு உணர்ச்சி உண்டாகும். ஆயிரக்கணக்கான மக்களுடன், பல நாள் கப்பலில் பிரயாணம் செய்வதால், பலருடன் பழகும் சந்தர்ப்பம் ஏற்படுகிறது. தூய கடற்காற்று ; தூசி என்பதையே பார்க்க முடியாது ; நினைத்தபொழுதெல்லாம் கடல் நீரில் குளிக்கலாம். நீந்தும் தடாகம் வேறு. கப்பலுக்குள்ளேயே மைல் கணக்காக நடக்கலாம். சீட்டாட்டம் முதல் டென்னிஸ் வரை ஆடலாம். பொழுது போவதற்கு ரேடியோ, சினிமா முதலியவை. அவைகளில் விருப்பமில்லாதவர்களுக்குப் புத்தகசாலையும் உண்டு. ஏராளமான மாதப்பத்திரிகைகள், பிரசார புத்தகங்கள் ஒவ்வொரு மாடியிலும் காணப்படும். சில கப்பல்களுக்கு ஆறு மாடிகள் உண்டு. மாடிகளுக்குச் செல்ல மின்சார லிப்டுகளும் உள்ளன.

கப்பலில் முக்கியமானது சாப்பாடு. சாப்பாட்டு விவரங்களை அச்சடித்துக் கொடுப்பார்கள். அதற்கு ஆங்கிலத்தில் 'மெனு' என்று பெயர். சில மெனுக்களைப் படிப்பதற்கே கால்மணி நேரம் ஆகும். இந்த மெனுவில் இல்லாத சாப்பாட்டு வகைகளும், ஆர்டர் கொடுத்தால் கிடைக்கும். எந்த நாட்டு உணவும் தயார் செய்து கொடுப்பார்கள். உதாரணமாக ஒருநாள் சாப்பாட்டைக் கவனியுங்கள். காலையில்

படுக்கையைவிட்டு எழுந்திருக்கும்போதே டீ அல்லது காபி, ரொட்டி, பழம் முதலியன. காலை எட்டரை மணியிலிருந்து ஒன்பதரை மணிக்குள் காலை ஆகாரம். பதினொரு மணிக்கு 'சூப்'பும் ரொட்டியும். பகல் ஒரு மணிக்குச் சாப்பாடு. மாலை நாலு மணிக்கு டீயும் 'கேக்'கும். இரவு ஏழு மணிக்கு இராச் சாப்பாடு. இரவு பத்து மணிக்கு 'சாண்ட்விச்'சும் காபியும். இதில் முக்கியமான மூன்று உணவு சாப்பிடுவதற்கு ஒவ்வொரு முறையும் ஒரு மணி நேரம் ஆகும். இந்தச் சமயங்களில், கப்பல் வாத்தியக் கோஷ்டியார் வாத்தியம் வாசிப்பார்கள். பிரயாணிகள் தண்ணீரை அருந்திக் கெட்டுப்போகாமல் இருப்பதற்காக, குடி வகைகள் நிறைய வைத்திருப்பார்கள்.

கப்பல் குறிப்பிட்ட துறைமுகத்தை அடைவதற்கு முதல் நாள் இரவு பிரிவுபசார விருந்து நடைபெறும். இதில் ஒவ்வொரு பிரயாணியின் மேஜையிலும், காகிதத்தில் சுற்றப்பட்ட வர்ணக்காகிதக் குல்லா ஒன்றிருக்கும். இந்தக் குல்லாக்கள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு மாதிரி விநோதமாயிருக்கும். அத்தனைப் பிரயாணிகளும் தங்கள் மேஜையிலுள்ள வர்ணக் குல்லாவை அணிந்துகொண்டு ஆர்ப்பாட்டம் செய்வார்கள். இதை ஒரு கோமாளிக் கூத்து என்றுதான் கூறவேண்டும். சில பிரயாணிகள் இந்த உற்சாகத்தில் உணவுப் பொருள்களைக் கையி லெடுத்துக்கொண்டு, ஆடிக்கொண்டே சாப்பிடுவார்கள். இவைகளைப் பார்க்கும்பொழுது, பிரயாணிகள் பிரயாணம் செய்வதற்காகச் சாப்பிடுகிறார்களா? அல்லது சாப்பிடு வதற்காகப் பிரயாணம் செய்கிறார்களா? என்ற சந்தேகம் உண்டாகும்.

கப்பல்களிலே பல ரகங்களுண்டு. புகையைக் கக்கும் கரிக் கப்பலையும், நாகரிகமான மோட்டார்க் கப்பலையும் இங்கே

குறிப்பிடவில்லை. ஒன்று முதல் நான்கு வகுப்புக்கள் வரை உள்ள கப்பல்கள் சில. இந்தக் கப்பல்களில் உயர் வகுப்புப் பிரயாணிகள் சிலரை நாம் அடிக்கடிப் பார்க்கலாம்; அவர்களால் நம்மைப் பார்க்க முடியாது. ஏனெனில், அவர்களில் பெரும்பாலோர் ஆகாயத்தைப் பார்த்துத்தான் நடப்பார்கள்.

ஒரே வகுப்புள்ள கப்பல்கள் சில உண்டு. இந்தக் கப்பல்களிலே ஒரே வகுப்பில் நம்பிக்கையுடைய பிரயாணிகளைப் பார்க்கலாம். வகுப்பு வித்தியாசமில்லாததால், இவர்கள் அனைவரும் மனிதத் தன்மையுடன் நடந்துகொள்வார்கள்.

கப்பல்களில் சிறந்தவை அட்லாண்டிக் மகா சமுத்திரத்தில் ஓடும் கப்பல்கள் தான். ஒவ்வொரு நாட்டினரும் போட்டி போட்டுக்கொண்டு, தங்கள் தேசப் பெருமையை நிலைநாட்ட பிரம்மாண்டமான கப்பல்களை ஓட்டுகிறார்கள். இவைகளில் முக்கியமானவை 'குவீன் மேரி', 'நார்மண்டி', 'பிரெமன்', 'ரெக்ஸ்' முதலியவைகளாகும். இக் கப்பல்களில் பெரும்பாலும் லாபம் கிடைப்பதில்லை. லாபம் எல்லாம் சிறிய கப்பல்களில்தான். பேருக்கும் புகழுக்கும் ஆசைப்பட்டே பெரிய கப்பல்களை ஓட்டுகிறார்கள்.

நாள்கணக்காகக் கப்பல்களில் பிரயாணம் செய்தால் உலக சமாசாரங்களே தெரியாமல் போய்விடும் என்று கருத வேண்டாம். உலகச் செய்திகளைச் சேகரித்து, தினந்தோறும் பத்திரிகையாக அச்சடித்துப் பிரயாணிகளுக்கு இலவசமாக வழங்குகிறார்கள். அதிக விவரம் தெரிய விரும்புவோர் ரேடியோ கேட்கிறார்கள்.

கபபல்களில் நாடகம் நடக்கும் என்றால் ஆச்சரியப்படுவீர்கள்! நாடகத்தைப்பற்றியல்ல; நடிகர்களைப்பற்றி! கப்பல்

களில் பலதிறப்பட்டவர்களும் பிரயாணம் செய்வார்கள் அல்லவா? இவர்களில் சிலர் ஒன்றுகூடி ஒரு கமிட்டி நிய மிப்பார்கள். ஒன்றிரண்டு சுடுமூஞ்சிகளைத் தவிர, பெரும் பாலான பிரயாணிகள் இந்த விஷயத்தில் சேர்ந்து உழைப் பார்கள். நாலைந்து நாள் ஒத்திகை நடக்கும். பிறகு நாடகம் நடைபெறும். பிரயாணிகளில் சிலர், நாடகத்தில் சிறப்பாக நடிப்பவர்களுக்குப் பரிசுகளும் வழங்குவார்கள்.

விளையாட்டிலும் அப்படித்தான். ஒவ்வொரு விளையாட் டுக்கும் பந்தயங்கள் நடைபெறும். டெக் டென்னிஸ், பிங் - பாங், நீந்துதல், குறிபார்த்துச் சுடுதல், ஓட்டப் பந்தயம் முதலிய பல விளையாட்டுக்கள். பந்தயங்கள் நடைபெறும் பொழுது ஏராளமான பிரயாணிகள், விளையாடுபவர்களை உற்சாகப்படுத்திக் கொண்டே இருப்பார்கள்.

நடனத்துக்காகவே ஓர் இரவு ஒதுக்கி வைப்பார்கள். மேலை நாட்டினர் ஆடும் சாதாரண டான்ஸுகளைத் தவிர, ஒவ் வொரு நாட்டினரும், தமது நாட்டுக்கென்று தனியாக வுள்ள நாட்டியத்தை ஆடிக் காண்பிப்பார்கள். உதாரண மாக ஹங்கேரிக்காரர்களும், ருமேனியர்களும், போலந்து வாசிகளும், சுவிட்சர்லாந்து குழந்தைகளும் தங்கள் நாட்டு உடையணிந்து ஆடும் நாட்டியங்கள் மிகவும் நன்றாயிருக் கும். கிராமபோன் சங்கீதத்தைப் பின்னணியாகக் கொண்டு சில நாட்டியங்கள் நடைபெறும். நடனக் கலையில் புகழ் பெற்ற யாராவது ஒரு பிரயாணி இருந்துவிட்டால் அன் றிரவு முழுதும் ஏகாதசிதான்.

கப்பலிலே சில சமயம் பிரசங்கங்களும் நடைபெறும். பொது வாக, கலகமூட்டும் அரசியல் விஷயங்களைப் பேசக் கப்ப லதிகாரி அனுமதிக்கமாட்டார்.

யாருக்கும் தீங்கிழைக்காத இலக்கியப் பிரசங்கங்கள் நடைபெறும். பலருக்குப் புரியாத பாஷைகளில் பிரசங்கிகள் சில சமயம் பேசுவார்கள். இந்தப் பிரசங்கங்களைப் பொறுத்த வரை ஒரே ஒரு நன்மை உண்டு: பொழுது போகாத பிரயாணிகள், தாங்கள் பேசாமல், மற்றொருவரைப் பேசச் சொல்லிக் கேட்டுக்கொண்டே யிருக்கலாம்.

ஞாயிறுதோறும் பிரார்த்தனை உண்டு. சில கப்பல்களில் கிறிஸ்துவப் பாதிரிகளைச் சம்பளம் கொடுத்தே வைத்திருக்கிறார்கள். கப்பல்களிலே சில சமயங்களில் கல்யாணங்கள் நடைபெறும்; குழந்தை பிரசவமாகும்; பிறந்த தினங்கள் கொண்டாடப்படும்; சாவுகளும் நேரும். இவைகளிலே சில சடங்குகளுக்குப் பாதிரிகள் அவசியமல்லவா? மதப் பிரசாரம் செய்வதிலே கிறிஸ்துவ மதப் பாதிரிகளுக்கு இணை யாருமேயில்லை. சமுத்திரங்களில் செல்லும் கப்பல்களில் கூடத் தங்கள் பிரசாரத்தை விடாமல் நடத்துகிறார்கள்.

கப்பலில் மற்றொரு வசதியுண்டு. சூரிய உதயத்தையும், அஸ்தமனத்தையும் கண்டுகளிக்கலாம். அதைப்போலவே சந்திரோதயத்தையும் கண்டு மகிழலாம். ஆனால் வாழ்க்கை முழுதும் சூரிய உதயத்தைப் பார்க்கக் கொடுத்து வைக்காதவர்கள், கப்பலிலும் தூங்கத்தான் செய்வார்கள்.

கடல் நீர் பல இடங்களில் பலவிதமாகத் தோன்றும்: கறுப்பாகவும், பச்சையாகவும், நீலமாகவும் தோன்றும். கடலில் துள்ளி விளையாடும் பெரிய சுறா மீன்களையும், கரையோரங்களில் நம்மை வரவேற்க வரும் பட்சிகளையும் பார்த்துக் கொண்டே யிருந்தால், நேரம் போவதே தெரியாது. நள்ளிரவிலே, சந்திரன் ஒளியிலே கப்பலின் மேல்தட்டில் தனிமையாக நின்று கடற்காற்றை அனுபவிப்பதே ஓர் ஆனந்தம். கப்பல் பகல் நேரத்தைவிட இரவு நேரத்தில்

தான் அதிக வேகமாய்ச் செல்லும். கப்பல் எவ்வளவு வேகமாகச் செல்லுகிறதோ அவ்வளவு அதிகமாக ஆட்டம் கொடுக்கும். காற்றும் மழையும் கலந்து வருமானுல், அது ஒன்றே கப்பல் பிரயாணத்தைக் கெடுப்பதற்குப் போதுமானது.

ஒவ்வொரு நாட்டினரும், தங்களுக்கெனத் தனிக் கப்பல்கள் கட்டியிருக்கிறுர்கள். பெரும்பாலும் தங்கள் நாட்டுக் கப்பல்களிலேயே பிரயாணம் செய்கிறுர்கள். ஆனுல் இந்தியர்களாகிய நம்மைப் பொறுத்தவரையில் எந்தக் கப்பலில் பிரயாணம் செய்வது என்று முடிவு கட்டுவது மிகவும் கஷ்டமான காரியம். நாம் சொந்தமாகக் கப்பலோட்டுகிறவரையில், எந்த நாட்டுக் கப்பலில் நம்மைக் குறைவான அவமரியாதையோடு நடத்துகிறுர்களோ, அந்த நாட்டுக் கப்பலில்தான், நாம் பிரயாணம் செய்யவேண்டிய நிலையிலிருக்கிறேம்.

எல்லா விதமான தமிழ்
ஆங்கிலப் புத்தகங்களும்
எங்களிடம் கிடைக்கும்
சக்தி
மாத வெளியீடு
ரூ.6/-
வருடசந்தா
PREMIER
சக்தி காரியாலயம்
டெலிபோன் 4536
தபால்பெட்டி 1361
261. சைனபஜார் – சென்னை
பிராஞ்சு: வடக்கு வெளி வீதி-மதுரை.

உயர்ந்த வைரங்களுக்கு
சிறந்த இடம்
G.N.C.
ஜி.என்.சக்ரபாணி செட்டி & கோ
நெ. 40-41, கீழ ஆவணிமூல வீதி, மதுரை
தந்தி: "ஆடோஸ்பேர்ஸ்"